www.padippakam.com

K. JUDE

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஏப்.05–11,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 251

## சூழ்ச்சி வலை

## அவசரகால நெருக்கடிகள்






படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அவசரகால இரும்புக் கரம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அவசரகாலச் சட்டம்
மிகவும் கொடூரமான
தன் சுயரூபத்தை
காண்பிக்கத் தொடங்கியுள்ளது!

புலிகளுக்கு தடை
பயங்கரவாத எதிர்ப்பு
என்ற போர்வைகளால்கூட
அதன் சுயரூபத்தை
மறைக்க முடியவில்லை!

அதன் இரும்புக் கரங்கள்
தமிழ் மக்களின்
அன்றாட வாழ்க்கையை
அச்சுறுத்த தொடங்கியுள்ளன!

அவசரகால சட்டத்தின்
அதிகாரங்களைப் பயன்படுத்தி
தமிழ் மக்கள்மீது
பாரிய அழுத்தங்கள்
கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன!

'இம் என்றால் சிறைவாசம்
ஏன் என்றால் வனவாசம்'
என்ற கட்டத்திற்குள்
தலைநகரில் தமிழ் மக்கள்
நிலை மாறியுள்ளது!

பல்லாண்டுகாலம்
கொழும்பில் குடியிருந்து
அனைவராலும் அறியப்பட்ட
அனைவராலும் மதிக்கப்பட்ட
ஆலயக் குருக்கள்மார்கூட
கைது செய்யப்பட்டனர்!

தவிர்க்க முடியாமல்
அடையாளம் தெரியாமல்
நடந்த கைது என்று
காரணம் கூறவும் முடியாது!

நாட்டின் எந்தப் பகுதியை
சேர்ந்தவர்கள் என்றாலும்
தமிழர்களாக இருந்தால்
கைது செய்யப்படலாம்!

பொலிசார் தாமதித்தால்கூட
இராணுவத்தினர்
வீடு வீடாகச் சென்று
கைது செய்து
பொலிசாரிடம் ஒப்படைக்கிறார்கள்!

அவசரகால சட்ட விதிகள்
கட்டற்ற அதிகாரங்களை
சிருடையினரிடமும்
அள்ளிக் கொடுத்துள்ளன!

நாடாளுமன்றத்தில்
ஐ.தே.கட்சிகூட
அவசரகால சட்டத்தை
எதிர்த்து வாக்களிக்கிறது!

இந்நிலையில், நாடாளுமன்றத்தில்
தமிழ்க் கட்சிகள்
ஒன்றுபட்டு நின்றால்
மாதா மாதம்
அவசர கால சட்டப்
பிரேரணையை
நிறைவேற்ற முடியாமல் போகும்!

இ.தொ.கா,
மலையக மக்கள் முன்னணி
போன்ற கட்சிகளும்
ஒதுங்கி இருக்க முடியாது!

மலையகத் தமிழர்களும்
அவசர கால சட்டத்தால்
அவதிக்கு உள்ளாகின்றனர்!

அமைச்சர் பிரதியமைச்சர்
பதவிகளில் அமர்ந்தபடி
எதிர்த்து வாக்களிப்பது
எப்படி என கேட்கலாம்!

ஆதரித்தாவது
வாக்களிக்காமல் விடலாமே!

வடக்கு-கிழக்கு
மலையக தமிழ்க் கட்சிகள்
ஒன்றுபட வேண்டிய
தக்க தருணம் இதுதான்!

உதட்டளவில்
ஐக்கியம் பேசுவது
ஏட்டுச் சுரைக்காய் போன்றது!

தமிழ் மக்கள் அனைவரும்
பொதுவாக எதிர்நோக்கும்
அவசரகால சட்ட அழுத்தத்தை
எதிர்கொள்வதில்
ஒன்றுபட்டுக் காட்டட்டும்!

வடக்கு-கிழக்கு தமிழர்
மலையகத் தமிழர்
கொழும்பு வாழ் தமிழர்கள்
என்ற பேதம் இல்லாமல்
அவசரகாலச் சட்டத்தின்
இரும்புக் கரங்கள்
எங்கெங்கும், எவர்மீதும்
நீளும் தருணம் இது!

தேவையானது;
வெற்று அறிக்கைகளும்
வெறும் உரைகளுமல்ல!
ஆக்கபூர்வமான செயல்தான்
இன்று தேவை!
பேச்சுக்கள்போதும்
புளித்துவிட்டன.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### சத்சங்கத்தின் ஒப்பற்ற மகிமை



மக்கள் எப்படிப்பட்டவர்களாயினும் அனைவரின் இதயத்திலும் இறைவன் உறைகின்றான் என்பது உண்மை. ஆனால் சாதுக்களிடமே தெய்வத்தின பிரகாசம் ஒளிவிட்டுப் பெருமளவில் பிரகாசிக்கிறது. நெருப்புக் குவியலில் எறியப்படும் பொருள் நெருப்பு மயமாவதைப் போல் அனுபூதிமான்களாகிய சாதுக்களின் தொடர்பு தீயவர்களையும் எல்லாக் குற்றங்களிலிருந்தும் விடுவித்து மேன்மையுறச் செய்கிறது.

ஒருவர் தெரிந்து குடித்தாலும் தெரியாது குடித்தாலும் பால் அவரது உடலுக்கு நன்மையே செய்கிறது. அதேபோல் சத்சங்கத்தை நாமாகத் தெரிந்து நாடினாலும் சரி, தெரியாது நமக்கு வாய்த்தாலும் சரி அதனால் நமக்கு ஏற்படுவது நற்பயனே. தெரிந்து சிரத்தையோடு நாடும்போது அதனுடைய பலன் ஒருவித ஆற்றலோடு நம்மைச் சேருகிறது.

சத்சங்கம், அனுபூதிமான்கள் எழுதிய நூல்களைப் படிப்பது, ஞான சாதனம் கொண்ட தவவாழ்க்கை ஆகிய இம்மூன்றும் நாம் இம்மையில் சேர்க்கக்கூடிய செல்வங்களாகும். இவைதான் ஆன்மாவை ஈடேற்றும் ஒரே வழியாகும்.

தொகுப்பு: திருமதி பா. சிதம்பரநாதக் குருக்கள், சிலாபம்.

### கணவரின் கடமைகள்

பெண்கள்- ஆண்களாகிய உங்களின் ஆடைகளாகவும், ஆண்களாகிய நீங்கள் பெண்களின் ஆடைகளாகவும் இருக்கிறீர்கள். (அல் குர் ஆன்) ஒரு சமயம் நபி (ஸல்) அவர்களிடத்தே "சஹாபிகள் யாரசூலல்லாஹ்! எந்த முஹ்மினுடைய ஈமான் நிறைவானது?" என்று கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள்: "எவர் தனது மனைவியையும் பிள்ளைகளையும் பராமரிப்புச் செய்து அவர்களுடன் அன்பான வார்த்தைகளைப் பேசி அழகாகப் பழகிவருகிறாரோ அவருடைய ஈமானே சிறந்ததாகும்!" எனக் கூறினார்கள். (அல்-ஹதீஸ்) "நீங்கள் உங்கள் மனைவிகளுக்கு நற்செயல்களைக் கொண்டு உபதேசம் செய்யுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களின் ஆதிக்கத்தில் அகப்பட்டவர்களாகவும், அவர்களை உங்களுக்கு உரிமை உள்ளவர்களாகவும் ஆக்கிக்கொண்டீர்கள். அவர்களின் அகங்களை அல்லாஹ் விதித்த முறையில் ஹலாலாக்கிக் கொண்டீர்கள். பணங்களையும் இதர பொருள்களையும் நீங்கள் சரியாக முறைப்படி கொடுத்து வாருங்கள். அல்லாஹ் உங்களின் ரிஸ்கையும் (இரணத்தையும்) வாழ் நாளையும் அதிகப்படுத்துவான். நீங்கள் உங்கள் மனைவி மக்களிடம் எப்படி நடந்து கொண்டீர்களோ அது போலவே அல்லாஹ் உங்களிடம் நடந்து கொள்கிறான்." (அல்-ஹதீஸ்).

ஆதாரம்: தித்திக்கும் அறிவமுதம்
தொகுப்பு: லை. எம்.தாஹிர்கரீம், கல்முனை-6.

## கவிதைப் போட்டி இல. 248

பரிசுக்குரிய கவிதை

### புலி வலை

புலியென வலை
விரித்தன
வெள்ளை வேன்கள்!
மீனென வலை
விரித்தோம்
மிதந்தன பிணங்கள்!

மா.சுதாகர்-தெஹிவளை.



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### அரங்கேற்றம்

கண்டெடுத்த
புதையலை
எந்த ஆட்சியாளரின்
பட்டியலில் சேர்ப்பது?

வீரசிங்கம் ஸ்ரீதரன்- மல்லிகைத்தீவு.

### ஆதரிப்பார் யாருளர்?

காணி கழனி ஏது மில்லை;
குளக் கரையும் சொந்த மில்லை;
மீனு மில்லை இறாலு மில்லை;
மகிழ்ந் தாட நேயம் இல்லை-
ஆராரோ ஆரிரரோ ஆரிவரோ!

செ.அக்கீல் தெஹிவளை.

### மீள்வரோ?

ஆற்றிலே விழுந்திட்டால்
அள்ளியே எடுத்திடலாம்!
நாட்டிலே மறைந்திட்டால்
மீட்டிட வழியுண்டோ?
'கோட்'டிலே கூறியும் பயனில்லை;
அனைத்தும்
காற்றிலே கரைந்த
கற்பூரமாகுமே!

எம்.எஸ்.புகாரி-சாய்ந்தமருது-11.

### பொதியின் உள்ளுடல்

தரையில் கிடைக்கவில்லை;
காற்றிலும் காணவில்லை!
வலைபோட்டு தேடு
நீரில் கிடைக்குமா?

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல.251



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 11.04.1998 படப்பிடிப்பு: கொட்டராமுல்லை ஃபாருக்

முகவரி: கவிதைப் போட்டி இல.251, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### சனத்தொகை

மீன் வலையில்கூட
மீன் அல்ல...
மனிதன்...!

நாஸ் இஸ்மயில்-அக்குறணை.

### பகிடிவதை

பகிடி வதைகளில்
இதுவும் ஒருவகையோ?

நீராவியூர் என்.கே.எம்.சொலமன்-தெஹிவளை.

### அகதி நிலை

தஞ்சமென கடலில்
புகுந்தவன்
பஞ்சமென வந்த
கைகளுக்குள்....!

செல்வி.பர்ஹானா ரசாக்-இறந்தோட்டை.



## வாசக(ர்)சாலை

### பிள்ளையையும் 'கிள்ளி'

அன்புள்ள முரசுக்கு:

அரசுக்கும் ஆதரவு வழங்கிக்கொண்டு, பாராளுமன்றத்திலும் அரசுக்கு முண்டுகொடுத்து நின்றபடி, காரசாரமாக உரையாற்றுவதும், கண்டனங்கள் தெரிவிப்பதும் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிக்கும்' செயல் என்று தமிழ்க் கட்சிகளுக்கு குட்டு வைத்திருந்தார் இராஜதந்திரி. சபாஷ்! அதைத்தான் மக்களே சொல்கிறார்கள்.

சி. ஆனந்தராசா, யாழ்ப்பாணம்.

### விரட்டுகிறார்கள்

முரசே:

பாதுகாப்புப் படைகள் நினைத்தபோதெல்லாம் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்கின்றனர். திருமலையில் தமிழ்க் கிராமங்களில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்கை பிரிக்க, "கிழக்கில் வாக்கெடுப்பு நடத்தியே தீருவோம்!" என்கிறது அரசு. கிழக்கில் இருந்து தமிழர்களை விரட்டிவிட்டால், வாக்கெடுப்பே இல்லாமல் பிரித்து விடலாம்தானே? அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள்!

ஏ.வன்னியசிங்கம், திருமலை.

### இப்போதுமா ஆதரவு

ஆளும் கட்சியின் கிளைகளாக மாறிவிட்டன ஆறு தமிழ்க் கட்சிகளும். தூங்குகிறவர்களை தட்டி எழுப்பலாம். தூங்குவது போன்று நடிப்பவர்களை தட்டி எழுப்ப முடியாது. திருவிழாவுக்கு கடை விரிப்பவர்கள் போன்று, இன்றைய காலத்தின் அவலங்களை அரசியல் மூலதனமாக்கி பிழைப்பு நடத்த நினைக்கிறார்கள். இல்லாவிட்டால் தலைநகர விடுதிகளில் இருந்து தமிழர்களை விரட்டுவதில் ஆரம்பித்து, திருமலை தமிழ்க் கிராமங்களில் இருந்து விரட்டுமளவுக்கு அட்டூழியம் வளர்ந்துள்ள போதுகூட, அரசுக்கு ஆதரவாக கையுயர்த்த எப்படி மனம் வரும்? இவர்களுக்கு வாக்களித்த மக்கள் இப்போதாவது கண் திறப்பார்களா?

கே.புவனன், மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

### தடைச் சட்டம்

"புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்" என்று தமிழ்க் கட்சிகள் சில கூறுவது தமிழ் மக்களை ஏய்க்கும் விளையாட்டுத்தான். 'புலிகள் தடை' என்ற பெயரில், தமிழ் மக்களை ஒடுக்கும் விதமான சட்டத்தை அவசரகால விதிகளின் கீழ் கொண்டுவந்துள்ளனர். விசாரணையே இன்றி உள்ளேபோட்டு பூட்டிவைக்குமளவுக்கு அதிகாரங்கள் உள்ள சட்டமே இதுவாகும். இதனை தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூட கண்டிக்கவே இல்லையே? மக்களை முட்டாள்களாக்கப் பார்க்கிறார்களா?

ஆ.இந்திராணி, மட்டக்களப்பு.

### 87 வாரங்கள்

'பூலான் தேவி' மறக்க முடியாத தொடர். 87 வாரங்களும் எப்படி கழிந்தன என்றே தெரியவில்லை. விறுவிறுப்புக் குறையாமல் கடைசிவரை கதை தந்த ரசிகனுக்கு பாராட்டுக்கள்.

எம்.உசேன், திருமலை.

✉ ✍

இத்தனை விரைவாக ஏன் நிறுத்திவிட்டீர் ரசிகனே! பூலானைப் பிரிந்தது, நம்மில் ஒருத்தியையே பிரிந்தது போலன்றோ கவலை தருகிறது. ரசிகனின் அடுத்த தொடர் 'இடி அமீன்' என்றதும் கவலையில் சில கிலோக்கள் குறைந்தன.

திருமதி கா.ரங்கநாயகி, வவுனியா.

✉ ✍

ரசிகனின் அசத்தலான தொடர்களில், 'கார்லோஸ்' மிரட்டினான். பூலான் கலக்கினாள். 'இடி' அமீன் என்ன பண்ணப்போகிறாரோ? கார்லோஸ் வில்லனா, கதாநாயகனா என்று கேட்டிருந்தார் ரசிகன். இடி அமீன் யார்? வில்லனா, கதாநாயகனா?

பி.ஜோதிகா, மன்னார்.

✉ ✍

யப்பாடா 87! வாரங்கள் பூலான் எங்களில் ஒருத்தியாக வாழ்ந்து, பிரமிக்கச் செய்துவிட்டுப் பிரிந்து போனார். புகைப்படங்களோடு கடைசி அத்தியாயங்களை பின்னிவிட்டார் ரசிகன்.

மா.சங்கரதாஸ், நீர்கொழும்பு.

✉ ✍

'திருமறை தரும் பொது நெறி-1' முரசில் வெளிவருதல் கண்டு மிக்க மகிழ்வுற்றோம். இராஜகுமாரனின் தமிழ் நடையில் சிறப்பாக உள்ளது. நம் வீட்டில் அனைவரும் விரும்பிப் படிக்கின்றனர்.

என்.அலோசியஸ், புத்தளம்.

✉ ✍

முரசுக்கு எம் மதமும் சம்பந்தமே என்பதை புரிந்து கொண்டோம். ஆன்மீகப் பகுதியில் 'இந்து' சிந்தனைக்கு இடமில்லையே என்ற வருத்தம் இருந்தது. மகாபாரதம், இராமாயணம் போன்றவை இடம்பெற்றதால்தான் தவிர்க்கப்பட்டது என்பதை தற்போது புரிந்து கொண்டோம். இராஜகுமாரனின் 'திருமறை தரும் பொதுநெறி' அற்புதமாக ஆரம்பித்துள்ளது.

ஆர்.சிவபாலன், கொழும்பு-09.

✉ ✍

'நந்தினி 440 வோல்ட்'- கைகொடுங்கள் ராஜேஸ்குமார். வாரா வாரம் திக்.திக். முரசு தரும் தொடர்புகள் சோடைபோகாது என்பது பொய்க்கவில்லை. அடுத்த வாரம் விரைவில் வராதா என ஏங்க வைக்கும் தொடர்.

எல்.குகநாதன், இலண்டன்.

உனது வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் பல்லாயிரக் கணக்கான விழிகளில் எனது விழிகளும் உண்டு. பார்க்கப் பார்க்கத் தூண்டும் அம்சங்களில் 'மேக்கப் புன்னகை' எனது மனதைக் கவர்ந்தது.

எஸ்.சிவராசா, திருகோணமலை.

✉ ✍

ப்ரிய முரசே!

நீ சுமந்து வரும் அம்சங்கள் பலே! 247 வது முரசில்தான் நயக்கத்தக்கதாய் ஒரு இலக்கியம் தந்தார் ரசிகன், 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' தரும் புவனாவுக்கு நன்றி. (ரசிகன் பாணியில் எழுத முற்பட்டு பின் கைவிட்ட புவனாவுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி!

ஷர்பா.ஃ.நீஸா, மாத்தளை.

✉ ✍

தொடர்ந்து வெளியான கொள்ளை ராணி 'பூலான் தேவி' நிறைவு கவலைக்குரியதாய் உள்ளது. இனிமையான தொடர் தரும் ரசிகனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

பி.ரேணுகா, பூனாகல.

✉ ✍

உயிர் முரசே!

வாக்காளர்களின் முதுகில் அரசியல்வாதிகள் சவாரி செய்வதைப்போல் சிறிய நாடுகளின் மீது சவாரி செய்ய நினைக்கின்றது அமெரிக்கா. தன்னை சர்வதேச பொலிஸ்காரன் என்று காட்டிக் கொள்ள விரும்பும் அமெரிக்காவிற்கு சரியான நெத்தியடி கொடுத்துள்ளார் சதாம் உசேன். அவரின் உறுதிக்கு எனது வாழ்த்துக்கள். அத்துடன் சதாம் உசேனை சிறந்த மனிதராகக் கணித்த முரசிற்கு எனது பாராட்டுக்கள்!

இ. லலீந்திரன், எல்லைவீதி, செங்கலடி.

✉ ✍

அன்பின் முரசுக்கு!

"இராமாயணம்" நிறைவுரையில் இராஜகுமாரன் அசத்தியே விட்டார். அவருக்கு எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இதனைத் தொடராக கொண்டுவந்த என் முரசுக்கு நன்றிகள் பல!

செல்வன் ஏ.சி.சமீம், ஏறாவூர்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# "தந்திரமான ஒப்புதல் வாக்குமூலம்"

## ஜனாதிபதியின் நிலைப்பாடுமீது புலிகள் சாடல்!

தமிழ் மக்களுக்கு பிரச்சனை உண்டு என்று ஜனாதிபதி சந்திரிக்கா கூறிவருவது தமிழரை ஒடுக்குவதற்கான மேலதிக வளத்தையும், பலத்தையும் பெறும் முயற்சி என்று விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சமீபத்தில் வன்னியில் வெளியான விடுதலைப்புலிகள் பத்திரிகையில் மேற்கண்டவாறு புலிகள் தெரிவித்துள்ளனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப்போது எம் முன்னுள்ள பிரச்சனை என்னவெனில், தமிழ் மக்களுக்கு பிரச்சனை உண்டு என்று ஒப்புக்கொள்வதல்ல. தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு தேசிய இனப் பிரச்சனை என்பதை ஏற்றுக் கொள்வதும், தேசிய இன அடிப்படையில் அவர்களது அபிலாசைகளை அணுகவேண்டியதும்தான்.

தமிழ் மக்களுக்கு பல குறைகள் உண்டு. மொழிப் பிரச்சனை, கல்விப் பிரச்சனை, வேலை வாய்ப்புப் பிரச்சனை மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சனை, நிர்வாகப் பிரச்சனை, மனித உரிமைப் பிரச்சனை என்று பலவாறாகக் கூறி, தமிழ் மக்கள்மீது இரக்கப்படுவதுடன், மேலும் ஒருபடி மேலே சென்று கடந்த கால ஆட்சியாளர் விட்ட தவறுகள்தான் இதற்கெல்லாம் காரணம் என்று 'பாவ மன்னிப்பும்' கோருகின்றனர்.

உண்மையில் இத்தகைய ஒப்புதல் வாக்குமூலமானது உண்மையான பிரச்சனையை மழுங்கடிப்பதற்கும், திசை திருப்புவதற்கும், மேலும் தமிழ் மக்களை ஒடுக்குவதற்குமான வழிமுறைதான்.

### தேசியப் பிரச்சனை

தமிழ் மக்களின் பிரச்சனை ஒரு சட்டப் பிரச்சனையல்ல. அது ஒரு மொழிப் பிரச்சனையல்ல. அது ஒரு நிர்வாகப் பிரச்சனையல்ல. அது ஒரு அதிகாரப் பகிர்வுப் பிரச்சனையுமல்ல. அது ஒரு தேசிய இனப் பிரச்சனை.

குறித்த தேசிய இனத்தின் பெயராலான தேசிய வாழ்வு பற்றிய பிரச்சனை தேசிய இனக் கௌரவம் பற்றிய பிரச்சனை. இதில் சமாதானம் என்பது சண்டையின்மையல்ல, தேசிய இன கௌரவத்தையும், வாழ்வையும் நிலைநிறுத்தல் என்பதுதான். அதுதான் உண்மையான சமாதானமாகும்.

தேசிய இனமென்றால் அதற்கென ஒரு தேசிய தாயகம் உண்டு. அதற்கென தேசியத் தனித்துவம் உண்டு. அத் தனித்துவத்திற்கு ஏற்ப தனித்துவமான தீர்வு உண்டு.

அத்தகைய தனித்துவத்தை மறுத்து, இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்குமான ஒரு பொதுப் பிரச்சனையாகக் குழப்பி, பிரச்சனையின் மையத்தை சிதைத்து, மாகாண அதிகார பரவாக்கல் தீர்வை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

எனவே தேசிய இன அபிலாசை என்ற மையத்தை ஏற்காமல், தமிழருக்கு பிரச்சனை உண்டு' என்று பத்தையடி கொத்தையடியாக சொல்வது உண்மையான பிரச்சனையை கைதவறவிடும் நடவடிக்கையாகும். அது மட்டுமல்லாமல் சந்திரிக்கா அரசாங்கம் தன்னை ஒரு நியாயமான அரசாங்கம் எனக்காட்ட எடுக்கும் நடவடிக்கையாகவும் உள்ளது.

### தேவை என்ன?

இப்போது தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவது இந்தப் பொய்யானதும், போலியானதும், பகட்டானதும், ஏமாற்றுகரமானதுமான சட்ட பண்டித விளக்கங்களும், போதனைகளுமல்ல. இரத்தமும் சதையுமான பிரச்சனைக்கு, இரத்தமும் தசையுமான தீர்வுதான்.

தமிழருக்கு பிரச்சனை உண்டு என்று சொல்வதும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதும், பாவமன்னிப்புக் கோருவதும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவை நியாயமானவர், அனுதாபத்துக்குரியவர் என்று காட்ட உதவுமேதவிர தமிழருக்கு எவ்வகையிலும் உதவப்போவதில்லை.

இத்தகைய ஒப்புதல் வாக்கு மூலங்களதும், பாவமன்னிப்புக்களதும் விளைவை விளங்கிக் கொள்ள, தமிழ் மக்களுக்கு அகராதிகள் தேவையில்லை. நடைமுறை வாழ்க்கை போதும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## யாழில் பாரிய மோதல்கள்– சேத விபரங்கள் இரகசியம்

யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் சமீபத்தில் பாரிய மோதல்கள் நடைபெற்றுள்ளன. 29.03.98 அன்று அதிகாலை 2.45 மணியளவில் நாவற்குழிக்கு சமீபமாகவுள்ள மறவன்புலவு பகுதியில் பாரிய மோதல் ஒன்று நடைபெற்றது.

புலிகளுக்கும், படையினருக்கும் இடையே நடைபெற்ற இம் மோதலில் நான்கு புலிகள் பலியானதாக படையினர் கூறியுள்ளனர். ஆனால் தமது தரப்பு சேத விபரங்களை வெளியிடவில்லை. ஆனால் சண்டை நடைபெற்ற பகுதியில் ஹெலி ஒன்று இறங்கி சென்றது.

பலியான மற்றும் காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்லும் அவசியம் இருந்தமையாலேயே ஹெலி அங்கு இறங்கிச் சென்றது என்று ஊகிக்கப்படுகிறது.

இதேவேளை நாகர் கோவில் பகுதியிலும் பாரிய மோதல் இடம்பெற்றுள்ளது. புலிகளின் அணிகளை தாக்க விரைந்த படையணிகளை புலிகள் தடுத்து நிறுத்தி சண்டையிட்டுள்ளனர். படையினருக்கு உதவச் சென்ற ஹெலிமீதும் துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாகத் தெரிகிறது.

பாரிய மோதல்களில் ஈடுபடுமளவுக்கு புலிகளின் அணிகள் யாழ் குடாநாட்டுக்குள் இறங்கியுள்ளன என்பதையே இம் மோதல்கள் காட்டுகின்றன. யாழ் படைத் தலைமையினர் தமது தரப்பு இழப்பு விபரங்களை மிகவும் தந்திரமாக மறைத்து வருகின்றனர். அவர்கள் கூறும் தகவல்களுக்கு மேலதிகமாக அறிய முடியாதுள்ளது.

யாழில் படைத்தரப்பில் அடிக்கடி சேதங்கள், உயிரிழப்புக்கள் ஏற்படுவதாக வெளியே தெரிவது நல்லதல்ல என்று நினைக்கக்கூடும்.

ஆனால் யாழில் தாக்குதல்கள் மேலும் தீவிரமாகும் அறிகுறி தெரிவதுடன், தமிழ்க் கட்சிகள் மற்றும் சில உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள்மீதும் புலிகளின் கவனம் சென்றுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

## தமிழ்க் கட்சிகள் முகத்தில் கரி!

## தாமாக குரல்கொடுக்கும் மக்கள்

கொழும்பு பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக நீதியமைச்சர் ஒரு மாநாடு நடத்த உள்ளதாகவும், அதில் தமிழ்க் கட்சிகள் பங்குகொள்ளும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கொழும்பு பாதுகாப்பு கெடுபிடிகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளையும் மீறி தமிழ் இந்து அமைப்புக்கள் குரல் கொடுக்க ஆரம்பித்தன.

இந்திய அரசுக்கே நேரடியாக மகஜர் அனுப்பியதுடன், இலங்கை அரசில் தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் அந்த அமைப்புக்கள் தம் மகஜரில் தெரிவித்திருந்தன.

தமிழ்க் கட்சிகள் தமது கைகளுக்குள் இருப்பதால், இப் பிரச்சனைகள் இந்த நாட்டு எல்லையைத் தாண்டாது எனக் கருதிவந்த அரசுக்கு இது ஒரு அதிர்ச்சிதான்.

கொழும்பு உட்பட நாடெங்கும் அதிகரித்துவரும் பாதுகாப்பு கெடுபிடிகளை நிறுத்த முடியாத நிலையிலும், அரசுக்கு கொடுத்து வரும் ஆதரவையும் தமிழ் கட்சிகள் விலக்கவில்லை.

இந்நிலையில் தமிழ் இந்து அமைப்புக்கள் தாமாகவே மேற்கொண்ட முடிவுகளும், இந்திய அரசுக்கு அனுப்பிய மகஜரும் தமிழ் கட்சிகளது முகங்களில் கரி பூசுவதாக அமைந்துள்ளதுடன், இக் கட்சிகள் இன்றைய காலகட்டத்தில் தமக்குரிய கடமைகளில் இருந்து தவறியுள்ளதையும் பறைசாற்றுவதாக கூறப்படுகிறது.

பாதுகாப்பு கெடுபிடிகள் உச்சகட்டத்தை அடைந்துள்ள நிலையிலும் வேடிக்கை பார்த்துவரும் தமிழ்க் கட்சிகள், அடுத்து வரும் தேர்தல்கள் பற்றிய கவலையில் ஆழ்ந்துள்ளன.

கூட்டணி சுறுசுறுப்பாக யாழில் செயற்பட ஆரம்பித்துள்ளதாலும், சமீபத்திய யாழ் உள்ளூராட்சி தேர்தல் முடிவினாலும் அதிர்ச்சியடைந்துள்ள தமிழ்க் கட்சிகள் தேர்தல் வியூகத்திற்கான ஐக்கியம் பற்றி ஆழமாக சிந்தித்து வருகின்றன. ■

## தமிழ்க் கிராமத்தவர் வெளியேற்றம்

## பின்னணியில் நிற்கும் அதிகாரிகள்

திருமலை மாவட்டத்தில் உப்பாறு, இத்திக்குளம் போன்ற பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு இரண்டு வாரங்களாகிவிட்டன. இதுவரை எவ்வித பரிகாரமும் செய்யப்படவில்லை.

இராணுவ நடவடிக்கைக்காக அக் குடும்பங்களை வெளியேற்றியதாக கூறப்பட்ட காரணம் உண்மையல்ல என்று தெரிகிறது.

கிண்ணியாவில் உள்ள முஸ்லிம் அதிகாரிகள் சிலரதும், அரசியல்வாதிகள் சிலரதும் தூண்டுதல் காரணமாக, படையினரது உதவியுடன் தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதாக புகார்கள் கூறப்பட்டுள்ளன.

உப்பாற்றில் 44 தமிழ்க் குடும்பங்களும், 11 முஸ்லிம் குடும்பங்களும் இருந்தன. ஆனால் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்போது முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை 61 என்று கிண்ணியா பிரதேச செயலாளர் கணக்குக் கூறியுள்ளாராம். உப்பாற்றில் மீள் குடியேற்றம் நடக்கும்போது விகிதாசாரத்தை மாற்றும் திட்டமே இது என்று கூறப்படுகிறது.

தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் கசப்புணர்வுகளையும், பிரிவுகளையும் தோற்றுவிக்கும் சதியே இது என்று ஒற்றுமையில் நாட்டம் கொண்ட இரு சமூகத்தை சேர்ந்த பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உப்பாற்று மக்கள் விட்டு வந்த கால்நடைகளை மீட்டுத்தரக்கூட திருமலை அரச சார்பு தமிழ் மாவட்ட எம்.பி. இரா.சம்பந்தனால் முடியவில்லையே என்றும் மக்கள் அங்கலாய்க்கின்றனர். சம்பவம் நடந்தவுடன் வழங்கம்போல் அரசியல்வாதிகள் அறிக்கை விட்டனர். பின்னர் மறந்தே விட்டனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை தமிழ்க் கிராமங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடத்தப்படுமானால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று திருமலை மாவட்ட புலிகள் கூறியுள்ளனராம்.

'உப்பாறு கிராமப் பக்கம் சென்றால் சுட்டுவிடுவோம்' என்று படையினர் அங்கிருந்து வெளியேறிய மக்களிடம் கூறியுள்ளனர். அங்குள்ள கால்நடைகளை விற்றுவிடுமாறு கிண்ணியா பிரதேச செயலாளர் ஆலோசனை கூறியுள்ளாராம். குறைந்த விலையில் கால் நடைகளை அபகரிக்கும் முயற்சியே அது என்றும், தங்கள் கால் நடைகளை மீட்டுத் தருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ■

## படையினருடன் வரவேண்டாம்

## "புலிகள் விடுத்த எச்சரிக்கை!"

(மன்னார் நிருபர்)

மன்னார்த்தீவுப் பகுதியில் சேவையிலீடுபடும் இ.போ.ச. பஸ்களில் பொது மக்களுடன் பயணம் செய்யும் பாதுகாப்புப் படையினரை, "இனிமேல் ஏற்ற வேண்டாம்" என புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் பஸ்களில் பயணம் செய்வது, "எமனுடைய வாகனத்தில் செல்வது போன்ற நிலையை பொதுமக்கள் அனுபவிக்கின்றனர். சிலர் தமக்கு சைக்கிளே கதி" என்று பஸ் பயணத்தை இடை நிறுத்திவிட்டனர்.

இப்பகுதியில் பொதுமக்கள் பயணம் செய்யும் பஸ்களில் பொலிசாரும், இராணுவத்தினரும் ஏறிச் செல்வது நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது.

பேசாலை தலைமன்னார் காட்டுப் பகுதியில் நடமாடும் புலிகள் பஸ் சாரதிகள், நடத்துனர்களிடம் இது விடயமாக அறிவித்துள்ளனர். இதை மீறிப் பயணிகளுடன் படையினர் பஸ்களில் வருவார்களேயானால் அதற்கு பின்னர் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகளல்லர் எனவும் தெரிவித்திருக்கின்றனர். முன்பொருதடவையும் இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். ■

## தமிழர்களின் வரலாற்று பெருமை

## ஆவணங்களை அழிக்க முயற்சி?

'இலங்கையில் தமிழர்களுக்கு பாரம்பரிய உரிமை எதுவும் கிடையாது.' என்று கூறத்தக்கதாக திட்டமிட்ட செயற்பாட்டு முறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது அண்மையில் வெளியாகி உள்ளது.

தமிழர்களின் வரலாற்று பெருமைகளை விளக்கும் ஆவணங்களை எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் பூண்டோடு ஒழித்துவிட முயற்சிகள் நடைபெறுகிறதா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

வட-கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதனை இல்லாதொழிக்கவே வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதேசமான 'மணல் ஆறு'- 'வெலி ஓயா' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, சிங்களக்குடியேற்றத்தை அரசாங்கமே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியது.

மட்டக்களப்புக்கு வடக்கேயுள்ள புணாணை என்ற இடத்தில் ஜயவர்த்தனா காலத்தில் காமினி திசநாயக்காவின் ஆசீர்வாதத்துடன் சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட்டது. இதற்கு மாதுரு ஓயா திட்டத்துக்குரிய வாகனங்களும் பணமும் பயன்படுத்தப்பட்டன.

அப்போது அமைச்சரவையில் அங்கம் வகித்த திரு.கே.டபிள்யூ. தேவநாயகம் எதிர்ப்புக் குரல் எழுப்பியதால் நிறுத்தி வைக்கப்பட்ட திட்டம் பின்னர் எதுவிதமான பிரசாரமுமின்றி அமைதியாக நிறைவேறியிருக்கிறது.

இப்பொழுது கொழும்பிலுள்ள அரச திணைக்களம் ஒன்றில் பாதுகாக்கப்பட்டுவரும்– தமிழர்களின் பூர்வீகத்தை எடுத்துரைக்கும் ஆவணங்களை முற்றாக அழித்துவிட திட்டமிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

அண்மையில் ஏதோ ஒரு பழைய சுவடியைப் பார்வையிடச் சென்ற தமிழ் யுவதிகள் இருவரையும், 'புலிகளின் ஆதரவாளர்கள்' என்று கூறி அத்திணைக்கள ஊழியர்கள் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்விருவரையும் அங்கு அனுப்பி வைத்த பெண்மணி பொலிசாருடன் தொடர்பு கொண்டு அவர்களை விடுவித்தாராம். ■

## 50 ஆயிரம் சிங்கள மக்கள்

## வடக்கே செல்லத் தயார்

## ஆயுதங்களும் வேண்டுமாம்

பௌத்த சங்கங்களின் சம்மேளனம் 50,000 சிங்களவர்களை வடக்கே அனுப்புவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. இவ்வமைப்பின் செயலாளரான ஜி. புண்ணியவர்த்தன, இந்நாட்டில் நிலவும் பிரச்சனைக்கு இதுவே நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரே வழியாகும் என்றார்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அமல் சேனாலங்கார விடுத்த ஒரு சவாலுக்கு பதிலளிக்குமுகமாகவே திரு. புண்ணிவர்த்தனா இக் கருத்தை வெளியிட்டார்.

வடபகுதியில் பெருவாரியான சிங்களவர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தாம் மீண்டும் அங்கு சென்று குடியேற நாட்டமுள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

அங்கு செல்லும் 50,000 சிங்களவர்களுக்கு அவர்களுக்கான குடியிருப்புக்களை அமைப்பதற்குத் தேவையான கட்டட உபகரணங்களையும் விவசாயம் செய்வதற்கான கருவிகளையும் உணவு, பணம் ஆகியவற்றையும் அரசாங்கம் கொடுக்க முன்வருமானால் அவர்களையும் மகாசங்கத்தினையும் வட பகுதிக்கு அனுப்பிவைக்க நாம் தயாராகவிருக்கிறோம்.

மிக முக்கியமாக அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்படவேண்டும், என்றும் திரு. புண்ணிவர்த்தன கேட்டுள்ளார். ■

## எட்டுவருடத்தின்பின் ஏமாற்றம்

(மட்டக்களப்பு நிருபர்)

1990ம் ஆண்டும், அதனைத் தொடர்ந்தும் இடம்பெற்ற வன்செயல்களின்போது பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இழப்பீடுகள் இழுத்தடிப்புகளுக்குப் பின் சம்பவம் நடந்து 8 வருடங்கள் சென்ற நிலையில் ஒரு கண்துடைப்பான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் இதில் வேடிக்கையான விடயம் பாதிக்கப்பட்டு இழப்பீடுகளுக்காக விண்ணப்பித்து பல்வேறு அதிகாரிகளின் கால்களையும் பிடித்து (அரசியல் பிரமுகர்களினதும்) "அன்பளிப்புகள்" கொடுத்து சலுகை முன்னுரிமை பெற்று இழப்பீடு பெறச் சென்ற பெரும்பாலானோருக்கு, கொழும்பு சென்று காசோலை பெற்றதும் திடீர் ஏமாற்றம் காத்திருந்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இலட்ச ரூபாவும் அதற்குக் கிட்டத்தட்டவும் இழப்பீடு வழங்கப் போவதாக அரச வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பெரும் பிரசார முழக்கம் செய்யப்பட்டது. அறிவித்த இழப்பீட்டுத் தொகையிலிருந்து அந்த ஊழியர்கள் ஏற்கெனவே பெற்றிருந்த அரச கடன்களையெல்லாம் இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழித்தெடுத்துவிட்டு மீதித்தொகை காசோலையாக வழங்கப்பட்டது.

ஏற்கெனவே பெற்றிருந்த கடன்களையெல்லாம் கழித்தெடுத்து விட்டு ரூபா ஆயிரத்திற்குக் குறைந்த தொகையே பலரதும் கையில் இழப்பீடாக வழங்கப்பட்டிருக்கிறது.

இழப்பீட்டுக்காக விண்ணப்பித்ததில் அரைவாசித் தொகையையே அதிகாரிகள் சிபார்சு செய்திருந்தார்கள். அதிலும் தற்சமயம் நாம் பெற்றிருந்த கடன்களையெல்லாம் கழித்துவிட்டு ஆயிரம் ரூபாவும் அதற்குக் குறைந்த தொகையையுமே நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ■

## ஆட்டோ சாரதி கடத்தல்

## பொலிசாரும் உடந்தையா?

(சஞ்சீவன்)

விஜயகுமாரின் தம்பி சசி என்பவர் ஒரு பெண்ணைக் காதலித்து அவளைக் கூட்டிச் சென்றுவிட்டார். இதில் தலையிட்ட புளொட் காதல் ஜோடியைத் தேடினர். கிடைக்கவில்லை.

விஜயகுமாரை விசாரணைக்கு வருமாறு பயமுறுத்தி இருக்கிறார்கள். இதனால் பயந்துபோன விஜயகுமார் 18.03ல் பொலிஸில் முறைப்பாடு செய்தார். இரு தரப்பாரையும் அழைத்த பொலிஸார், விசாரணையின் பின் புளொட் உறுப்பினர்களை எச்சரித்து அனுப்பினர்.

21.03.1998 அன்று விஜயகுமாரை தேடிவந்த புளொட் அவரையும், மனைவியையும், கூட நின்ற இன்னொருவரையும் கூட்டிவந்து அரசடிச் சந்தியிலுள்ள அவர்களது அலுவலகத்துள் வைத்துக் கதவைப் பூட்டினர். இது பகல் 1 மணிக்கு நடந்தது.

5 மணியளவில் விஜயகுமாரைத் தனியே அழைத்து ஒருவாகனத்தில் ஏற்றி இரவோடிரவாக வவுனியா கொண்டுவந்தனர். வேனில் ஒரு பொலிஸ்காரர் காணப்பட்டதால் பொலிஸ் நிலையம் செல்வதாக நினைத்து விஜயகுமார் ஏறியிருக்கிறார்.

அவருக்கு சோடா வழங்கப்பட்டிருக்கிறது. சற்று நேரத்தில் அவர் மயங்கிவிட்டார். கண்ணை விழித்தபோது வவுனியாவில் இருந்தார்.

அன்றிரவே காதல் ஜோடியைக் கேட்டு தாக்கப்பட்டிருக்கிறார். நிலத்தில் பதிக்கப்பட்ட சங்கிலியுடன் கால் பிணைக்கப்பட்டது.

25ம் திகதி வரை விஜயகுமாரைக் காணாத ஆட்டோ சாரதிகள் சங்கம் ஊர்வலமாக வந்து காலை 10 மணிக்கு புளொட் அலுவலகத்தை முற்றுகையிட்டது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டனர். ஆட்டோக்கள் ஓடவில்லை. தெருவை மறித்துக் கொண்டன. 500 ஆட்டோக்கள்வரை இருந்ததாம்.

மக்கள் கோஷம் எழுப்பினர். பொலிஸ் தலையிட்டு புளொட் உறுப்பினர் சிலரைக் கைது செய்தது. விஜயகுமார் வவுனியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு 26ம் திகதி 9 மணிக்கு விடுவிக்கப்பட்டார்.

வேனிலிருந்த பொலிஸ்காரர் உண்மையானவரா? போலியா? என்று பொலிஸார் விசாரணைகள் செய்து வருகின்றனர். புளொட் உறுப்பினர்கள் 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ■

## ஏமாற்றப் போகிறது அரச தொலைக்காட்சி

## நிராகரிக்கப்பட்ட நாடகங்கள் இறக்குமதி

சிறீலங்கா ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தமிழ்பேசும் மக்கள் இனிமேல் தமிழிலும் கேட்பதற்கான திட்டமொன்றினை ஏப்ரல் மாதம் முதல் தொடங்கப்போவதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஈ.டபிள்யூ. குணசேகரா அறிவித்துள்ளார். இதற்காக ஜப்பான் வழங்கும் 70 கோடி ரூபா உதவி பயன்படுத்தப்படுமாம்.

ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் அதே வேளையில் அந்நிகழ்ச்சியை சிங்களத்திலோ அல்லது தமிழிலோ நாம் விரும்பியவாறு கேட்க முடியும் என்று கூறப்படுகிறது.

ஆனால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்துக் கொண்டு விரும்பிய மொழியில் கேட்டு அனுபவிக்க முடியாது எனத் தெரிகிறது.

இதற்காகவே பிரத்தியேக சாதனம் பொருத்தப்பட்ட தொலைக்காட்சிகளை இறக்குமதி செய்யப் போகிறார்களாம்.

இதில் வேடிக்கை என்னவெனில், எத்தனை தமிழ் நிகழ்ச்சிகள் சிங்களமொழி பேசுவோருக்காக மொழி மாற்றம் செய்யப்படும் என்பதற்கான உத்தரவாதம் இல்லை.

சகல சிங்கள நிகழ்ச்சிகளையும் தமிழ் பேசும் மக்கள் கண்டும் கேட்டும் இரசிக்கலாமே ஒழிய தமிழ் நிகழ்ச்சிகள் எத்தனை சிங்கள மொழிக்கு மாற்றப்படும்?

இதற்கிடையில் ரூபவாகினியில் ஒளிபரப்பப்படுவதற்காக தமிழ் நாட்டிலிருந்து பல தொடர் நாடகங்கள் பெருவாரியான செலவில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளதாக சென்னையிலிருந்து கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. இவற்றில் பெரும்பாலானவை சென்னை தொலைக்காட்சி நிலையங்களால் ஒளிபரப்பப்பட லாயக்கற்றவை என நிராகரிக்கப்பட்டவை எனவும் தெரிய வருகிறது.

அங்கு கழிக்கப்பட்டவை, இங்குள்ள மக்களின் தலையில் கட்டியடிக்கப்படப் போகின்றனவா, என்று வினவத் தோன்றுகிறது. இந்த மோசடியால் யாருடைய சட்டைப் பைகள் நிரம்பப் போகின்றன?

சுயாதீனத் தொலைக்காட்சி சேவையிலும் தமிழ் நிகழ்ச்சிகள் எப்போதாவது தலைகாட்டுகின்றன. அவையும் ஏற்கனவே ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளாகும்.

இந்நிறுவனத்திலும் ஆக ஒரேயொரு தமிழர்தான் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருக்கிறார் என்று தெரிகிறது. ■

# கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு
## அதிகாரிகளின் அலட்சியப் போக்கு

(மன்னார் நிருபர்)

மண்ணெண்ணெய், டீசல் போன்ற அத்தியாவசிய எரிபொருட்களுக்கு தற்போது மன்னாரில் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் உள்ளூர் மற்றும் வெளியிடங்களுக்கான சகல போக்குவரத்து சேவைகளும் முற்றாக ஸ்தம்பித்தன. மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 24ம் திகதிக்குப் பின் தரை மார்க்கமான போக்குவரத்து ஆரம்பித்ததிலிருந்து ஏற்பட்டுள்ள மிக மோசமான எரிபொருள் தட்டுப்பாடு இதுவெனக் கூறப்படுகின்றது.

கடல் மார்க்கப் போக்குவரத்து நடைபெற்றபோது எதுவித தட்டுப்பாடும் ஏற்படாமல் இருந்தது. தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாடானது திட்டமிடப்பட்டதும், அசமந்தப் போக்குடையதுமாகும் எனத் தெரியவருகிறது.

கடந்த ஆண்டு மன்னார்-மதவாச்சி வீதி திறக்கப்பட்டதிலிருந்து பௌஸர்கள் மூலம் எரிபொருள் கொண்டுவரப்படுகிறது. இருந்தும் எரி பொருளுக்கு இடைக்கிடையே தட்டுப்பாடு ஏற்படுவதும், எந்நேரமும் மக்கள் மண்ணெண்ணெய்க்காக மணிக் கணக்கில் காத்துக்கிடப்பதும் சகஜமாகிவிட்டது.

சென்ற 23.03.98 வரை மன்னாருக்கு எதுவித எரிபொருளும் வந்து சேரவில்லை, இதனால் கறுப்புச் சந்தையில் ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் நூறு ரூபாவாகவும், டீசல் நூற்றி ஐம்பது ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த ஒரு வருட காலமாக மிகவும் அலட்சியப்போக்கில் செயற்படுகிறது. இவ்வாறான தட்டுப்பாடு ஏற்படும் எனத் தெரிந்தும் அதிகாரிகள் முன்னேற்பாடுகளைச் செய்யத் தவறி விட்டனர்.

இவ்வாறே கோதுமை மாவுக்கு அடிக்கடி தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி, தனியாரிடம் காணப்படும் புழுத்த மாவை கொள்ளை இலாபத்துடன் விற்பனை செய்வதற்கு வழி வகுப்பதில் மன்னார் ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையம், ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் உயரதிகாரிகளின் திறமையின்மையே தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகும். இவர்களை மாற்றி திறமையானவர்கள் நியமிக்கப்படும்வரை தட்டுப்பாடு என்ற நிலை தொடர்ந்திருக்கவே செய்யும்.

# 'பெட்டிசன்' குழுவால் தொல்லை!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தின் சில கிராமப் பகுதியில் பெட்டிசன்காரர்களின் தொல்லையினால் சில நபர்கள் இடம் பெயர்ந்து செல்கின்ற நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக இங்குள்ள தாராபுரம் என்னும் முஸ்லிம் கிராமத்தில் பெட்டிசன் குழு மும்முரமாக தம் கடமைகளைச் செய்து வருகின்றது.

கிராமத்திற்கு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், உதவிகள், ஆகியவற்றை தடுத்து நிறுத்துதல், திறமையாக செயற்படும் அதிகாரிகளை மாற்றுதல், அல்லது அவர்களுக்குத் தொல்லை கொடுத்தல், வேலை வாய்ப்பை இல்லாமற் செய்தல் போன்ற இன்னும் பல அடாவடித்தனமான காரியங்களில் இக்குழுவினர் தமது கைங்கரியங்களைக் காட்டி வருகின்றனர்.

பெட்டிசன் குழுவினர் தமது இத்தீய நடவடிக்கைக்காக பள்ளிவாசல் கடிதத் தலைப்பு, கிராம அபிவிருத்திச் சங்க கடிதத் தலைப்பு ஆகியவற்றையும், கிராம சபையில் உள்ள தட்டச்சு இயந்திரத்தினையும் பயன்படுத்துகின்றனர்.

இக்குழு, மேற்படி கடிதத் தலைப்புக்களில் தமது பொய்யான குற்றச் சாட்டுக்களை எழுதி, இராணுவ இணைப்பதிகாரி, இராணுவ- பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, அரசாங்க அதிபர், உதவி அரச அதிபர், கல்விப் பணிப்பாளர் போன்றோருக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறும் இல்லையேல் மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் எனப் பயமுறுத்தியும் தமது கைங்கரியங்களை மிகவும் கச்சிதமான முறையில் செய்து முடிக்கின்றது.

இக்குழுவிற்கு, எந்த நேரமும் ஓய்வாக இருக்கும்- இங்குள்ள அரச அலுவலகம் ஒன்றின் ஊழியரும், இப்பகுதியில் உள்ள சில விஷமிகளும் தலைமை தாங்குவதாகக் கூறப்படுகிறது.

# புளொட் முகாம் முற்றுகை
## புலிகள் இயக்க உறுப்பினர் கைது!

யாழ் குடாநாட்டில் சாவகச்சேரியில் புளொட் இயக்க அலுவலகத்தை படையினர் திடீரென்று சுற்றிவளைத்தனர். உள்ளே சென்று அங்கிருந்த இளைஞர் ஒருவரை மடக்கிப் பிடித்து தமது வாகனத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றனர்.

அந்த அலுவலகப் பொறுப்பாளரான புளொட் உறுப்பினரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். கைதான இளைஞர் மட்டும் விடுதலையாகவில்லை.

இது தொடர்பாக புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் விடுத்த அறிக்கை ஒன்றில், "கைது செய்யப்பட்டவர் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினராவர். பாதுகாப்பு கருதியே எம்மிடம் சரணடைந்தார்.

இவ்வாறு சரணடைவோர் அவர்களது விருப்பத்துக்கு ஏற்ப பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்வரை அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து உதவுவது, அவர்கள் எமது உறவு- இரத்தம் என்ற வகையில் எமது கடமையாகும்.

இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் நாம் நிலைகொண்டிருப்பது மக்களின் அன்றாடத் தேவையை பூர்த்தி செய்யவும், படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தவுமே தவிர, எம்மிடம் சரணடையும் புலிகளை படையினரிடம் ஒப்படைக்கவோ, புலிகளைக் காட்டிக் கொடுக்கவோ அல்ல!" என்று தெரிவித்துள்ளார்.

முரசுக்கு கிடைத்த தகவலின்படி, புளொட் அலுவலகத்தில் கைதானவர் சில வருடங்களுக்கு முன்னர் படையினரால் கைதாகி விடுதலையானவராம். தற்போது படையினரால் அவரிடம் நடைபெற்ற விசாரணையின் பின்னர் கார் ஒன்றுக்குள் மறைத்து வைத்திருந்த புலிகள் இயக்க பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளனவாம்.

# பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை
## ஜெர்மன் அமைப்பு சேவை

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை 'லயன்ஸ் கழகம்' ஜெர்மன் உதவி நிறுவனத்தூடாக 'இண்டர் பிளாஸ்ட் ஜெர்மனி' என்ற அமைப்பைச் சார்ந்த வைத்திய நிபுணர்கள் குழுவின் உதவியால் 83 நோயாளர்களுக்கு 113 பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்திமுடித்திருக்கிறது.

இக் குழுவில் ஜெர்மனியைச் சேர்ந்த 3 பிளாஸ்டிக் சேஜன்கள், 2 வைத்திய நிபுணர்கள், 3 விசேட தாதிகள் ஆகியோரும் திருக்கோணமலை வைத்தியசாலையைச் சேர்ந்தோரும் செயலாற்றினர்.

இக்குழுவை வரவழைப்பதில் 'ஜெர்மன் ஹெல்ப் பவுண்டேஷன்' இணைப்பதிகாரி திரு.உல்றிச் பெரும் பங்காற்றியதாக லயன்ஸ் கழகத் தலைவர் திரு.எஸ்.நிமல்குமார் தெரிவித்தார்.

மார்ச் 2 தொடக்கம் 13 வரை நீடித்த இப் பணியினால் திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்தோர் அதிகமாகப் பயனடைந்துள்ளனர். இவர்களுடனான தொடர்பு, போக்குவரத்து வசதிகள் என்பவற்றைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே மேற்கொண்டிருந்தது.

வடக்கு-கிழக்கில் முதற் தடவையாக இச் சிகிச்சை இடம் பெற்றிருக்கிறது. ஆயிரமாவது சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளிகளான கட்டைபறிச்சானைச் சேர்ந்த கருணாகரன் என்பவருக்கு வைத்திய நிபுணர் குழு ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்திருக்கிறது.

காலை ஏழுமணிக்கு பணியை ஆரம்பிக்கும் நிபுணர்குழு சில நாட்களில் இரவு பத்துமணிவரைகூட கனிவு மாறாமல் தங்கள் கடமையைச் செய்தமை பலரது இதயத்தைத் தொட்டது.

இந்தக் கனிவும் கடமையுணர்வும் ஆஸ்பத்திரியைச் சார்ந்தோரின் உள்ளத்தைத் தொடுமானால் அதுவே பெரு வெற்றி என்று முரசிடம் கூறினார் ஆஸ்பத்திரி நோயாளி ஒருவர்.

# அமைச்சரின் பேட்டி
## குறுக்கிட்ட குரல்?

தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு அங்குள்ள எல்.ரி.ரி.ஈ. ஆதரவாளர்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக வெளியான செய்தி தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க ரி.என்.எல். வானொலியில் கடந்த 19ம் திகதி வியாழக்கிழமை நேரடியாக ஒரு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்.

அதே நிகழ்ச்சியின் இடைநடுவில் ஒரு வேற்றுக்குரல் ஒலித்தது. அது ஒரு பெண் குரல். "தயவுசெய்து உங்கள் தொலைபேசியைக் கீழே வையுங்கள். உங்களுக்கு ஜனாதிபதி அலுவலகத்தி லிருந்து ஓர் அவசர அழைப்பு வந்துகொண்டிருக்கிறது," என்றது அக்குரல்.

"வானொலியில் ஒரு பேட்டி கொடுத்துக்கொண்டிருக்கிறேன்; ஐந்து நிமிடம் கழித்துத் தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள்!" என்று கூறிய அமைச்சர் தனது பேட்டியைத் தொடர்ந்தார்.

மீண்டும் 30 நொடிகளில் அதே குரல், "மேன்மை தங்கிய ஜனாதிபதியின் செயலாளர் தங்களுடன் உடனடியாகப் பேச வேண்டுமாம். தயவுசெய்து ஃபோனை வையுங்கள்!" என்றது.

"ஏன் வேறு தொலைபேசி இலக்கங்கள் கிடைக்கவில்லையாமா?" என்று குமுறினார் அமைச்சர். பேட்டி கண்ட விஜயவிக்கிரம, அமைச்சரின் திண்டாட்டத்தை உணர்ந்தவராக, "இத்துடன் இந் நிகழ்ச்சியை நிறைவு செய்கிறோம்," என்று கூறி முடித்துவைத்தார்.


## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831


## பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் மிதுலன்**

நயினாதீவு, பொன்னாலையைச் சேர்ந்த சத்தியபாலன்-இந்திரா தம்பதியினரின் செல்வப் புதல்வன் மிதுலன் 20.03.98 அன்று தனது முதலாவது பிறந்த நாளை சனிக்கிழமை 21.03.98ல், இல. 1280 St, Marc # 408, Montreal லில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். மிதுலனை அன்பு அப்பா, அம்மா, திருகோணமலையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், அத்தைமார், கிளிநொச்சியில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், அண்ணன்மார், அக்காமார், மாமன்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பொன்னாலை வரதராசப் பெருமாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

## விளம்பரப்பகுதி


ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான
**BRIGHT வெளியீடுகள்**
**வெற்றிக்கனிக் களஞ்சியம் - 02**

| பொதுவிவேகம் பாடநூல் | பொதுவிவேகம் செயல்நூல் |
| --- | --- |

**வெற்றிக்கனி (ஏற்கனவே வெளிவந்தவை)**

**வெற்றிக்கனி - 98**
**இதழ் 1 முதல் 6 வரை**

**P. அம்பிகைபாகனின் அனைத்து வெளியீடுகளும்**

மேலதிக விபரங்களுக்கு:
**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S - 27, First Floor, P.o. Box : 162
Central Super Market Complex
Colombo-11. T.P. 434770, 074 - 718592

**RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜா வஜீகரண (ரசாயன) லேகியம்**

(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணை யானதுஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச் சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி. கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாள்பட்ட பீனிசம், இளைப்பு இருமல் மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம், பத்தியமில்லை.

**500 gram 300/= 250 gram 150/=**
வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

**Ayur Dr. K. ASivasubramaniam**
**முருகானந்த வைத்தியசாலை**
G/02. கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட், மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு - 11

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
**கல்வி நெறிகள்**
★ 90 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன வகுப்பு நேர விபரங்களை நேரிலோ. தொலைபேசியிலோ. தபால் மூலமே அறிந்து கொள்ளலாம.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணபப படிவத்துடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி:..............
பெயர்:..............
முகவரி..............

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11.Tel: 434770, 074-718592

**மனோதத்துவ வைத்தியம்**
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.

**ஓட்டமாவடி ஏப்ரல் 2,3ம் திகதிகளில்**
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.
T.P. 065-57345

**கல்முனையில் ஏப்ரல் 4,5,6ம் திகதிகளில்**
T.M.M பாமசியிலும் T.P. 065-29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33, Tissa Weerasingam Sq,
Boundary Road, Batticaloaவிலும் சந்திக்கலாம்.

**வவுனியாவில் ஏப்ரல் 10,11,12ம் திகதிகளில்**
வவுனியாவில் 2ம் குறுக்கு தெரு, ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கவனத்திற்கு! புதியசெல்டெல் No. 072-609388

கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....

**நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்**

★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான் ★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்

**NAGOOR Travels & Tours**
அங்கீகார இல 1094
33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.
☎ 439392

Royal - 071-35132

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போர் அரங்கும் புதிய கருவிகளும்!

சித்திரைப் புத்தாண்டுக்கு வவுனியா யாழ் தரைப் பாதையை திறக்கப்போவதாக புதிய காலவரையறை விதித்திருந்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

எப்பாடுபட்டால்கூட கைக்கு எட்டாத காலவரையறையே அதுவாகும். இன்னமும் பன்னிரண்டு நாட்களுக்குள் தரைப் பாதையை திறக்க முடிந்தால் அதனை உலக அதிசயம் என்றே பதிவு செய்ய வேண்டும்.

ஆனால், கால வரையறையாக குறிக் கப்பட்ட இலக்கில் பாதியைக்கூட பிடிக்க முடியுமா? அதாவது கிளிநொச்சியில் இருந்து முப்பது கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மாங்குளம் நகரையாவது சித்திரைக்கு முன்னர் பிடிப்பார்களா? என்று கேள்விக்குறி எழுப்பப்படுகிறது.

கேள்விக்குறிக்கே அவசியமில்லை. சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மாங்குளம் நகரை பிடிக்கும் வாய்ப்பே கிடையாது. எமக்கு கிடைத்துள்ள கள முனைத் தகவல்கள் அதனையே தெள்ளத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளன.

ஆக, அரசாங்கம் சித்திரைப் புத்தாண் டுப் பரிசாக தென்னிலங்கை மக்களுக்கு வன்னி யுத்த வெற்றிச் செய்தியை வழங்க முடியவில்லை.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அரசாங்கத்திற்கு போர் வெற்றிச் செய்தி தவிர வேறு நிவாரணம் இல்லை. வேலை நிறுத்தங்கள், நிர்வாக மந்தங்கள் காரணமாக அரச இயந்திரம் சுறு சுறுப்பு இல்லாமல் கிடக்கிறது.

விலைவாசி உயர்வுகள், வேலை இல்லாத் திண்டாட்டங்கள் காரணமாக சிங்கள மக்களின் கடும் சீற்றத்துக்கு உள்ளாகியுள்ளார் ஜனாதிபதி சந்திரிக்கா.

**இதே போக்கில் போனால் அடுத்த தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதையும், இன்னொரு முறை தோற்றால் மேலும் 20 வருடங்களுக்கு பதவிக்கு வருவதைப் பற்றி நினைக்கவே முடியாது என்றும் அரசுத் தரப்புக்குள்ளேயே முணுமுணுப்புக்கள் எழத்தொடங்கிவிட்டன.**

இந்நிலையில் புலிகளின் இலக்குகள் என கருதிக்கொண்டு, தமிழ்மக்கள் தலை களில் குண்டுகள் வீசப்படுவதுபற்றியோ, பலவாயிரம் தமிழ்மக்கள் அகதிகளாகி, பட்டினி கிடப்பது பற்றியோ கவலைப்பட அரசுக்கு ஏது நேரம்?

தென்னிலங்கையில் தோன்றியுள்ள அதிருப்தி அலையில் பொதுஜன முன்னணி அள்ளுப்பட்டு தூக்கிவீசப்படாது இருக்க வேண்டுமானால், போரில் வெற்றி பெற்று, வெற்றிவிழா கொண்டாட்டம் ஒன்றை பிரமாண்டமாக நடத்துவதுதான் ஒரே வழி.

**வெற்றி விழாக் கொண்டாட்ட பட்டாசு முழக்கத்திலும், பவனிகளிலும், பறக்கும் சிங்கக் கொடியின் அழகிலும் சிங்கள மக்களுக்கு பொதுஜன முன்னணியின்மீது ஏற் பட்டுள்ள சகல அதிருப்திகளும் பனிப் புகார் போல கரைந்துவிடும் என்பதுதான் அம்மை யார் அரசாங்கத்தின் அதி உயர் உத்தி.**

எனவே, 'ஜயசிக்குறுய்' படை நடவடிக் கையில் எத்தனை பின்னடைவுகள் ஏற்பட் டாலும் திரும்பிவருதல் என்ற சிந்தனைக்கே அரசாங்கம் இடம்தரப்போவதில்லை.

அதனால், வன்னியுத்த அனர்த்தங்கள். இடம்பெயர்வுகள், குண்டுவீச்சுக்கள் அனைத்துக்கும், இந்த யுத்தத்தை கண்டிப் பாக நடத்தி முடிக்க கட்டளையிட்டுள்ள அரசாங்கமே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும்.

**சமீபத்தில் வட்டக் கச்சியில் எட்டுக் குடிமக்கள் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டனர். குண்டை வீசிவிட்டு வந்து, புலிகளின் இலக்குகள் துல்லியமாக தாக்கப்பட்டதாக படைத்தரப்பு புளுகு தட்டி பறைசாற்றிக் கொண்டிருந்தது.**

புலிகளின் உறுப்பினர்கள் எவரும் பலியாகவில்லை. புலிகளது முகாம்கள் எதுவும் தாக்கப்படவும் இல்லை.

குடிசைகளில் குண்டு விழுந்தால் தீச்சுவாலை எழுவது வழக்கம்தான். அதனை வைத்து புலிகளது களஞ்சியம் எரிகிறது என்று கூறுவதுதான் பெரிய கொடுமை.

வட்டக்கச்சியில் எட்டு குடிமக்கள் கொல்லப்பட்ட செய்திகள் வெளியான பின்னரும் புலிகளின் இலக்குகள்தான் அழிக் கப்பட்டன என்று படைத்தரப்பு சாதித்துக் கொண்டிருக்கிறது.

முல்லைத்தீவு கடலில் கடற்புலிப் படகு கள்மீது பலத்த தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படையினர் தகவல் வெளியிட்டனர்.

**தாக்கப்பட்டவை மீன்பிடிப்படகுகள். கொல்லப்பட்டவர்கள் மீனவர்கள். கடந்த சில மாதங்களாக தம்மால் தாக்கப்பட்டதாக விமானப் படையினர் கணக்குக் காட்டிய கடற்புலிகளது படகுகளது எண்ணிக்கையை கூட்டிப் பார்த்தால் கடற்புலிகள் இப்போது படகுகளே இல்லாமல் கடலில் நீந்திக் கொண்டுதான் செல்லவேண்டும்.**

தரையிலும், கடலிலும் புலிகளின் நெருக்கு தல் படையினருக்கு ஏற்பட்டுள்ளது. விமானப் படையினராலும் முன்புபோல புலிகளின் இலக்குகளை நெருங்கி தாக்குவது இயலாத காரியமாகிவிட்டது. சண்டை நடக்கும் முனை களுக்குக்கூட முன்புபோல தரைப் படையின ருக்கு உதவியாக உடனடியாக விரைந்து செல்வதில்லை. புலிகளின் விமான எதிர்ப்புப் படையணி பலம் பெற்ற பின்னரே இந்நிலை ஏற்பட்டது.

தரை, கடல், வான் பரப் புக்கள் மூன்றிலும் முப்படை களது நகர்வுகளும் புலிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் விரையும் விமானங்களால் அவசரத்தில் போடப்படும் குண்டுகள் குடி மனைகளை நாசப்படுத்துகின்றன.

உளவு விமானம் மூலம் இலக்கை படம் பிடிப்பதில் மட்டும் விமானப் படையினர் துல்லியமாக தாக்க முடியாது. உளவு விமானம் இல்லாத காலத்திலும் புலிகளது சில முகாம்கள் அமைந்துள்ள இடங்கள் பற்றிய துல்லிய மான வரைபடங்கள் தகவல் கொடுப்போர் ஊடாக படையினரால் பெறப்பட்டிருந்தன.

சில சமயங்களில் தகவல் கொடுப்போர் குண்டுவீச்சு விமானங்களில் சென்று இலக்கு களை அடையாளம் காட்டியும் இருக்கிறார் கள். உளவு விமானம் படம் பிடித்து கொடுப்ப தால் உள்ள சாதகத்தைவிட, நேரில் அடை யாளம் காட்டுவது இலக்கை மேலும் துல்லிய மாக அறிய உதவும்.

**அப்படி இருந்தும்கூட புலிகளின் முகாம் கள் தாக்கப்பட்டதைவிட அருகிலுள்ள வீடுகள் தாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்தான் அதிகம்.**

உளவு விமானம் பாவனைக்கு வந்தது புலிகளுக்கு ஒருவகையில் சாதகம்தான். முன்பு என்றால் குண்டுவீச்சு விமானம் குண்டுகளுடன் திடீரென்று வந்து சேரும்.

இப்போது உளவு விமானம் வரும் முன்பே, குண்டுவீச்சு விமானம் வரும் பின்னே. உளவு விமானம் வந்து செல்கிறது என்றாலே அப்பகுதியில் உள்ள புலிகள் மிக நிதானமாக பாதுகாப்பு நிலை எடுத்துக்கொள்ள அவகாசம் கிடைக்கிறது. உளவு விமானம் எடுக்கும் படத்தை பார்த்துவிட்டு குண்டு வீச்சு விமானம் செல்வதற்கு இடையில் முகாம் நிலவரமே தலைகீழாக மாறிவிடுகிறது.

அதுமட்டுமல்லாமல், கடலில் செல்லும் புலிகளது படகுகளை உளவு விமானம் படம் பிடிக்கலாம். ஆனால் அதனால் பயன் பெரிதாக ஒன்றும் இல்லை.

உளவு விமானம் அனுப்பிய படத்தைப் பார்த்து, படகுகள் நடமாடுவதை அறிந்து, குண்டுவீச்சு விமானங்கள் புறப்பட்டு சென்று வருவதற்கு இடையே கடற்புலிகளது படகுகள் கடற்பரப்பில் இருந்தே மறைந்து போயிருக்கும்.

**ஆளில்லாத உளவு விமானத்துக்கு 'ஆட்காட்டி' என்று புலிகள் பெயர் சூட்டி யுள்ளனர். ஆட்காட்டிப் பறவை வானில் கண்டு விட்டாலே கடற்புலிப் படகுகள் உஷாராகி குண்டுவீச்சு விமானத்துக்கு எதிர்பார்த்து கடற்பரப்பை விட்டு விலகிப் போய்விடும்!**

கடற்புலிப் படகுகள் அதிவேகமானவை. அதற்கேற்ற குதிரைவலுக் கொண்ட இயந்திரங்கள் பூட்டப்பட்டவை. உளவு விமானம் மோப்பம் பிடிப்பது தெரிந்தால் போதும், அசுர வேகத்தில் தளத்துக்குள் போய் மறைந்து கொள்ளக்கூடியவை.

அதனால்தான் கடற்புலிப் படகுகள் கண் ணில்படாத நிலையில், கண்ணில்படும் மீன் பிடிப்படகுகள்மீது குண்டுத் தாக்குதல்கள் நடந்துள்ளன.

இன்னொரு விடயம், கடற்புலிப் படகுகள் எதிர்பாராதவிதமாக குண்டுவீச்சு விமானங் களிடம் மாட்டிக்கொண்டால்கூட, துல்லியமாக தாக்கிவிடலாம் என்றில்லை.

அதிவிரைவாகவும், வளைந்தும், நெளிந் தும் படகுகளை செலுத்துவர். அதனால் வானில் இருந்து போடப்படும் குண்டுகள் குறி தப்பி கடலில்தான் விழும். குறி சரியாக அமைவது அபூர்வம்தான். அப்படி விழுந்தால்கூட கடற்புலிகள் கடலில் குதித்து நீந்தித் தப்பலாம்.

**மீன்பிடிப் படகுகள் மிகக் குறைந்த குதிரைவலு இயந்திரங்களுடன்தான் கடலில் இறங்க அனுமதிக்கப்படுகின்றன. அதனால் அவை ஓடித்தப்ப வழியில்லை. குண்டுவீச்சுக் களுக்குள் குறி தவறாது சிக்கிக் கொள் கின்றன. மீனவர்கள் சிலர் புத்திசாலித்தன மாக கடலில் குதித்து தப்பிவிடுகின்றனர்.**

எனவே, போர் அரங்கில் படையினர் தமக்கு சாதகமானதாகக் கருதி பயன்படுத்தும் நவீன இராணுவ தொழில் நுட்பங்களை புலிகளுக்கும் சாதமாக மாறிவிடுகின்றன. உளவு விமானமும் அப்படித்தான் மாறி யிருக்கிறது.

**குண்டுவீச்சு விமானம் பின்னால் வரப் போகிறது என்று முன்கூட்டியே புலிகளை எச்சரிப்பது போன்றே ஆளில்லாத உளவு விமான மோப்பம் பிடித்தல் நடவடிக்கை மாறியுள்ளது.**

உளவு விமானம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தி இனிப் புலிகள் நடமாடவே



முடியாது என்பது போன்ற உளவியல் அச்சத்தை ஏற்படுத்த படைத்தரப்பு முயன்றது. இப்போது எல்லாம் பூச்சாண்டியாகி விட்டது.

**அதேபோல,இப்போது இன்னொரு கதை வந்திருக்கிறது. மோட்டார்கள், ஆட்டிலெறிகள் என்பவற்றை புலிகள் எங்கிருந்து இயக்கு கிறார்கள் என்பதை கண்டறிய நவீன கருவிகள் வருகின்றன. அதன் பின்னரே 'ஜயசிக்குறுய்' படை நகர்வு வேகம் பெறும் என்கிறார்கள்.**

நிரந்தரமானதும், ஒரு குறிக்கப்பட்ட வரையறைக்கு உட்பட்டதுமான முகாம் ஒன்றின் நிலப்பகுதியில் வைத்து இயக்கப்படும் ஆட்டி லெறிகளை வேண்டுமானால் நவீன கருவிகள் காட்டிக் கொடுக்கும். அடிக்கடி நகர்த்தி வெவ்வேறு பகுதியில் வைத்து புலிகள் இயக்கும் ஆட்டிலெறிகளை எங்கிருக்கின்றன என்று கண்டுபிடிக்க முடியாது.

அதுமட்டுமல்ல, மோட்டார் களை வைத்திருக்க தனியான தளம் தேவையில்லை. கைகளில் சுமந்து சென்று மோட்டார்களை இடம் மாற்றி வைத்து இயக்க முடியும்.

அதுமட்டுமன்றி, காட்டு யுத்தத்தில் ஷெல் களையோ, குண்டுகளையோ இலக்கு நோக்கி ஏவ முடியாது. ஏனெனில் திசையை சரியாக கணிப்பிட்டு ஏவினால்கூட ஷெல்கள் மரங்களின் கிளைகளில் பட்டு குறி தப்பிவிடும்.

**எனவே, மோட்டார்களை அறியும் கருவி கள் எவ்விதத்திலும் வன்னிப் போர் அரங்கில் படையினருக்கு பயன்தரப்போவதில்லை. தற் போதுகூட ஷெல் வரும் கோணத்தில் இருந்து மோட்டார் எங்கிருக்கக்கூடும் என்பதை கணிப் பிட முடியும். கருவி தேவையில்லை. ஆனால் பதிலுக்கு படையினர் ஏவும் ஷெல்கள் இலக்கை சென்றடைய காடுகள் அனுமதிக்காது. கருவிகள் வந்த பின்னரும் இந்த நிலையே தொடரும்.**

போரியற் துறையைப் பொறுத்தவரை ஒரு நவீன படைக்கலமோ கருவியோ கண்டுபிடிக்கப்படும்போது, அதற்கு மாற்றீடான கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டே வருகின்றன.

அது மட்டுமல்லாமல், உளவு விமானங் கள், ராடர்கள், இலக்கறியும் கருவிகள் போன்றவை நாடுகளுக்கிடையே நடைபெறும் யுத்தங்களில்தான் கைகொடுக்கக் கூடியவை.

இன்னொரு நாட்டின் கேந்திர நிலைகள், படை முகாம்கள், பாரிய படை நகர்வுகள், ஆயுத களஞ்சிய நிலைகள் என்பவற்றை தாக்கவும், கண்டறியவும் பயன்படுவன.

**ஆனால், கெரில்லாக்களுக்கு எதி ரான போர்களில் அவை பெரியள வுக்கு உபயோகமாவதில்லை. கெரில் லாக்களை எதிர்த்து போராடும் மறுதரப்பு தன்னுடைய ஆட்களது திறனிலும், சண்டைப் பலத்திலுமே பிரதானமாக சார்ந்திருக்க வேண்டும்.**

வியட்நாம் காடுகளில் அமெரிக்காவின் நவீன தொழில் நுட்ப இராணுவத் திறன் கைகொடுக்கவில்லை. கடைசியாக அமெரிக்கப் படைகள் தாமும் கெரில்லாக்களாக மாறி காடுகளுக்குள் புகுந்தனர் அலைந்து திரிந்து, எதிரியின் இலக்குகளை கண்டறிந்து தாக்க முற்பட்டனர்.

ஆனாலும், தங்கள் சொந்த மண்ணில் நின்று போராடிய வியட்நாம் போராளிகளுக்கு தம் மண்ணுடன் இருந்த பரிச்சயமும், மன தைரியமும், உக்கிரமும் அமெரிக்கப் படை களுக்கு வியட்நாம் காடுகளை மரணக் கிடங்கு களாக மாற்றின.

வன்னியில் புலிகள் நடத்துவது முழுக்க முழுக்க கெரில்லாப் போரும் அல்ல. முழுக்க முழுக்க மரபுப் போரும் அல்ல.

**வன்னிப் பூகோள நிலை, தமது ஆயுத, ஆட்பலம் என்பவற்றுக்கு ஏற்ப கெரில்லாப் போர், மரபுப் போர் இரண்டும் கலந்த புதிய போர் முறையைப் புலிகள் கைக்கொள்கின்றனர்.**

காடுகளுக்குள் சிறு குழுக்களாக ஊடுருவ படையினர் முயன்றபோதும் அது தக்க பலனைக் கொடுக்கவில்லை. தாம் நிலை கொண்டுள்ள முன்னரங்க நிலைகளை ஒட்டிய தாகவே படையினர் பதுங்கிச் செயற்பாடுகளில் ஈடுபட முடிந்தது.

சகல விதமான உத்திகளும் பயனற்று போன நிலையில், படையினரும் சோர்வடைந்து காணப்படுகின்றனர். அதனால்தான் முன்னர் போல அல்லாமல் முக்கிய அதிகாரிகள் ஆபத்தான முன்னரங்க நிலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

திட்டத்தை விவாதிக்கச் சென்றனர். மரத்தின் கீழ் நின்று பேசிக் கொண்டிருந்தனர் என்று கூறப்பட்டாலும், படையினரை உளவியல் ரீதியாக உற்சாகப்படுத்த முன்னரங்கப் பகுதிக்கு சென்ற அதிகாரிகளே சமீபத்தில் காயமடைந்தனர்.

மரங்களை இலக்கு வைத்தோ அல்லது மரங்களுக்கு கீழே நிற்கும் படையினரையோ புலிகள் தாக்குவது கடினம். ஷெல்கள் மரக் கிளைகளில் பட்டு குறி தப்பும்.

கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் படையினரது முன்னரங்க அரண்கள்மீது புலிகள் ஷெல் அடிக்கத் தொடங்கியதும் பதுங்கு குழிக்குள் சென்றுள்ளனர் சில அதிகாரிகள்.

பதுங்கு குழிக்குள் ஷெல் ஒன்று வந்து விழுந்துதான் பிரிகேடியர் ஒருவர் காய மடைந்தார்.

**எனவே,படை உயர் அதிகாரிகள் ஆபத் தான முன்னரங்குக்கு சென்று, படையினரு டன் நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்படு மளவுக்கு சமர் நிலவரம் மோசமாகியுள்ளது.**

இதனால் இனிவரும் காலங்களில் படை உயரதிகாரிகள் பலரும் பாதிக்கப்படும் நிலை உருவாகலாம்.

காடும், காடுசார்ந்த நிலவரமும் சலிப் பூட்டும் மனநிலையையும், நோய்களையும் ஏற்படுத்தும். சமீபத்தில் 'ஜயசிக்குறுய்' படை யினர் சிலர் மலேரியா நோயினால் பீடிக்கப் பட்டனர்.

சமர் நீண்டு செல்லச் செல்ல படைத் தரப்பின் மனோபலம் மேலும் பாதிக்கப் படலாம்.

படையில் புதிதாக ஆட்கள் சேர்ப்பது இயலாத காரியம் ஆகியுள்ளது. எண்ணற்ற சலுகைகளை அறிவித்தும்கூட, வேலை இல்லாத் திண்டாட்டம் தெற்கில் தலைவிரித் தாடியும்கூட படையில் சேர யாரும் முன்வர வில்லை என்பது அரசு வெளியிடும் போர்க் களச் செய்திகளை மக்கள் நம்பவில்லை என்பதையும் காட்டுகின்றன.

**படையில் இருந்து தப்பி ஓடிய கிட்டத் தட்ட 20 ஆயிரம் படையினரில் ஆக மூவா யிரத்தி ஐநூறு பேர் மட்டுமே மறுபடியும் சேர்ந்தனர். பரவாயில்லை இவர்களாவது வந்து சேர்ந்தார்களே என்று படைத்தலைமை நினைத்து முடிக்க முன்னரே அதிலே 1500 பேர் மறுபடி தப்பி ஓடிவிட்டனர்.**

இவற்றை யுத்தத்துக்கு எதிரான மனோநிலை என்பதைவிட, யுத்தத்தில் வெற்றிபெற முடியாது என்பதையும், புலி களது இராணுவ ஆற்றலை குறைத்து மதிப்பிட இயலாது என்பதையும் களநில வரங்கள் மூலம் அறிந்துள்ளதின் வெளிப் பாடுகளேயாகும்.

**பிரசார உத்திகள் மூலம் மக்களை யுத்தக் கிளர்ச்சி கொள்ளவைக்க அரசு மேற் கொள்ளும் முயற்சிகள் பயனளிக்காதது ஒரு புறமிருக்க, தமது படையினரிடம் கூட நம்பிக்கைகளை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் அரசாங்கம் தோல்வி கண்டு வருகிறது.**

அப்படி இருந்துங்கூட, எவ்வாறு என்றாலும் 'ஜயசிக்குறுய்' தொடரும் என்ற அரசின் நிலைப் பாடு, தமிழ் மக்களின் அவலங்கள் மீதும், சிங்கள, தமிழ் இளைஞர் களது எலும்புகள்மீதும் அரசியல் செல்வாக்கு என்ற கோட்டையையும், அரசியல் இராணுவ மேலாண்மை யையும் கட்டியெழுப் பும் அரசின் பிடிவாதத்தையே காட்டுகிறது.

**இத்தகைய அரசாங்கத்திற்கே தமிழ்க் கட்சிகள் முண்டுகொடுத்து நிற்கின்றன என்பது மாபெரும் வரலாற்று துரோகம் மட்டுமல்லா மல், வரலாற்று சோகமும்தான்!**

அரசின் இந்த பிடிவாத நிலையில் பிரிட்டிஷ் பிரமுகரின் விஜயம் எந்த மாற்றத் தையும் ஏற்படுத்தப் போவதில்லை. அதே போல காமன்வெல்த் செய லாளரது வருகையும் சமாதானத்தை தோற்று விக்கப்போவதில்லை.

ஏனெனில், இன்றைய யுத்தத்தை கைவிட்டால், பொதுஜன முன்னணிக்கு வேறெந்த துருப்புச் சீட்டும் இல்லை. இதுதான் உண்மை. ■

நாரதர்

## படையினருக்கு அமெரிக்கப் பயிற்சி

## புகைப்பட ஆதாரம் புலிகளிடம்!



தென்னிலங்கைக் காடுகளில் இலங்கைப் படையினருக்கு அமெரிக்க பச்சைக் கொமாண்டோ பிரிவினர் (கிறீன்பெரற்) பயிற்சி அளிப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

சில காலத்திற்கு முன்னர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றும் வேற்று நாட்டு படையினர் நம்நாட்டு படைகளுடன் காணப்படும் புகைப்படம் ஒன்றை பிரசுரித்திருந்தது.

ஆனால், தற்போது புலிகளின் புலனாய்வுத் துறையினரிடம் மிகத் தெளிவான புகைப்படங்கள் சிக்கியுள்ளன.

யால காட்டுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்கள் ஏதாவது ஒன்றின்போது, பச்சைக் கொமாண்டோக்களின் பயிற்சி தொடர்பான புகைப்படங்கள் கிடைத்தனவா? அல்லது வேறு ஏதாவது வகையில் பெறப்பட்டனவா என்பது மர்மமாக உள்ளது. தமது புலனாய்வுப் பிரிவினரது வெளியீடு என்று புலிகள் அப் புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர். அப் புகைப்படங்களில் ஒன்றுதான் இது. இன்னொன்று 19ம் பக்கத்தில்.

## அதிரடி அய்யாத்துரை



**குட்டக் குட்ட** குனிகிறவர்களும் மடையர், குனியக் குனியக் குட்டுகிறவர்களும் மடையர். எங்கள் இந்து மதகுருமாரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவை தானே? யார் வந்து பெயர் கொடுத்தாலும் நல்லாசி வேண்டி பூசை வைத்துப் போட்டு சித்தன் போக்கு என்று சிவன் போக்கு என்று இருந்தவையை மெத்தக் கோபப் படுத்திப்போட்டினம். பொறுத்தது போதும் என்று இந்து அமைப்புக்கள் பொங்கி எழுந்திருக்கின்றன. அதி காரத் தரப்பு தமிழ்க் கட்சிகளை தலையில் தடவி கதை சொல்லி அனுப்புற மாதிரி புருடா விடும், விழிப் பாக இருக்க வேண்டும். அயல் நாட்டுக்கு தகுந்த நேரத்தில் கொடுத்த மகஜர் அருமையான முயற்சி. எடுத்ததுக்கெல்லாம் அம்மையாருக்கு மகஜர் கொடுக்கும் கட்சிகளுக்குத்தான் முகம் கறுத்துப் போயிருக்கும்!

**தமிழ்க் கட்சிகள்** அதிகாரத் தரப்பாருடன் திரைமறைவில் கைகுலுக்கிக் கொண்டு, பத்திரிகைகளுக்கு தூள் கிளம்ப அறிக்கை விடுவது தெரிந்த கதைதான். இப்ப அவையின் பிழைப்பை கெடுக்க சில ஆட்கள் கிளம்பியிருக்கினம். 'வேணியன், தேனியன்' என்ற பெயர்களில் எல்லாம் தனி ஆட்களும் அம்மையாருக்கு தந்தி கொடுக்கத் துவங்கிப் போட்டினம். கட்சி இருந்தால்தான் அறிக்கை விடலாம், தந்தி கொடுக்கலாம், மகஜர் போடலாம் என்றில்லை. தந்திப் படிவம் இருந்தால் யார் வேண்டுமானாலும் தந்தி கொடுக்க லாம். கொஞ்சம் வசதி இருந்தால் ஃபக்ஸ் மெசின் ஒன்றை வீட்டி லேயே வாங்கிவைத்துக்கொண்டு அறிக்கை விட்டுத் தள்ளலாம். ஆக தமிழ்க் கட்சிகள் காட்டிய பாதையால் வீட்டுக்கு ஒரு அறிக்கை வீரர் உருவாகப்போகினம். சபாஷ் சரியான போட்டி. எத்தனை சுகமான அரசியல். ஆனால் கவனமாக இருக்க வேண்டும். தங்கள் பிழைப்பைக் கெடுக்கும் போட்டியாளர்களைத் தமிழ்க் கட்சிகள் ஜனநாயகப் பாதையில் கடத்தி செல்ல முயலக்கூடும்!

**யாழ்ப்பாணத்தில் கள்ளச்சாமி** ஒருத்தருக்கு வைக்கப்பட்டுள்ள ஆசிரமம் பற்றி 'முரசு' அடிக்கடி ஞாபகப்படுத்திய தல்லோ? படவேண்டியவர்கள் பார்வை அங்கு படத்தொடங்கியிருக் கிறதாம். உப்பிடியே விட்டால் நாளைக்கு சந்தன கடத்தல் வீரப்பனுக்கும் ரசிகர் மன்றம் வைப்பினமல்லோ? தூக்கிலே போட வேண்டிய பாவிக்கு ஆசிரமம் வைக்கிறது மத நம்பிக்கையல்ல, வேறேதோ நோக்கம் பின்னணியில் இருக்குதாம். யாரையோ குஷிப்படுத்த இளைஞிகளை தேடுவதாகவும் தகவல். பகலில் ஆசிரமம், இரவில்...?!

**போர்ச் சூழலில் வாழ்ந்து** பழக்கப்பட்டால், கதை பேச்சிலும் அந்த வாடை அடிக்கத்தானே செய்யும்? கொழும்பி லிருந்து யாழ் சென்ற நண்பர் ஒருவரின் மருமகப் பிள்ளை காசு கேட்டதாம். "ஏன் காசு?" என்று கேட்டாராம். "மிதி வெடி வாங்க!" என்றாராம் மருமகன். இவர் வெல வெலத்துப் போனார். பின்னர்தான் விஷயம் வெளிச்சதாம். மிதிவெடி என்பது கிழங்கு ரொட்டியை! நம்மாளுக்கு அதுக்குப் பின்னர்தான் நிம்மதி.

**"வலைப்பந்தாட்ட** அணி யாழில் இருந்து வந்தது. தடபுடலாக வரவேற்று பிரசாரப்படுத்திப் போட்டினம். யாழில் இருந்து வாற சனத்தை மட்டும் ஏன் பந்தாடுகினம்?" இது சகல ஆவணங்களைக் காட்டியும் மாட்டிக்கொண்ட ஒருத்தரின் புலம்பல். அதுசரி, இங்கே வந்து தோற்கிறதுக்காகவே யாழில் இருந்து விளையாட வாறவையாக்கும்! ஒழுங்காகப் பயிற்சி எடுக்க முன்னர் ஏன் இப்படி விழுந்தடித்து ஓடி வந்து மானத்தை வாங்குகினம்? எல்லாம் பந்தக்காரர்களின் தூண்டுதல்தானாம்.

**தலைநகரில் கைதுகள் பற்றி** நீதிக்குப் பொறுப்பானவர் வருத்தம் தெரிவித்த மறுநாள் அதைவிட மோசமாக கொழும்பு நகரை அடுத்துள்ள வத்தளையில் ரவுண்டப். உடுத்த உடுப்போடை மைதானத்துக்கு கொண்டுவந்து முகம் கழுவவும், சாப்பிடவும் விடாமல் துருவல். "இரவு உடையுடன் படம் எடுக்காதேங்கோ!" எண்டு தமிழ்க் கட்சிகள் சொன்னதால், படம் எடுக்காமல் பகிரங்க மைதானத்தில் தான் முழுக்க நிற்கவைத்துப்போட்டினம். பார்த்தியளோ... ச்சா ச்சா... தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு என்னே ஒரு மரியாதை! ஒரு தமிழ்க் கட்சிகூட மூச்சுக்காட்டேல்லை! ஆனால் ஒன்று: இனி மேல் தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்தால்கூட சனம் கோபிக்காது. அறிக்கை விட்டுக் கண்டிச்சாத்தான் கோபிக்கப்போகுதுகள். அடிக்கிற கைகளை குலுக்கியும் கொண்டு அறிக்கையும் விட்டால் யாருக்குத்தான் கோபம் கொப்பளிக்காது? நள்ளிரவுக் கைதுகள் பற்றி ஒருத்தர் சொன்ன கருத்து: "எங்களை விழிக்க வைக்கிறார்கள்!"

**தலைநகர அதிகாரத்தரப்பு** விருந்தில் கூட்டான கட்சி சார்பில் சம்பந்தமானவரும், நிலமானவரும் மட்டும்தான் கலந்துகொண்டவை. விருந்து ஆரம்பமானபோது கையில் எடுத்த உற்சாக பான கிண்ணத்தை விருந்து முடியும்வரை சம்பந்தமானவர் கீழே வைக்கவில்லையாம். இந்த விருந்து நடந்த மறுநாள்தான் திருவான மலையில் தமிழ்க் குடும்பங்களை துரத்தியடிச்சவை. விருந்துக்கெல்லாம் போகும் நெருக்கமான சம்பந்தமானவரால் அதனை விரைந்து தடுக்கச் செய்ய மட்டும் முடியவில்லையே?!

**இவ்வாரப் பொன்மொழி:**

**"இளமை அழகான**
**ஒரு முகத்தைப் பெற்றிருக்கிறது!**
**முதுமை அழகான**
**ஓர் ஆன்மாவைப் பெற்றிருக்கிறது!"** ■


படிப்பகம்

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி வல்வெட்டித்துறையில் இந்தியப் படையினரால் நடத்தப்பட்ட மனித வேட்டை பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையின் ஒரு பகுதி கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சி இது:

"சில வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்த இந்தியப் படையினர் அங்கு தஞ்சம் கோரியிருந்தவர்களை,அந்த இடத்தில் வைத்தே சுட்டுக் கொன்றுள்ளனர்.

புலிகளுக்கும், இந்தியப் படையினருக்கும் மோதல் ஆரம்பமானதை அடுத்து, சுமார் இருபது பொது மக்கள் விதானை ஒழுங்கையிலுள்ள ஒய்வு பெற்ற நில அளவையாளர் சுப்பிரின்டன் வெங்கடாசலம் சுப்பிரமணியம் என்ற அறுபது வயது முதியவரின் இல்லத்துக்குள் தஞ்சம் புகுந்தனர்.

சாட்சி ஒருவரின் வாக்குமூலத்தின் படி: துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் நின்றதையடுத்து, தங்கள் வீட்டுக்கு திரும்ப வென வெளியே வந்த பலரும், மீண்டும் இந்தியப் படைகள் வீதியில் வருவதைக் கண்டு விட்டுத் திரும்பவும் அவரது வீட்டுக்குள் ஓடினர்....

இந்தியப் படையினரும் அந்த வீட்டுக்குள் நுழைந்தனர். அங்கிருந்தவர்கள் அனைவரும் முன்னால் வந்து கைகளை மேலே உயர்த்தினர். முதியவரான வெங்கடாசலம் சுப்பிரமணியமும் கைகளை உயர்த்தியவாறு முன்னே வந்து

## உறுப்பினர்களை நம்பாத தலைவர்

சிப்பாய்களுடன் பேச முயன்றார்.

அதற்கிடையில் அவர்கள் சுடத் தொடங்கினார்கள். முன்னால் நின்ற அனைவரும், வெங்கடாசலம் சுப்பிரமணியம் உட்பட அனைவரும் கீழே விழுந்தனர்.

வெங்கடாசலம் சுப்பிர மணியம் உட்பட ஒன்பதுபேர் அங்கு கொல்லப் பட்டனர். எஸ்.இளைய பெருமாள், பதினாறு வயது நிரம்பிய பாடசாலை மாணவர்களான ராஜகுரு, யவனராஜ், சுந்தரேஸ்வரன், ஒருவயதுக் குழந்தையான கணேசலிங்கம் சசி, மற்றும் இளம் குடும்ப பெண்ணான இளைய பெருமாள் உமராணி 26 வயது, ராஜகுரு புஸ்பராணி 46 வயது, அமிர்தம் உமாதேவி 26 வயது, எஸ்.கணேசலிங்கம் 35 வயது ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

கந்தசாமி மகேந்திரராஜா என்னும் 49 வயது வர்த்தகரின் வீட்டுக்குள் நுழைந்த ஆறு சிப்பாய்கள், அங்கு தங்கள் மனைவிமாருடன் குசினிக்குள் ஒளிந்திருந்த மகேந்திரராஜாவையும், அவரது இளைய சகோதரர் கந்தசாமி வேலும் மயிலுவையும் (42 வயது) வீட்டுக்கு வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றனர்.

அதன் பின்னர் அவர்களது காரையும் தீமூட்டி எரித்தனர். இச்சம்பவத்தில் மகேந்திரராஜாவைக் காப்பாற்றச் சென்ற அவரது தாயாரும் காயமடைந்தார்.

### மாட்டுத் தொழுவத்தில்

அதே தினம் மாலை மூன்றரை மணியளவில், தீருவில் வீதியில் உள்ள எஸ்.சிவகணேசன் என்பவரின் வீட்டுக்குள் இந்தியப் படையினர் புகுந்தனர்.

அங்கு தஞ்சம் புகுந்திருந்த ஆண்களையும், பெண்களையும் தனித்தனியாகப் பிரித்து நிறுத்தினர்.

அதில் எட்டு ஆண்களை மாட்டுத் தொழுவத்துக்கு கொண்டு சென்று சுவருடன் நிறுத்திவிட்டு துப்பாக்கியால் சுட்டனர்.

இவர்களில் கதிர்காமத்தம்பி சிவநேசராசா (41), நடராசா ரவீந்திரன் (32), பொன்னம்பலம் சிவநேசராசா 25, ஆறுமுகசாமி ராமச்சந்திரன் ஆகிய நால்வரும் மரணமாகினர். மிகுதி நான்கு பேரும் காயமடைந்தனர்.

இப்படுகொலைகள் பற்றி இந்தியத் தூதருடன் தாம் பேசியதாகவும், முறைப்பாடுகள் பற்றி தூதுவர் விசாரணை நடத்துவார் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா ஆகஸ்ட் 16ம் திகதி அறிவித்திருந்தார். ஆனாலும் எந்த விபரமும் பொது மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

### புத்தூர் படுகொலை

1989 ஜுன் மாதம் ஐந்தாம் திகதி காலை ஐந்து மணியளவில் இந்தியப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலை அடுத்து பொதுமக்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் இது.

இராணுவ மேஜர் ஒருவர் உட்பட இரண்டு இந்தியப் படையினர் இதில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுடன் ஏற்பட்ட மோதலையடுத்து இந்தியப் படையினர் புத்தூர் கிழக்குப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தியதாக நேரில் கண்ட சாட்சியங்கள் தெரிவித்தன.

இதன்போது எட்டு அல்லது ஒன்பது பொதுமக்கள் வேண்டுமென்றே குரூரமாகக் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பிலும் ஐந்துபேர் பலியாகினர்.

உள்ளூர் கோவில் ஒன்றுக்குள் தஞ்சம் புகுந்திருந்த பொது மக்கள் இங்கே கொல்லப் பட்டனர். உறவினர் ஒருவரது வாக்குமூலம் இது:

'இந்தியப் படையினர் கூறியதன்படி எங்கள் குடும்பத்தினரும் வேறு சிலரும் தகரம் பிள்ளையார் கோவிலுக்குள் தஞ்சம் புகுந்தோம். அங்கு வந்த படையினர் எங்களைத் தாக்கியதுடன், எங்கள் வீடுகளையும் தீமூட்டி எரித்தனர்.

நான் பார்த்துக் கொண்டிருக்கையில் தவசி நல்லதம்பி, சிவபாதம் ஆகிய இருவரையும் மற்றும் ஏழுபேரையும் படையினர் சுட்டுக் கொன்றனர்...' என்று தெரிவித்தார்.

இங்கு கொலை செய்யப்பட்ட மற்றொருவரின் உறவினரது சாட்சியத்தின்படி. கோவிலுக்குள் தஞ்சம் புகுந்திருந்த சடையார் கந்தையா என்பவரும், மற்றும் எட்டுப்பேரும் வரிசையாக நிறுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டனர்.

மற்றைய சாட்சிகளின் பிரகாரம் இவர்கள் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் தாக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட சிலரது சடலங்கள் எரிந்து கொண்டிருந்த வீடுகளுக்குள் வீசப்பட்டன" என்று மன்னிப்புச் சபை அறிக்கை தொடர்கிறது.

1989ம் ஆண்டு மே மாதம் பத்தாம் திகதி காலை 6.35 மணியளவில் முரசொலி ஆசிரியர் திருச்செல்வத்தின் மகனான அகிலன் திருச்செல்வம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக் கொலை பற்றி முன்னரே விபரித்திருந்தேன். இக் கொலைக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமே காரணம் என்று சர்வதேச மன்னிப்புச் சபையும் தன் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

தந்தையை தேடிச் சென்றவர்கள் மகனைக் கொன்றனர்.

### சிறையில் வதை

கிட்டுவுடன் கைதாகி தமிழக சிறையில் இருந்தவர்களில் ஒருவர் காஸ்ட்ரோ. சென்னையில் இருந்த புலிகள் இயக்க அலுவலகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்.

கிட்டு உட்பட அனைவரையும் தமிழக சிறையில் இருந்து இலங்கைக்கு கொண்டு வந்தனர். கிட்டுவை விடுதலை செய்துவிட்டு, ஏனையோரை கொடும் சிறையில் வைத்திருந்தனர்.

இந்தியப் படையினரின் காங்கேசன்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காஸ்ட்ரோ அங்கிருந்து திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் சி.வீரமணிக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்.

இந்தியப் படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அனுப்பட்ட கடிதம் அது. அதில் எழுதியிருந்ததாவது:

அன்புள்ள அண்ணா!

தாங்களும், தங்கள் கழகத் தொண்டர்களும் நலமாக இருக்க தமிழ்த் தாயினை பிரார்த்திக்கின்றேன்.

9.10.88 அன்று இந்திய மண்ணில் இருந்து நாடு கடத்தப்பட்ட எமது பயணம் இன்றுவரை முடியவில்லை.

எம்மை அழைத்து வரும்போதே ஆடு, மாடுகளைப்போல கை, கால்கள் கட்டப்பட்டு கொண்டுவரப்பட்டோம்.

பலாலிவரையும் விமானத்தில் வந்து, பின்பு கைகள் பின்பக்கமாக கட்டப்பட்ட நிலையிலேயே ஹெலிகொப்டரில் பருத்தித்துறை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

நாங்கள் 78 பேர். காங்கேசன்துறையில் 7 பேர். மதுரையில் இருந்து வந்தவர்கள் திருமலையில் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

ஜோன்டிஸ் நோயினால் நான் பாதிக்கப் பட்டதால் காங்கேசன்துறையில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டேன். இங்கு வந்ததனால் பல உண்மைகளை தெளிவாகவும் ஆதாரபூர்வமாகவும் அறிந்து கொண்டேன்.

காங்கேசன்துறை இராணுவ தடுப்பு முகாம், இலங்கை அரசின் 'பூசா முகாமுக்கு ஒத்ததாகும்.

இங்கு யாழ் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு, விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை இந்த முகாமில் மட்டும். 1400 பேரிற்கு அதிகமானோர் அடைக்கப் பட்டுள்ளனர். சிலரை விடுதலை செய்தாலும் பெரும்பாலோர் கேள்விக் குறியுடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

இதில் 75 பேருக்கு உள்ளேயே விடுதலைப் புலிகளும், ஆதரவாளர்களும் உள்ளனர். ஏனையோர் அப்பாவிப் பொது மக்களேயாவர்.

இவற்றைவிட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள முகாம்களில் எண்ணற்ற பொது மக்கள் காரணமின்றி கைதாகி இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

### அடித்துக் கொலை

யாழ்ப்பாணம் மருதனா மடத்தில் உள்ள இந்திய இராணுவ முகாம் சித்திரவதைக்கு பெயர்போனது 13 அப்பாவிப் பொதுமக்களை இம் முகாமில் அடித்தே கொன்றுள்ளனர். அதன் பின்னர் எத்தனை உயிர்கள் போயின என்பது இராணுவ இரகசியம்.

நாவற்குழி இந்திய இராணுவ முகாமிலும் பல உயிர்கள் போயுள்ளன. காங்கேசன் துறை இராணுவ முகாமிலும் கொடூரமான சித்திரவதைகள் நடைபெற்று வருகின்றன.

தலை கீழாகக் கட்டி அடிப்பது முதல் மின்சார அதிர்ச்சி கொடுப்பதுவரை இங்கு நடைபெற்று வருகின்றன.

.ரம், மண்டலஸ், அன்பு, மன்சூர் உட்பட பலரை ஜீப்பில் கட்டி கல்லிலும் முள்ளிலும் இழுத்துள்ளனர்.

மூட்டைப் பூச்சிக்கு மருந்து அடிக்க வேண்டுமெனக் கேட்டதால், ஜெயவிந்தன், குமார் ஆகிய இருவரையும் அடித்துள்ளனர்.

இந்திய இராணுவத்தினர் வந்தால் இங்கு அடைக்கப்பட்டுள்ளவர்கள் 'காலை வணக்கம்' சொல்ல வேண்டும்.

'ஏ பிளாக்' பகுதியில் 109 கைதிகள் உள்ளனர். இங்கு வந்த மேஜர் லலித்நாத் என்பவருக்கு காலை வணக்கம் சொல்லாமையால், எல்லோரும் 150 தோப்புக் கரணம் போட்டனர்.

இவர்களது மிருகத்தனமான அடியில் தயாளன் உட்பட மேலும் சிலருக்கு மனநோய் பிடித்தது. தற்போது நான் இருக்கும் மருத்துவ மனையில் அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பீற்றர், பாலசுந்தரம் போன்ற வேறு சிலரை தலை மட்டும் வெளியே தெரியும்படி மண்ணில் புதைத்து, தோளுக்கு மேலால் டாங்கி, ட்றக் போன்றவற்றை ஏற்றிச் சென்றுள்ளனர்.

### முக்கிய பிரமுகர்

சோதிநாதன் என்னும் 55 வயது பெரியவரை அடி அடி என்று அடித்து எல்.ரி.ரி.ஈ.யின் முக்கிய பிரமுகர் என்று வைத்துள்ளனர்.

80 வயதுக்கு மேற்பட்ட வயதான ஒருவரை மிதிவெடி புதைத்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்து வைத்துள்ளனர்.

காங்கேசன்துறை முகாமில் மேஜர் நாயர், மேஜர் சர்மா, கப்டன் ராஜன், கோவிந்தன், சுகுமார் போன்றவர்கள் சித்திரவதைக்குப் பெயர் போனவர்கள்.

இங்குள்ள இராணுவ அதிகாரிகள் எவ்வளவுக்கு எவ்வளவு கைதிகளை சித்திரவதை செய்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு பதவி உயர்வும் கிடைக்கிறது.

இம் முகாம் உணவினை நாய்கள்கூட உண்ணா. அவ்வளவு மோசமாகவும், புழுக்கள் நெளியவும் கொடுப்பார்கள்.

இங்கு தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டு அடிப்பதும், ஆண் குறியில் மின்சாரத்தை பாய்ச்சுவதும், மலவாசலில் கொதி எண்ணெய்யும், மிளகாய்த் தூளும் கலந்து ஊற்றுவதும், இரத்தக் காயங்களுக்கு உப்புத் தூளும், மிளகாய்த்தூளும் கலந்து ஊற்றுவதும் சர்வ சாதாரணம்.

தூணையடி இந்திய இராணுவ முகாமின் பொறுப்பாளர் அவ்வூரிலும், அதன் அயலூரிலும் உள்ள அழகான பெண்களின் சகோதரர்களைப் பிடித்து, அப் பெண்கள் வந்தால்தான் விடுவேன் என்று



இந்திய அதிகாரிகளோடு விருந்துக் கொண்டாட்டம். கையில் கிண்ணத்துடன் வரதராஜப் பெருமாள். புலிகளால் கைப்பற்றப்பட்ட பிலிம் சுருளில் இருந்த படம். புலிகள் இதனை பிரசுரித்திருந்தனர்.

## சரணடைந்த தேசிய இராணுவம்

கூறி அப் பெண்களை தன் காம இச்சைக்கு பணி யவைக்கிறான்.

இவற்றைவிட இந்திய இராணுவத்தினர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற இயக்கங் களை ஆயுதங்களுடன் உலாவ விட்டுள்ளனர்.

என்று காஸ்ட்ரோ தனது கடிதத்தில் எழுதியிருந்தார்.

இக் கடிதத்தை எழுதிய காஸ்ட்ரோ படையினருடனான மோதலில் கால் சேதமான நிலையிலும், புலிகளின் அரசியல் பிரிவு வேலைகளை வன்னியில் இருந்து தற்போது மேற்கொண்டு வருகிறார்.

### தேசிய இராணுவம்

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இயக்கங்கள் இணைந்து உருவாக்கிய தமிழ்த் தேசிய இராணுவம் 1989ம் ஆண்டின் இறுதியில் அழிவுக் கட்டத்திற்குள் பிரவேசித்தது.

கிழக்கு மாகாணத்தில் திருமலை தவிர்ந்த பகுதிகளில் இருந்த 'தேசிய இராணுவ முகாம்கள் புலிகளால் முற்றுகையிடப்பட்டன.

பல முகாம்களில் எதிர்ப்பே இருக்கவில்லை. தூக்கத்தில் இருந்தவர்களை தட்டி எழுப்பி புலிகள் அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய இராணுவத்தை சேர்ந்த 55 பேர் புலிகளிடம் சரணடைந்தனர். அவர்களை செங்கலடியில் வைத்து மதகுருமார் முன்னிலையில் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர் புலிகள்.

அக்கரைப்பற்றில் 47 பேரை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர். பொலநறுவையிலும் தேசிய இராணுவ அங்கத்தவர்கள் பலர் புலிகளிடம் சரணடைந்தனர்.

தங்கள் தலைமைகளது புலி எதிர்ப்பு கோஷம், வெறும் சுயநலமானது என்பதை இயக்க உறுப்பினர்களே புரிந்துகொண்ட போது, கட்டாயமாக சேர்க்கப்பட்ட தேசிய இராணுவ அங்கத்தவர்கள் புரிந்து கொள்ளாமல் போவார்களா?

"இயக்கத்தில் உள்ள எங்களையே நன்றாக, கரிசனையாக கவனித்து நடத்த முடியாதவர்கள், எங்கள் தோழர்கள் புலிகளால் கொல்லப்பட்டதை நினைத்து உண்மையாகவே கோபப்பட்டுத்தான் புலிகளை எதிர்த்து எங்களை சண்டை போடச் சொல்கிறார்கள் என்பதை நம்பவா முடியும்? இந்திய அரசு வழங்கும் உதவிகளுக்காக எங்களை விற்றுக் கொண்டும் எங்களைத் தியாகிகளாக்கிக் கொண்டும் இவர்கள் செல்வந்தர்களாகி கொண்டிருக்கின்றனர்" இவ்வாறு புலிகளிடம் சரணடைந்த ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர் ஒருவர் கண்ணீருடன் கூறினார்.

### கூலிக்காக வேலை

தங்கள் சுயரூபத்தை இயக்கத்தின் உறுப்பினர்கள் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டனர் என்பதை தலைவர்களும் அறிந்தனர்.

அதனால் அநியாயங்களை கண்டு சகிக்காத, தவறுகளை சுட்டிக்காட்டத் தயங்காத உறுப்பினர்களை தூரவிலக்கத் தொடங்கினார்கள். அல்லது அவர்களாக விலகிச் செல்லக் கூடிய விதமாக புறக் கணிக்கத் தொடங்கினர்.

சம்பளத்துக்காக வேலை செய்யும் மனோபாவம் கொண்டவர்களையும், தலைமையின் போலித்தனங்களை கண்டும் காணாமல் இருக்கக்கூடியவர்களையும் முன்னிலைப் படுத்த தொடங்கினர். அதுதவிர, தனிப்பட்ட நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை அருகில் வைத்திருக்கும் அவசியமும் தலைவர்களுக்கு ஏற்பட்டது. தங்கள் உறுப்பினர்களுக்கும், தங்கள் மக்களுக்கும் தாங்கள் துரோகம் செய்கிறோம் என்று தலைவர்களது உள்ளுணர்வு உறுத்திக் கொண்டே இருக்கும்போது, அதற்கேற்ப அவர்களது வழி முறைகளும் மாற்றமடைவது தவிர்க்க முடியாததே.

உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை இயக்கத்தில் இணைப்பது தவறில்லை. ஆனால் தலைவர்களதும், முக்கிய பிரமுகர்களதும் உறவினர்கள், நண்பர்கள் என்பது அவர்கள் இயக்கத்தில் முக்கியத்துவம் பெறுவதற்குரிய தகுதியாக மாட்டாது. இயக்க அமைப்புக்களில் வேலை செய்து, தங்கள் இயக்க விசுவாசத்தை நிரூபித்து படிப்படியாக முன்னுக்கு வரவேண்டும். சரியான இயக்க முறை அதுதான்.

தங்கள் உழைப்பிற்கும், விசுவாசத்திற்கும் தலைமையிடம் கிடைக்கின்ற மரியாதையை பார்க்கின்றபோதுதான் உறுப்பினர்கள் மன உரம் பெறுகின்றனர்.

ஆனால், புலிகள் தவிர்ந்த இயக்கங்கள் பலவற்றில் சமூக விரோதிகளாக கணிக்கப்பட வேண்டியவர்களுக்கு தலைமையிடம் என்ன மரியாதை கிடைக்கிறதோ, அதே மரியாதைதான் இயக்கமே தன் மூச்சு என்று நினைத்து விசுவாசமாக உழைக்கும் உறுப்பினர்களுக்கும் கிடைக்கிறது. சில சமயங்களில் சமூக விரோதிகளாக கருதப்பட வேண்டியவர்களே இயக்க விசுவாசிகளுக்கும் பொறுப்பானவர்களாக அல்லது மேற்பட்டவர்களாக இருப்பதும் உண்டு.

இந்த சோகமான பின்புலங்களை தெரிந்து கொள்ளாவிட்டால், ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை வைத்து கட்டப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவம், தொண்டர்படை போன்றவை புலிகள் ஊத முன்பே காணாமல்போன நிகழ்வுகள் மர்மங்களாகவே தெரியும்.

அதனால்தான் இவ்வாறான சந்தர்ப்பங்களில் இயக்க குணாம்சங்கள் பற்றியும் கூறிச் செல்ல வேண்டியுள்ளது.

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். 'ராசிக்' தலைமையில் இருந்த ஒரு குழுவினர் மட்டும்தான் தொடர்ந்து புலிகளுக்கு எதிராகச் செயற்படப் போகிறோம் என்று காட்டுக்குள் சென்றனர். ஏனைய ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் உட்பட ரெலோ,ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இயக்கங்களைச் சேர்ந்தோர் அனைவரும் திருமலை நோக்கி தப்பிச் சென்றனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளின் தளபதியாக அப்போதிருந்தவர் கருணா.

புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் போனதை நியாயப்படுத்த, புலிகள் இலங்கைப் படையினருடன் இணைந்து வந்து தாக்கினார்கள் என்று ஏனைய இயக்கத் தலைவர்கள் கூறினார்கள்.

தங்கள் உறுப்பினர்களை எவ்வித பொறுப்பும் இல்லாமல் ஏனைய இயக்கங்கள் எப்படி பலி கொடுத்தன என்பதற்கு உதாரணமாக சில சம்பவங்களைக் கூறுகிறேன்.

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொறுப்பாளராக இருந்தவர் ஜெயேந்திரன். வெற்றி என்பது இயக்கப் பெயர். யாழ் பெருமாள் கோவிலடியைச் சேர்ந்தவர்.

தாம் வாபஸ் பெறப்போவதில்லை, புலிகளுடன் சண்டைபிடிக்க வன்னிக் காட்டுக்குள் செல்லப்போவதாக சூளுரைத்தார் வெற்றி.

செட்டிக்குளம் காடு நோக்கி அவரது குழுவினர் புறப்பட்டனர். நூறுபேர் கொண்ட ஒரு குழுவை மதவாச்சி வீதிவழியாக செட்டிகுளம் நோக்கி அனுப்பிவிட்டு, தன்னோடு 125 உறுப்பினர்களை அழைத்துக்கொண்டு வேறு பாதையால் செட்டிகுளம் நோக்கி புறப்பட்டார் வெற்றி.

செட்டிகுளம் கூட்டுறவுச் சங்க லொறி ஒன்றிலும், ட்றக் ஒன்றிலும் ஆயுதங்கள் ஏற்றப்பட்டன.

ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர்கள், மோட்டார்கள், எல்.எம்.ஜி. மற்றும் ஏ.கே.ரக துப்பாக்கிகள் என்று ஏராளம் ஆயுதங்கள் ஏற்றப்பட்டன. ரவைகள் மட்டும் ஒரு இலட்சம். ஆர்.பி.ஜி. ஷெல்கள் 200, மோட்டார் ஷெல்கள் 500 என்று தடபுடலாக அணி புறப்பட்டன.

வெற்றி மட்டும் ட்றக்கில் இருக்க, இரண்டு வாகனமும் ஊர்ந்து செல்ல, ஏனையோர் தயார் நிலையில் நடந்து சென்றனர்.

நெலுக்குளம் அருகே இரவு 11.30 மணிக்கு அவர்கள் சென்றபோது, காத்திருந்த புலிகள் தாக்கத் தொடங்கினார்கள்.

வாகனத்தில் இருந்த வெற்றிக்குப் படுகாயம். 17 பேர் வரை பலியாகினர். 10 பேர் கைது செய்யப்பட்டனர். ஏனையோர் தலைதெறிக்க தப்பி ஓடினர். துணிச்சலான சில உறுப்பினர்கள் மட்டும் வெற்றியைக் காப்பாற்றி தூக்கிக்கொண்டு தப்பிச் சென்றனர்.

அதே சமயம் மதவாச்சி ஊடாக சென்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். அணியும் புலிகளால் தாக்கப்பட்டது. நூறுபேர் கொண்ட அந்த அணியில் 20 பேர் வரைதான் மிஞ்சினார்கள்.

எவ்வித திட்டமோ, மறுதரப்புப் பற்றிய கணிப்போ இல்லாத நடவடிக்கைகளால் அநியாயமாக ஏற்பட்ட உயிரிழப்புக்களே இவையாகும்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பொறுமை இழந்துள்ள ஆட்சியாளர்

## அவசரகாலசட்ட அதிகாரங்கள்

**அலசுவது- இராஜதந்திரி**

**ச**மீபத்தில் கண்டியில் பௌத்த மகா நாயக்கர்களுடன் ஜனாதிபதி பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார்.

அப்பேச்சுவார்த்தையின்போது மல்வத்த மகாநாயக்கருக்கு பென்ஸ் கார் ஒன்றை பரிசாக வழங்கியிருந்தார். அஸ்கிரிய மகாநாயக்கருக்கும் பென்ஸ் கார் ஒன்று தயாராக இருந்தது.

**பென்ஸ் கார் ஒன்றின் குறைந்த பட்ச விலை 40 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பென்ஸ் காரை பரிசாகப் பெற்ற மல்வத்தை மகாநாயக்கர் 'பத்துப் பென்ஸ் கார்களை பரிசாகத் தந்தால்கூட அதிகாரப் பரவலாக்கலை எதிர்த்தே தீருவேன்' என்று சூளுரைத்துள்ளார்**

நாட்டின் அரச மதமாக பௌத்தம் இருப்பதுடன், நாட்டின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கின்றவர்களாகவும் பௌத்த மதகுருமார்களே இருந்து வருகின்றனர்.

தனக்கு முன்பிருந்த ஆட்சித் தலைவர்கள் போன்றே பௌத்த மதகுருமாரினதும், பேரினவாதிகளதும் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட ஒருவராகவே ஜனாதிபதி சந்திரிக்காவும் மாறியுள்ளார்.

மத உணர்வுகளையும் மதங்களையும் மதித்தல், மத குருமார்களை மரியாதை செய்தல் என்பவை நாகரிகமான வழக்கங்களேயாகும்.

**ஆனால், இங்கு மத உணர்வுகளை மதித்தல், மத குருமார்களை மரியாதை செய்தல், அவர்களது கருத்துக்களை கவனித்தல் என்பவை பௌத்த மதம் சார்ந்தவையாக மட்டுமே ஆட்சியாளர்களால் கருதப்பட்டு வந்துள்ளன.**

ஏனைய மதங்கள், மதகுருமார்கள் தொடர்பான அவமரியாதைகள் ஆட்சியாளர்களது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டாலும் அலட்சியப்படுத்தப்பட்டே வந்துள்ளன.

இத்தனைக்கும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மத குருமார்கள் பலர் அரசுக்கும், அதன் சட்ட திட்டங்களுக்கும் மறுபேச்சின்றி அடங்கிப் போகின்றவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

இனங்களுக்கிடையே சமாதானத்தையும், நாட்டில் அமைதியையும் வேண்டி விரும்பி பிரசங்கங்கள் செய்கின்றவர்களாகவே ஏனைய மதங்களின் குருமார்கள் பலர் விளங்கி வந்துள்ளனர்.

**கிறிஸ்தவ மதகுருமார்கள் சிலர் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர். ஆயினும், இன்னொரு இனம் மீதான துவேஷத்தை வளர்ப்பதாகவோ, அல்லது இன்னொரு இனத்தின் உரிமைகளை மறுத்துரைப்பதாகவோ அவர்களது நிலைப்பாடுகள் ஒருநாளும் இருந்ததில்லை.**

ஆனால், இந்து மதகுருமார்கள் அரசியலில் ஈடுபடுவதோ, பொதுப் பிரச்சனைகளில் கருத்து வெளியிடுவதோ மிகவும் அபூர்வமானதாகவே இருந்து வந்துள்ளது.

தாமுண்டு தம்பாடுண்டு என்று இருப்பவர்களாகவும், பிரச்சனைகள் எவற்றிலும் ஈடுபட விரும்பாதவர்களாகவும் ஒதுங்கி நிற்கும் மனப்போக்கே இந்து மத குருமார்கள் பலரிடம் மேலோங்கி காணப்படுகிறது.

எனவே, இந்த நாட்டின் அரசியலிலும் அதிரடியான முடிவுகள் எடுக்கின்றவர்களாகவும், ஆட்சியாளர்களையே ஆட்டிப் படைக்கின்றவர்களாகவும் பௌத்த மதகுருமார்களே விளங்கி வருகின்றனர்.

இனங்களுக்கிடையே நல்லுறவை விரும்பும் பௌத்த மத குருமார்களும் இருக்கவே செய்கின்றனர். அவர்களில் சிலர் முன்னர் வடபகுதிக்கு சென்று சமாதான முயற்சிகளில் ஈடுபட்டதுடன், புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தியுமிருந்தனர். பேரினவாதத்திற்கு எதிராக குரல் கொடுத்தும் இருந்தனர்.

**எனினும் அத்தகைய பௌத்த மதகுருமார்களின் செல்வாக்கும், எண்ணிக்கையும் அதிகமிருக்கவில்லை. அது மட்டுமன்றி அத்தகைய பௌத்த மதகுருமார்களுக்கு ஆட்சியாளர்கள்கூட உரிய கௌரவம் அளிப்பதில்லை. இனவாதத்தை தூண்டுவோரிடமே ஆட்சியாளர்கள் பயபக்தி கொண்டுள்ளதையும், அவர்களைத் திருப்திப்படுத்த பலத்த முயற்சிகள் செய்வதையுமே காணக்கூடியதாகவுள்ளது.**

எனவே, ஆட்சியில் இருப்போரும் பௌத்த சிங்கள மேலாதிக்க கருத்தோட்டங்களுடன் உடன்பாடு கொண்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

**தற்போதைய ஜனாதிபதி முன்வைத்த அரசியல் தீர்வுப் பொதியிலும் பௌத்தம் அரசகரும மதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மதசார்பற்ற நாடு என்ற கொள்கையை இன்றைய ஆட்சியாளர்களும் நிராகரித்துள்ளனர்.**

அதுமட்டுமன்றி இன்றைய ஆட்சியாளர்கள் முதலில் முன்வைத்த தீர்வு யோசனையில் பௌத்த குருமார்களால் எதிர்க்கப்பட்ட முக்கிய விடயங்கள் உடனடியாக நீக்கப்பட்டன.

பிராந்திய சபைகளை மத்திய அரசு எப்போது வேண்டுமானாலும் கலைக்கலாம் என்ற ஷரத்தை புதிதாகச் சேர்த்ததுடன், பௌத்த குருமார்களை அழைத்து, அதனை மகிழ்ச்சியுடனும் தெரிவித்திருந்தார் நீதியமைச்சர்.

**பௌத்த குருமார்களை திருப்திப்படுத்த சேர்க்கப்பட்ட மேற்படி ஷரத்தானது அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்பவற்றையே அர்த்தமிழக்கச் செய்து விட்டது.**

மொத்தத்தில் பௌத்த பேரினவாதத்துடன் முரண்படாத தீர்வுப் பொதிதான் இன்று ஆட்சியாளரின் கையில் இருக்கிறது.


இப் பொதியை மறுப்பின்றி தமிழ் பேசும் மக்கள் ஏற்கும் சூழலை தோற்றுவிக்க வேண்டுமானால், தமிழ் பேசும் மக்களின் தரப்பை பலவீனமாக்குவது தவிர ஆட்சியாளர்களுக்கு வேறு வழியில்லை.

**சமபலம் கொண்ட, அடித்துப் பேசக்கூடிய ஒரு தரப்பின் முன்பாக விரித்துக் காட்டக்கூடிய கனமோ, உள்ளடக்க பெறுமதியோ ஆட்சியாளரின் தீர்வுப் பொதிக்குள் காணப்படவில்லை.**

தமிழர் தரப்பு என்று இன்று ஆட்சியாளர் கருதுவது விடுதலைப் புலிகளை மட்டுமே. ஏனைய தமிழ்க் கட்சிகளை தமிழர் தரப்பாகவோ, அன்றி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படத்தக்க சக்திகளாகவோ ஆட்சியாளர்கள் நினைக்கவில்லை.

விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளும்வரை கோடரிக் காம்புகளாக பயன்படுத்தப்படும் நிலையிலேயே சகல தமிழ்க் கட்சிகளும் ஆட்சியாளரால் அணுகப்பட்டு வருகின்றன.

இன்று தமிழ்க் கட்சிகள் சில போலி வீரம் காட்டுவதற்குக்கூட விடுதலைப் புலிகளின் பலம்தான் காரணமாக இருக்கிறது.



புலிகளுடன் பேச்சு

புலிகளை வீழ்த்தும் தேவைக்கு இவற்றைப் பயன்படுத்துவதற்காக இக் கட்சிகளின் போலி வீரத்தை ஆட்சியாளர்கள் அனுமதித்து வருகின்றனர்.

**விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் வெற்றிகொண்டுவிட்டால், தமிழர் பிரச்சனை தீர்கிறதோ இல்லையோ, தமிழரால் பிரச்சனை இருக்காது என்று ஆட்சியாளர்கள் நினைப்பதற்கும் தமிழ்க் கட்சிகளின் சமரசமான போக்குகளும் ஒரு காரணமாக அமைந்துள்ளன.**

சகல தமிழ்க் கட்சிகளும் தருவதை வாங்கிக் கொள்ள தயார் நிலையில் உள்ளன. அரசியல் தீர்வுக்கு அக்கட்சிகள் கொடுத்த யோசனைகள், திருத்தங்கள் எல்லாம் வெறும் அரசியல் நாடகம்தான் என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்தே உள்ளது.

எனவே, விடுதலைப் புலிகள் மட்டும் இல்லையானால், அத்தகைய சூழல் எப்படி இருக்கும் என்று ஆட்சியாளர்கள் கற்பனை செய்து பார்ப்பார்களேயானால், என்ன விலை கொடுத்தாவது புலிகளை வெற்றிகொள்ளும் முடிவில் இருந்து மாறமாட்டாதவர்களாகவே இருப்பர்.

ஆக, அரைகுறைத் தீர்வுப் பொதியை தமிழ் பேசும் மக்களின் தலையில் கட்டியடிக்க கூடிய சூழல், தமிழ் பேசும் மக்களின் மத்தியில் உள்ள சமரசவாத தலைமைகள் தல்லகுனிந்து நிற்கும் சூழல் என்பவற்றை உருவாக்கவும், பௌத்த பேரினவாதிகளின் ஆசிர்வாதத்துடன் அரசியல் செல்வாக்கை ஆட்சியாளர்கள் உயர்த்திக் கொள்ளவும் யுத்த வெற்றி, இராணுவத் தீர்வு என்பவற்றையே ஆட்சியாளர்கள் மலைபோல நம்பியிருக்க வேண்டியவர்கள் ஆகின்றனர்.

ஆனால், தங்கள் நினைப்புகளுக்கும் கணிப்புகளுக்கும் மாறாக கள நிலவரங்கள் மாறும்போது ஆட்சியாளர்கள் சீற்றமடைகின்றனர்.

தலதா மாளிகை குண்டுவொறியானது ஆட்சியாளரின் சர்வசன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தையும் சேர்த்தே தகர்த்திருந்தது.

**சகல மக்களாலும் ஏற்கப்பட்ட தீர்வு என உலகை நம்பவைத்துக் கொண்டு அரை குறைத் தீர்வொன்றை உலக ஆசிர்வாதத்துடன் தமிழ் பேசும் தரப்பிடம் திணிக்கும் அரசியல் சாணக்கியத்துக்கு தலதா குண்டு வெடிப்பு பேரிடியாக அமைந்திருந்தது.**

'தலதா மாளிகையையே பாதுகாக்க முடியவில்லை' என்பதால், பௌத்த பேரினவாத்தின் கணிசமான பிரிவினரது அதிருப்தியை ஆட்சியாளர்கள் சம்பாதிக்க வேண்டியதாகியது. எனவேதான் சர்வசன வாக்கெடுப்பு பற்றிய பூச்சாண்டி காட்டல்களை ஆட்சியாளர்கள் தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டு, மாகாணசபை தேர்தல் பற்றி பேச ஆரம்பித்துள்ளனர்.

**மொத்தத்தில், இராணுவ அரங்கில் மட்டுமன்றி, அரசியல் அரங்கிலும் ஆட்சியாளர்களின் திட்டங்கள், உத்திகள் என்பவற்றையும் புலிகள் முறியடித்தே வருகின்றனர்.**

எந்த யுத்தத்தை வைத்து, அடுத்த தேர்தலில் புதிய வாக்கு வங்கிகளை கைப்பற்ற ஆட்சியாளர்கள் நினைத்தனரோ, அதே யுத்தம் தமது முன்னைய வாக்கு வங்கிகளைக்கூட தகர்க்கும் அளவுக்கு தோல்வி முகத்தில் சென்றுவிடுமோ என்ற சந்தேகம் ஆட்சியாளர்களை பிடித்தாட்ட தொடங்கியிருக்கிறது.

ஆகவே, ஆட்சியாளர்கள் பொறுமை இழந்துள்ளனர். சகல வழிகளும் ரோமாபுரிக்கே என்பது போன்று, தமது சகல வளங்களையும் பலங்களையும் யுத்த வெற்றிக்கு ஒன்று குவிக்கும் கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

**ஆட்சியாளர்களின் யுத்த வெற்றியின் அச்சாணியாக படையினரே இருக்கின்றனர். படையினரின் கைகளை கட்டிப்போடும் சகல கயிறுகளையும் அவசரகால சட்டம் என்ற கத்தியினால் ஆட்சியாளர்கள் அறுத்தெறிந்துள்ளனர்.**

பொறுமை இழந்த அரசாங்கம் விரைவான யுத்த வெற்றிக்காக படையினரை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க தொடங்கியிருப்பதன் வெளிப்பாடுதான் சமீபத்திய கொழும்புக் கைதுகளாகும்.

மதகுருமார்கள் கைது செய்யப்பட்டதும், இந்து வழிபாட்டுத் தலங்களுக்குள் பூட்ஸ் கால்களுடன் புகுந்து தேடுதல் நடத்தியதும் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத அத்துமீறல்களாகும்.

**மல்வத்தை மகாநாயக்கருக்கு பென்ஸ் கார் பரிசளித்த ஜனாதிபதி, கப்பிதாவத்தை மற்றும் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்களின் பிரதம குருக்கள்மாருக்கு நடந்த அவமரியாதை பற்றி கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.**

இதே நிலை பௌத்த குருமாருக்கு ஏற்பட்டிருக்குமானால் ஜனாதிபதி மட்டுமன்றி முக்கிய அமைச்சர்கள்கூட நேரில் சென்று வருத்தம் தெரிவித்திருப்பர்.

**பௌத்த மதகுருமாருக்கு பென்ஸ் காரும், இந்து குருமாருக்கு கைவிலங்கும் வழங்கப்படுவதானது ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பு, இன்னொரு கண்ணுக்கு வெண்ணெய் என்ற அணுகுமுறையாகவே அமைந்திருக்கிறது.**

கொழும்புதான் நாட்டின் தலைநகர். ஜனாதிபதி முதற்கொண்டு பொலிஸ் மற்றும் முப்படை உயரதிகாரிகளும் கொழும்பில்தான் இருக்கின்றனர்.

அவ்வாறு இருந்தும் வெகு பிரபலமான இந்து ஆலயங்களுக்குள் படையினர் சென்று, கைதுகள் நடந்தும்கூட உடனடியாகப் பரிகாரம் செய்ய யாரும் முன்வரவில்லை. அறிமுகமில்லாத நபர்களுக்கு செய்வதுபோல, தேசிய புலனாய்வு துறையினர் பிரதம குருக்கள் புலியா? இல்லையா? என்று அறிக்கை சமர்ப்பிக்கும்வரை ஒன்றரை நாள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

**நாடறிந்த கோயில் குருக்கள் புலியா இல்லையா? என்று அறிக்கை தயார் செய்ய தேசிய புலனாய்வு பிரிவினருக்கு ஒருநாள் முழுதாக தேவைப்பட்டிருக்கிறது.**

ஆக, இவையெல்லாம் பாதுகாப்புமீதான அக்கறைகள் என்று கருத முடியாதுள்ளது. தமிழர்களின் சகல தரப்பினரையும் நித்திய தொல்லைக்கு உள்ளாக்குவது மூலம், அவர்களை களைப்படையச்செய்து, இன கௌரவம் பற்றிய உணர்ச்சிகளை துறக்கச் செய்யும் நிர்ப்பந்தங்களாகவே கருத வேண்டியுள்ளது.

தமிழர்கள் அனைவரும் புலிகளை ஆதரிக்கிறார்கள். அதனால்தான் புலிகளை வெல்ல முடியாதுள்ளது என்ற கருதுகோளுடன், தமிழர்கள் அனைவரையும் நித்திய சோதனைக்கு உள்ளாக்கி தண்டிக்கும் அணுகுமுறை எனவும் உளவியலாளர்கள் இதனை விபரிக்கின்றனர்.

ஆனால், இத்தகைய அவசரகால நெருக்கடிகள் அரசும், படையினரும் எதிர்ப்பார்ப்பதற்கு மாறாக, அரசுக்கு எதிரான உணர்வுகளையே ஊதி வளர்த்து வருகின்றன.

பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்பவற்றை மிதிக்கவே தயங்கும் அப்பாவி குடிமக்களிடம், பொலிஸ் நிலையம், நீதிமன்றம், சிறைகள் என்பவை தாம் அடிக்கடி சென்றுவரும் விருந்தினர் இல்லங்கள் போன்றவையே என்ற மனோநிலை ஏற்படுமானால், அவர்களிடம் ஏற்கனவே உள்ள தயக்கங்கள்கூட இல்லாமல் போகும் நிலைதான் ஏற்படும்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

• கடந்த அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் தமிழ் பா.உக்கள் வழக்கம்போல வெளுத்து வாங்கி வீர உரையாற்றினார்கள்.

அதற்கு பதிலளித்த பிரதிபாதுகாப்பு அமைச்சர், "தமிழ் மக்கள் துன்பப்படுவதை சகியோம், தமிழ் எம்பிகள் கூறியதை செவிமடுத்தோம். இனி துயரம் தொடராது" என்றார்.

இதனைப் பத்திரிகைகளில் பார்த்த சிலருக்கு பரம திருப்தி. பிறகென்ன, எங்கள் எம்பிகள் பார்லிமெண்டில் புட்டுப் புட்டு வைத்துப் போட்டினம். அமைச்சர், 'ஆக்ஷன் எடுக்கிறேன்' என்று சொல்லிப்போட்டாரல்லோ. தமிழ் எம்பிகளும் இல்லையென்றால் வேறு யார் இந்தப் பிரச்சனைகளை கதைக்கிறது? ஏதோ இவை இருக்கிறதால்தானே கதைக்கினம்! என்று ஒரே புளுகு.

எல்லாப் புளுகும் ஒரு வாரத்திற்குள் புழுத்துப் போய்விட்டது! கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளைக்கு. எங்கள் தமிழ்க் கட்சிகளுக்கு அரச தரப்பு கூறும் உத்தரவாதப் புளுகுகளுக்கு ஆயுள் அதைவிடக் குறைவு.

அமைச்சரின் உத்தரவாதத்தின் பின்னர்தான் முன்னெப்போதும் இல்லாதளவு பெரும் தொகையாக கொழும்பில் தமிழர்கள் படையினரால் அள்ளிச் செல்லப்பட்டனர்.

ஆலயத்துக்குள்ளும் பூட்ஸ் கால்களுடன் புகுந்தனர் படையினர். இந்து மத நம்பிக்கைகளையும், இந்துக்களின் மத உணர்வுகளையும் பூட்ஸ் காலுக்குள் போட்டு மிதித்ததுக்கு சமன்.

கிட்டத்தட்ட 45 வருடம் கொழும்பில் குடியிருந்த கப்பிதாவத்தை கோயில் மதகுருவை அறியாதவர்கள் கிடையாது. பிரேமதாசா காலத்தில் கப்பிதாவத்தை கோயிலுக்கு அமோக மரியாதை. தற்போதுகூட இராணுவ அதிகாரிகள் சிலர்கூட அங்கு சென்று வழிபடுகிறார்கள்.

கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய கோவில் பிரதம குருக்களையும் மரியாதைக் குறைவாக நடத்தியதுடன், அவரையும் புலியாக நினைத்து பிடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

அரச பேச்சாளாராக மாறியுள்ள கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் முதல், பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையான ஆசனங்களை கொண்டுள்ள தமிழ்க் கட்சியான ஈ.பி.டி.பி வரை குரல் கொடுத்தும் யாரும் கண்டுகொள்ளவில்லை பத்திரிகைகளைத்தவிர!

சாதாரணமாக கொழும்பில் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டால், தேசிய புலனாய்வு பிரிவு அறிக்கை வரும்வரை ஒருநாள் முழுக்க தடுத்து வைக்கப்படுவது வழக்கம்.

24.03.98 செவ்வாய்க் கிழமை கைதுசெய்யப்பட்ட சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரதமகுரு உட்பட அவர்களைச் சார்ந்தோர் அனைவரும் 26.03.98 வியாழக்கிழமை அன்று பகல்தான் விடுதலை செய்யப்பட்டனர்.

யார் சுத்தியும் கேட்காமல், தேசிய புலனாய்வு அறிக்கையின் பிரகாரம்தான் அவர்கள் விடுதலையாகினர். கொழும்பு பொலிஸ் நிலையங்களில் யார் கைது செய்யப்பட்டாலும் பொதுவான நடைமுறை இதுதான். இது கொழும்பில் உள்ள தமிழர்கள் நன்கு அறிந்த கெடுபிடி விதிமுறை.

ஆனால், வீடு பற்றி எரிந்தாலும் அங்கே பிடுங்குவது இலாபம் என்று அரசியல் நடத்தும் தமிழ்க் கட்சி தலைவர்கள் சிலர் தாங்கள் கூறித்தான் பிரதம குரு உட்பட பலர் விடுதலையானதாக பத்திரிகைகளுக்கு கூற, அதனை சில பத்திரிகைகளும் உண்மை என நம்பி பிரசுரித்ததுதான் கொடுமை.

செல்லச்சாமிகூட தான் கூறித்தான் அவர்கள் விடுதலையானதாக அறிக்கை கொடுத்தார். சே.. கேடு கெட்ட அரசியல்!

இந்து கோயிலுக்குள் பூட்ஸ் காலுடன் புகுந்ததுக்கும், மதகுருமாரை மரியாதைக் குறைவாக நடத்தியதற்கும் அரசாங்கமோ, பாதுகாப்பு அமைச்சோ சிறு வருத்தம்கூட தெரிவிக்கவில்லை. அதைப் பற்றி பேச யோக்கியதை இல்லை. விடுதலையானதற்கு யார் காரணம் என்று ஆளாளுக்கு உரிமை கோருகிறார்கள்.

***

### வேற்றுக் கிரக வாசிகள்

இன்றைய ஆட்சிதான் இதற்கு முன் இருந்த ஆட்சிகளைவிட தமிழ் மக்களின் கழுத்தை இறுக்கும் ஆட்சி என்று அபிப்பிராயம் தமிழ் மக்களிடம் பரவலாக ஏற்பட்டுள்ளது.

ஆனால், இன்றைய ஆட்சிக்குத்தான் இதற்கு முன் இருந்த ஆட்சிகளுக்கு கொடுத்ததைவிட பலத்த ஆதரவை தமிழ்க் கட்சிகள் வழங்கி வருகின்றன.

தமிழ்பேசும் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தும்போது இந்த துரையப்பாக்களும், குமாரசூரியர்களும், ராஜன் செல்வநாயகங்களும் எப்படித்தான் சகிக்கிறார்களோ, எந்த முகத்தோடுதான் ஆட்சியாளர்களுடன் புன்னகைக்கிறார்களோ என்று ஆச்சரியப்படாதவர்கள் அபூர்வம். முடிவில் காறி உமிழ்ந்தனர். அதனால்தான் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டபோது, "எங்கட பொடியள் தண்டனை கொடுத்துப் போட்டாங்கள்!" என்று மக்கள் மகிழ்ந்தனர்.

வீதியில் ஒருவரை நாலுபேர் சேர்ந்து அடித்தால்கூட அந்த வன்முறையை சகியாதவர்கள் தமிழ் மக்கள். அதே மக்கள் துரோகிகள் ஒழிப்பில் மகிழ்ந்தனர் என்றால் காரணம் இல்லாமல் போகுமா?

நாயிலும் கேவலமாய் எம்மை மிதிப்பவர் காலுக்கு முத்தமிடுவோராக துரையப்பாக்களை நினைத்து வெறுத்தனர்.

துரதிஷ்டவசமாக, இன்றும் அதே துயரக் கதை தொடர்கிறது. தமிழ் மக்களை இந்த ஆட்சி என்ன பாடுபடுத்தினாலும், அவர்களுடன் கைகுலுக்கிக் கொண்டிருப்பதை தமிழ்க் கட்சிகள் கைவிடப்போவதில்லை.

17.03.98 அன்று அலரி மாளிகையில் ஜனாதிபதி விருந்துபசாரம் ஒன்றை நடத்தியிருந்தார். அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விருந்து அது.

அந்த விருந்தில் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு களிப்படைந்தனர்.

அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடும் இடத்தில் தமிழ்க் கட்சி தலைவர்களுக்கு என்ன வேலை என்று தலை முடியை பிய்க்காதீர்கள்.

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தாலும் அரசுக்கு பொறுத்த தருணங்களில் தோள் கொடுத்து நிற்பதால் அரச தரப்புக்குள் உள்ளவர்களாக, தங்கள் பங்காளர்களாகவே இவர்களையும் ஆளும் தரப்பு கருதுகிறது.

மக்களை ஏமாற்றும் அரசியல் தந்திரமாக இவர்கள் ஆளும் கட்சியுடன் ஒன்று கலக்காமல் இருப்பதாக காட்டிக் கொள்கிறார்கள். அவ்வப்போது அரசை எதிர்ப்பதுபோல அறிக்கை விட்டுக் கொள்வார்கள். அம்மையாருக்கு பகிடியும் தெரியும். வெற்றியும் தெரியும். இவர்கள் பலம் பலவீனங்களும் தெரியும்.

**பிரதமர் அளித்த விருந்தை தமிழர் கூட்டணி பகிஷ்கரித்தது!**

அனைத்துலக பாராளுமன்ற ஒன்றிய மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா அளித்த விருந்தை தமிழர் கூட்டணி பா.உக்கள் பகிஷ்கரித்தனர். இந்த விருந்தில் கலந்து கொள்ளும்படி தமிழர் கூட்டணி பா.உக்களுக்கும் பிரதமர் அழைப்பு அனுப்பியிருந்தார்

**23 வருடங்களுக்கு முன்னர் 6.04.75ல் சுதந்திரனில் வெளியான செய்தி 'நறுக்கு' இது. அன்று பகிஷ்கரிப்பு. அன்றைவிட இன்று ஆயிரம் மடங்கு துயர்கள். ஆனால் இன்று பங்கேற்பு.**

இரவு 9 மணியளவில் ஆரம்பித்த விருந்து, உற்சாகமான உற்சவங்களோடு நள்ளிரவையும் தாண்டி அதிகாலை ஒன்றரை மணிவரை நடைபெற்றது.

கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட மூன்று எம்பிகள் தவிர்ந்த ஏனைய இரண்டு எம்பிகளும் ஆஜராகி இருந்தனர். ஈபி.டி.பியில் இருந்து இரண்டு எம்.பிகள் மட்டுமே சமூகமளித்தனர். புளொட், இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளில் இருந்து சகல எம்பி.களும் தவறாது ஆஜராகி இருந்தனர்.

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவுகிறது. 'ஓ லங்கா! சிறீலங்கா! கொப்பறத் தேங்கா' என்று ஆடிப்பாட என்ன தடை?

தமிழர்களை நரகத்தில் தள்ளினாலும்கூட, தமிழ்க்கட்சிகளை வேறு உலகத்துக்கு அழைத்து சென்றுள்ளது அரசாங்கம்.

போக்குவரத்து தடை அங்கில்லை. பாஸ் கெடுபிடி அங்கில்லை. தமிழர் என்றால் நீ புலியா என்ற சந்தேகப் பார்வைகள், அவமரியாதைகள் அங்கில்லை. பாஸ் கெடுபிடி இல்லை. வீட்டிலிருந்து புறப்பட்டால் இன்று எந்தத் தடைமுகாமில் இறக்கப்படுவோமோ என்ற பயம் இல்லை. பட்டினி கிடந்து, குண்டு வீச்சு, ஷெல் வீச்சால் இடத்துக்கு இடம் ஓடும் அவலம் அங்கில்லை. இராணுவத் தீர்வு முனைப்பால் தமிழ் பேசும் மக்களின் கைகளை பின்புறமாக திருகிப்பிடித்தபடி, கனம் குறைந்த பொதியை அவர்கள் கழுத்தில் கட்டி தொங்கவிடமுன்னெப்போதையும்விட மூர்க்கமாக நடக்கும் முயற்சிகள் அங்கில்லை.

ஆம்! பிதாவே! தமிழ்க் கட்சிகளை மன்னியும், அவர்கள் வேறு ஒரு கிரகத்தில் வாழ்கிறார்கள். அதனால் எங்களை அனுசரித்துப் போகச் சொல்வார்கள். போராட மக்கள் வீதியில் இறங்கினால், 'இதனால் என்ன பயன், அமைதியடையுங்கள், அடங்கியிருங்கள், எல்லாம் பெறுவீர்கள்' என்று உபதேசிப்பார்கள்.

ஆம்! பிதாவே, அவர்களுக்கு இப்போதெல்லாம் இந்த ஆர்ப்பாட்ட கூச்சல்கள் பிடிப்பதில்லை. தன்மான உணர்ச்சி சகிப்பதில்லை! அவர்கள் அனைத்தையும் துறந்துவிட்டார்கள்! ஆம்! சொந்த ஆசாபாசங்கள் தவிர மற்ற அனைத்தையும்!



படிப்பகம்

புதிய உண்மைத் தொடர்

அதிர் இடி 2

# இடி அமீன்

"இந்த நாடே நான் சொல்வதை ஒருநாள் கேட்கப் போகிறது" என்று கூறிய இடி அமீனுக்கு காலமும் கை கொடுத்தது.

ஜெர்மன் அதிபராக இருந்து உலக மகா சர்வாதிகாரியாக மாறியவன் ஹிட்லர்.

படையில் சாதாரண படையாளாகச் சேர்ந்துதான் ஜெர்மன் அதிபராக மாறினான் ஹிட்லர் என்று இடி அமீன் அறிந்திருந்தான்.

கிங்ஸ் ஆபிரிக்கன் ரைஃபிள்ஸ் பிரிவில் சேர விண்ணப்பித்தான்.

நேரில் அழைத்தார்கள்.

அவனது நெடும் உயரமான, கம்பீரமான, காட்டு யானை போன்ற தோற்றத்திற்கு உடனே வேலை கிடைத்தது. சாஜனாக நியமிக்கப்பட்டான்.

தனது பிரிவில் உள்ளவர்களுக்கு குத்துச் சண்டையும் பயிற்றுவிப்பான் இடி அமீன். பலருக்கு இடி அமீனுடன் மோதி பற்கள் போய்விட்டன.

மேலதிகாரி ஒருவருக்கு இடி அமீனுடன் மோதிப் பார்க்கும் ஆசை வந்துவிட்டது.

படையாட்கள் முன்பாக சண்டை தொடங்கியது.

**"என்னிடம் ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது"** என்று சண்டை தொடங்க முன்னரே பீடிகை போட்டான் அமீன்.

"என்ன பழக்கம்?" அதிகாரி முறைத்தபடி கேட்டான்.

**"சண்டைபோட ஆரம்பித்தேன் என்றால், முன்னால் நிற்பது மேலதிகாரி கீழ் அதிகாரி என்றெல்லாம் என் பாழாய்ப்போன கண்களுக்கு தெரிவதில்லை!"**

"அப்படியா! நானும் அப்படித்தான் வா!" என்றான் மேலதிகாரி.

அவனும் ஒரு குத்துச் சண்டை வீரன்தான்.

சண்டை தொடங்கியது. அதிகாரிதான் முதலில் ஒரு குத்து விட்டான். அமீனின் வயிற்றில் விழுந்தது.

அமீன் ஒரு குத்தை அவனது முகத்தை நோக்கி இறக்க,அதிகாரி தடுத்து, அமீனின் நெஞ்சில் குத்திவிட்டான்.

படையாட்கள் தம்மை மறந்து ஆரவாரித்தனர். அமீனின் கறுத்த முகம் கோபத்தில் சிவந்துவிட்டது.

மிக மோசமான கெட்ட வார்த்தை ஒன்றை அமீன் உபயோகப்படுத்தினான். அதிகாரியின் தாயை கேவலப்படுத்தியது அந்த வார்த்தை.

அதனால் அதிகாரி பொறுமை இழந்தான். ஆத்திரம் அவன் கண்களை மறைத்தது.

நிதானமாக எதிரியின் அசைவுகளை கணக்கிட்டு சண்டையிட ஆரம்பித்தவன், இப்போது நிதானம் இழந்து, தறிகெட்ட வேகத்தில் அமீனை நோக்கிப் பாய்ந்தான்.

அமீனின் கோபம் அவன் கண்ணை மறைக்குமளவுக்கு அடர்த்தியானதல்ல. அதனால் அந்த அதிகாரியின் நிதானம் இழந்த பாய்ச்சலை கணக்கிட்டு, அதிகாரியின் முகத்திலும், நெற்றியிலும் ஓங்கி இரு குத்துக்கள் விட்டான்.



மாலை விருந்தில் இடி அமீன்

அடியற்ற மரம் போல தடாலென்று பின்புறமாக சரிந்து பிடரி தரையில் மோத விழுந்தான் அதிகாரி.

விழுந்தவனின் கால்களை ஒன்றாகச் சேர்த்துப்பிடித்து மடக்கி அவன் வயிற்றிலேயே இடித்தான் அமீன்.

அதிகாரி முனகினான். அமீனை விலக்கிவிட முற்பட்ட இரண்டுபேர் அவனது கால்களால் உதைபட்டு ஒருபுறமாய் ஒதுங்கினார்கள்.

தன் வழக்கமான பாணியில் அதிகாரியின் இடதுகாலை ஒரு உலுப்பு உலுப்பி சட்டென்று மடக்கி முறித்த முறிப்பில், அதிகாரி எழுப்பிய அவலக்குரல் அந்த முகாம் முழுக்க கேட்டது.

யாரும் அமீனை எதிர்க்கத் துணியவில்லை. அந்த அதிகாரிக்கு விசுவாசமான படையாட்கள்கூட இந்த இராட்சதனிடம் வாங்கிக் கட்ட முடியாது! என்று இருந்துவிட்டனர்.

அதன்பின்னர் ரைஃபிள்ஸ் பிரிவில் அமீனுக்கு பலத்த மரியாதை.

அமீனிடம் சண்டைபோட்டு முறிபட்டவன் பிரபலமானவன். வீராதி வீரன் என்று புகழப்பட்டவன்.

உண்மையில் அவன் வீரன்தான். குத்துச் சண்டையில் அமீனைவிட நுட்பம் தெரிந்தவன்தான்.

அமீனின் நல்ல நேரம். அதிகாரி கோபத்தில் நிதானமிழந்து தோற்றுப்போனான்.

அதிகாரி வீராதி வீரன் என்பதால், அவனை அடித்த அமீன் வீராதி வீர சூரன் என்று பயத்தோடு கருதப்பட்டான்.

உயர் அதிகாரிகள் மத்தியிலும் அந்த ஒரே நாளில் பிரபலமானான் அமீன்.

ஒரு இடத்தில் அமர்ந்திருக்கும் வாடிக்கையெல்லாம் கிடையாது. காலில் சக்கரத்தை மாட்டிவிட்டதுமாதிரி சுறுசுறுப்பாக ஓடுப்பட்டுத் திரிவதுதான் அமீனின் ஸ்டைல்.

அறையில் அமர்ந்திருந்து வாய் கேளு மட்டும் கதை பேசுவது அமீனுக்கு பிடிக்காது.



**"அதிகாரிகள் என்றால் படையாட்கள் எட்டடி பாய்ந்தால், நாம் பதினாறடி பாயவேண்டும்"** என்பான்.

அமீனின் சுறுசுறுப்பால் துரிதமாக பதவி உயர்வுகள் அவனைத் தேடி வந்தன.

பாவைகளும் தேடிவந்தனர். மாலையானால் அழகான பெண்களுடன் கும்மாளமடிக்க ஆரம்பித்துவிடுவான்.

இசை நிகழ்ச்சிகள், களியாட்டங்கள் என்று மாலையில் அமீனின் முகாமில் ஒரே கொண்டாட்டம்தான்.

**"ஆடடி!"** என்பான். தயங்கினால் **"அவிழடி"** என்பான்.

அத்தனைபேர் முன்னிலையில் எப்படி அவிழ்ப்பது? ஆடத் தொடங்க, அமீனின் இடிச் சிரிப்பு ஒலிக்கும்.

## தருவது ரசிகன்

அமீனின் மேலதிகாரி ஒருவரது மனைவி அமீனை விரும்பி அழைத்தாள். ஒரே இரவில் அமீன் பதவி உயர்ந்தான்.

அவள் தன் கணவனிடம் கூறி அமீனுக்கு பதவி உயர்வு பெற்றுக் கொடுத்துவிட்டாள்.

அதிகாரியின் மனைவியுடன் அமீன் ஒருநாள் மாலையில் சந்தோசமாக இருந்தபோது, அவள் "உனக்கு பதவி உயர்வு பெற்றுத் தந்தவள் நான். எப்போது அழைத்தாலும் நீ வந்தே ஆகவேண்டும்!" என்றாள்.

அவளது கழுத்தை முகர்ந்து கொண்டிருந்த அமீனுக்கு கோபம் வந்துவிட்டது. ஒரே கடியாக கழுத்தில் கடித்துவிட்டான்.

அவள் பயந்துபோய் அபயக் குரல் எழுப்பி தன்னை விடுவித்தபோது, அமீனின் பற்கள் பதிந்த இடத்தில் கசிந்து கொண்டிருந்தது இரத்தம்.

அவள் அழத் தொடங்கிவிட்டாள். அவள் தாடையைப் பிடித்த அமீன் இரத்தம் கசிந்த அவளது தொண்டைப் பகுதியை தன் நாவால் வருடினான்.

பின்னர் சொன்னான்: **"எனக்கு யார் உத்தரவிட்டாலும் பிடிக்காது. இன்று காலையில் உன் கணவன் என்னிடம் கடுமையாக நடந்து கொண்டான். இப்போது நீ. அதனால்தான் இரண்டுக்குமாகச் சேர்த்து கடித்துவிட்டேன். நீ உயிர் தப்பியது பெரிய காரியம். ஏன் தெரியுமா?"**

என்ற அமீனின் கேள்விக்கு அவள் பதில் சொல்லப் பயந்தாள். அமீனே பதிலையும் கூறினான்:

**"எனக்கு இரத்தம், மனித இரத்தம் பிடிக்கும்!"** என்று இடியாக அவன் சிரித்த சிரிப்பிலும், சிரித்தபோது அவனது தோற்ற விகாரமும் கண்டு அவள் நடு நடுங்கிப் போனாள்.

அதன்பின்னர் அமீனை அவள் அழைப்பதே கிடையாது.

அமீனின் முரட்டு சுபாவம் படைப் பிரிவுக்குள் பலர் அறிந்த சுபாவம் ஆயிற்று.

படையாட்கள் மட்டுமல்லாமல், மேலதிகாரிகள்கூட அமீனைக் கண்டு பயப்பட ஆரம்பித்தனர்.

இக்கால கட்டத்தில் உகண்டா ஜனாதிபதி கபாகாவுக்கும், பிரதமர் ஒபொடேவுக்கும் இடையிலான சர்ச்சைகளும், பிரச்சனைகளும் தீவிரமாகின.

படைக்குள் தனக்கு விசுவாசமான அதிகாரிகளை தேடிப் பிடித்துக் கொண்டிருந்தார் பிரதமர் ஒபொடே. அவர்களை வைத்து ஜனாதிபதி கபாகாவை கவிழ்த்துவிடலாம் என்பது அவரது ஆசை.

அப்போதுதான் இடி அமீன் பற்றி அறிந்தார் ஒபொடே.

உடனடியாக இடி அமீனை தன்னைச் சந்திக்க வருமாறு அழைத்தார்.

இடி அமீனை அதிஷ்டம் அழைத்தது. பிரதமர் தன் துரதிஷ்டத்தை தானே வலிய அழைப்பது தெரியாமல் அழைத்தார்.

அமீனை முதல் பார்வையிலேயே ஒபொடேவுக்கு பிடித்துப் போய்விட்டது. அன்றிரவு தன் வீட்டில் விருந்துக்கு அழைத்தார்.

பிரதமர் விருந்துக்கு அழைப்பது எத்தனை பெரிய அதிஷ்டம்!

நாட்டை ஆளும் தன் இலட்சியக் கனவை எட்டுவதற்கான படிக்கட்டில் படிப்படியாக தான் ஏறத் தொடங்கிவிட்டதாக நினைத்தான் அமீன்.

அன்றிரவு விருந்தில் ஜனாதிபதியுடன் தனக்குள்ள அதிருப்திகளை ஜாடை மாடையாகக் கூறினார் பிரதமர்.

அமீன் அதிகம் பேசவில்லை. அதிகம் பார்த்தான். அவன் அதிகம் பார்த்தது பிரதமரின் அழகான இளம் மகளை.

மொழு மொழு என்று திரட்சியாக, மதர்ப்பான குதிரைபோல இருந்த பிரதமரின் மகள் அமீனை மிகமிக இம்சை செய்தாள்.

**"நாட்டின் அதிபரானால் இவளைத்தான் முதலில் அழைக்க வேண்டும் என் கட்டிலுக்கு!"** என்று மனதில் எழுதிவைத்துக் கொண்டான்.

பிரதமரின் மகளும் அமீனின் தோற்றத்தை தன் கரும் அடர்ந்த புருவங்களுக்கு கீழிருந்த விழிகளால் பருகிக்கொண்டிருந்தாள்.

அமீன் அவளை கவர்ந்து விட்டான். அமீனை இரகசியமாக அவள் தன் மனதுக்குள் பிடித்து வைத்துக் கொண்டாள்.

அதன் பயன்கள் விரைவாக அமீனை எட்ட ஆரம்பித்தன். தன் மகள் அமீனைப் பற்றி நல்லவிதமாக கூறியதால், பிரதமருக்கு அமீன்மீது மேலும் நம்பிக்கையும் ஒட்டுதலும் ஏற்பட்டது.

திடீரென்று ஒருநாள் அமீனை தன் அலுவலகத்திற்கு அழைத்தார்.

"உன் திறமைக்கு ஒரு சவால் காத்திருக்கிறது!"

**"சவாலை ஏற்க காத்திருக்கிறேன்!"** என்றான்.

"ஸயர் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் அதிகாரத்தை உனக்கு தருகிறேன்."

முதன் முதலாக தன் கைக்கு கிடைக்கப் போகும் அந்த அதிகாரம், நாடு முழுவதையும் தன் கைக்குள் போடுவதற்கான அச்சாரம் என்பது அமீனுக்கு மட்டும்தான் தெரியும்.

மார்பில் பாயப்போகும் கடாவுக்கு கொம்பு சீவிக்கொண்டிருப்பது தெரியாமல், அமீனை ஸயர் கிளர்ச்சியாளர்களை அடக்க அனுப்பிவைத்தார் பிரதமர். அங்கு பெரும் விபரீதம் ஒன்று விளைந்தது.

(தொடர்ந்து வரும்)

# காத்திருந்த பெண்கள்



பெண்கள் அழுத காட்சி

இளவரசி டயானா என்றால் உலகெங்கும் செல்வாக்கு இருந்தது. இப்போது டயானாவின் மகன் இளவரசர் வில்லியம்ஸ்சுக்கு அதேயளவு மரியாதை ஏற்படத் தொடங்கியுள்ளது.

சமீபத்தில் கனடாவுக்கு இளவரசர் வில்லியம்ஸ்சும், இளவரசர் ஹரியும் சென்றனர். தந்தையார் சாள்ஸ்சும் கூடச் சென்றிருந்தார்.

கனடாவில் வான்கூவரில் விண்வெளி மியூசியம் உள்ளது. அங்கு இளவரசர்கள் வில்லியம்ஸ், ஹரி ஆகியோர் சென்றனர்.

அவர்கள் வருவதை அறிந்த இளம் பெண்கள் திரளாகக் கூடிநின்றனர்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், வில்லியம்ஸ்சுக்காக அதிகாலையில் இருந்தே இளம் பெண்களும், மாணவிகளும் மியூசியம் முன்பாக தவம் கிடந்தனர்.

வில்லியம்சுக்கு கொடுப்பதற்காக பூச்செண்டுகளுடன் அவர்கள் காத்திருந்தனர். வில்லியம்ஸ்சும், ஹரியும் மியூசியத்துக்குள் வந்ததும் அவர்களை நோக்கிப் பாய முயன்றனர்.

ஆனால் தடுப்பு போடப்பட்டு இருந்தமையால் இளவரசரை நெருங்க முடியவில்லை. கைகளை அசைத்து உற்சாக குரல் கொடுத்தனர்.

ஒருசில பெண்களுடன் மட்டும் இளவரசர்கள் இருவரும் கை குலுக்கினர். அப்போது சில பெண்கள் வில்லியம்சை தொட்டுப் பார்த்தனர். ஆனால் பல பெண்களுக்கு கைகொடுக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அவர்கள் வாய்விட்டு கதறி அழுதனர். 'இரவெல்லாம் தூங்காமல் வில்லியம்சையும், ஹரியையும் பார்க்க துடித்துக் கொண்டிருந்தோம். ஒரு வார்த்தைகூடப் பேசாமல் போய்விட்டனரே' என்று கூறி அழுதனர்.

கனடா பெண்களின் அபாரமான வரவேற்பால் இளவரசர் வில்லியம்ஸ் அசந்துபோனார்.

# அம்பலமான சாமியார்

போலிச் சாமியார்களின் தொல்லை நம்நாடுகளில் மட்டுமல்லாமல், தாய்வான் நாட்டிலும் அயோக்கிய சாமி ஒருவர் வசமாக மாட்டிக் கொண்டுள்ளார்.

அவரது பெயர் சென்றாவ் மிங். "கடவுள் பூமிக்கு வருவார். ரீ.வியில் தரிசனம் தருவார்" என்று அந்த ஆசாமி கூறிவந்தார்.



பிரேமானந்தா ஸ்டைலில் பெண்களையும் ஒரு கை பார்க்கும் இந்த அயோக்கிய சாமியால், பல இளம் பெண்களின் வாழ்க்கை பாழாய்ப்போனது. இந்த ஆசாமிக்கு கிளைகளும் இருந்தன. அக்கிளைகளிலும், ஆசிரமங்களிலும் இருந்தவர்களும் சாமியாரின் பெயரைச் சொல்லி தாமும் பசியாறிக் கொண்டனர்.

இந்நிலையில் மார்ச் 26ம் திகதி "கடவுள் பூமிக்கு வருகிறார். அவர் எங்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார். தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றுவார்" என்று கூறியிருந்தார்.

அதனை நம்பிய முட்டாள் சீடர்கள் நம்பிக் காத்திருந்தனர். ஆனால் 26ம் திகதி கடவுள் வரவில்லை. 'எங்கே கடவுளைக் காணவில்லையே?' என்று போலிச்சாமியிடம் கேட்டனர்.

"கடவுள் தவறு செய்துவிட்டார். ஆனால் என் வாக்குப் பொய்க்காது, விரைவில் வருவார்." என்று கூறினாராம். ஆசாமியின் குட்டு உடைந்ததால் பல சிஷ்யர்கள் தர்ம அடி கொடுத்தனராம்.

இந்தப் போலிச் சாமிகளுக்கு மட்டுமல்ல, இவர்களை சொல்லி பிழைப்பு நடத்தும் திருட்டு ஆசாமிகளுக்கும் தர்ம அடி கொடுக்கலாம். தப்பில்லை.

# விசித்திரமான வழக்கு



விசித்திரமான வழக்கு ஒன்று நெதர்லாந்து உயர்நீதிமன்றம் முன்னால் விசாரணைக்கு வந்தது.

திஹேக் என்ற பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் அந்நிய ஆடவர் ஒருவர் புகுந்தார். அந்த வீட்டுக்குள் ஒரு பெண் தூங்கிக் கொண்டிருந்தார். அந்நிய ஆடவரை தன் காதலர் என்று தூக்க கலக்கத்தில் நினைத்த பெண், அவரை இறுக அணைத்துக்கொண்டு தூங்கிவிட்டார்.

வந்தவரும் எவ்வித ஆட்சேபணையும் காட்டாமல் நடந்து கொண்டார். காலையில் எழுந்தபோது, தன் அருகில் அந்நிய ஆடவர் படுத்திருப்பதைக் கண்ட பெண் அதிர்ச்சி அடைந்தார்.

அதனையடுத்து அந்த ஆடவர்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். ஆனால் நீதிபதிக்கு கோபம் வந்துவிட்டது.

"தூக்கத்தில் எதுவும் தெரியாது என்பதை நம்பமுடியாது. மனிதனுக்கு சில உணர்வுகள் உண்மையைக் காட்டிக்கொடுத்துவிடும். அதனால் இப் பெண் தனக்கு தெரியாமல் நடந்ததாக கூறுவதை ஏற்கமுடியாது." என்று தீர்ப்பளித்தார்.

பெண்மணி விடவில்லை. அப்பீல் செய்தார். அங்கும் வழக்கு தள்ளுபடியாகியுள்ளது.

# தினமும் பார்க்காதீர்கள்

தினமும் ரீ.வி. பார்க்கும் குழந்தைகள் குண்டாகி விடுகின்றனர்.

வோஷிங்டனில் உள்ள ஜோன் கேப்கின்ஸ் பேவ்யூ மருத்துவமையம் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. தினமும் ரீ.வி. பார்க்கும் 25 சதவீதமான குழந்தைகள் குண்டாகி விடுகின்றனர். ரீ.வி. பார்ப்பதால் குழந்தைகள் வெளியில் சென்று விளையாட ஆர்வம் காட்டுவதில்லை. உடல் பருமனாக இதுவும் காரணமாகி விடுகிறது. ரீ.வி.யில் காட்டப்படும் விதவிதமான உணவு வகைகள், குழந்தைகளைப் பெருமளவில் கவர்ந்துள்ளன. அதை விரும்பிச் சாப்பிடுகின்றனர். இதனால் கொழுப்புச் சத்து அதிகமாகி குழந்தைகள் குண்டாகி விடுகின்றனர்.

அமெரிக்கா குழந்தைகளில் 42 சதவீதம் பேர் நான்கு மணி நேரத்துக்கும் அதிகமாக ரீ.வி. பார்க்கின்றனர். குழந்தைகளை வெளியே சென்று விளையாடினால் கீழே விழுந்து அடிபட்டுக் கொள்வார்கள் என்ற பயத்தில் ரீ.வி. பார்ப்பதே நல்லது என்று பெற்றோர் கருதுகின்றனர்.

சிறிய குழந்தைகள் மட்டுமன்றி, 11 முதல் 16 வரையுள்ள வளர்ந்து விட்ட பெண்குழந்தைகளும் ரீ.வி.யில் தான் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள் உடற்பயிற்சியை அலட்சியம் செய்கின்றனர். இதனால் இவர்கள் உடம்பிலும் சதை போட்டு விடுகின்றது.

ரீ.வி. பார்ப்பதால் உடம்பு குண்டாகி விடுவதோடு மட்டுமன்றி, குழந்தைகளின் விளையாட்டுப் பழக்கமும், புத்தகம் படிக்கும் பழக்கமும் குறைந்து வருகின்றன என்று நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# விவகாரமான ஹோட்டல்



கொழும்பில் விவகாரமான ஒரு ஹோட்டல் இருக்கிறதாம்.

என்ன வித்தியாசம் தெரியுமா? வில்லங்கமான வித்தியாசம் என்று தகவல் வெளியிட்டுள்ளது ஒரு பத்திரிகை.

அந்தக் ஹோட்டலில் காபரே நடனம் நடக்கிறதாம். காபரே என்றால் இது பெண்கள் ஆடும் காபரே அல்ல, ஆண்கள் ஆடும் காபரே.

பெண்களுக்கு மட்டும்தான் அனுமதி. காதும் காதும் வைத்ததுபோல நடக்கிறதாம். ஆண்களின் காபரேயை இரசிக்க பெரும் இடத்து பெண்கள் கூடிவிடுகிறார்களாம். கொழும்பு எங்கோ போய்க் கொண்டிருக்கிறது!



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# புதுமையான உடை



↓ உலகம் போகும் போக்கைப் பாரு தந்தனத் தில்லானே என்று பாடிக்கொண்டிருக்க வேண்டியதுதான். இந்தப் படத்தைப் பாருங்கள். ஆளைப் பார்க்காமல் ஆடையைப் பாருங்கள். என்ன வித்தியாசமாக ஏதேதோ தெரிகிறதா?

அழகி அணிந்திருப்பது வித்தியாசமான உடை. ஒரு சமையல் பாத்திர கடையையே உடம்பில் ஆங்காங்கே மாட்டி வைத்திருக்கிறார். எங்கெங்கே என்னென்ன பாத்திரம் இருக்கிறது என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

மெசிக்கோ நாட்டு ஏழைக் குழந்தைகளுக்கு நிதி திரட்டுவதற்காக, வித்தியாசமான இந்த பேஷன் அணிவகுப்பு நடத்தப்பட்டது. போகிற போக்கில் துணிகளுக்கே மரியாதை இல்லாமல் ஆகப்போகிறது. புடவைக் கடைக்குப் போகாமல் பாத்திரக் கடைக்கு படையெடுக்கப் போகிறார்கள். கவச உடை மாதிரியும் இருக்கும்தானே.




# சாரதி எங்கே?

↑ அப்பளம் மாதிரி கார் நசுங்கிக் கிடக்கிறது. சாரதியின் கதி என்னாகி இருக்கும்? அதோ கதிதான் என்றா நினைக்கிறீர்கள். ஆச்சரியமே அதுதான். சாரதி சிறு காயங்களுடன் தப்பிப் பிழைத்து விட்டார்.

பஹ்ரெயின் நாட்டில் அல்-எஸ்ரிக்லஸ் நெடுஞ்சாலையில் இந்த விபத்து நடந்தது. படுவேகமாக வந்த கார் கட்டுப்பாட்டை மீறி தடுமாறி நடைபாதையில் தாவியது. விளக்குத் தூணுடன் மோதியது. அதி மோசமான மோதல். சாரதி மட்டும் கையில் சிறிய வெட்டுக்காயத்துடன் தப்பினார். தலை தப்பியது மட்டுமல்ல ஏனைய உறுப்புகள் தப்பியதும் தம்பிரான் புண்ணியம்தான்!



# பந்தாவும், பகட்டும்

← பந்தா, பகட்டு, படாடோபம் என்பவைக்கு உதாரணம் போல போஸ் கொடுக்கிறார் பாருங்கள்.

செல்லப் பிராணிகளுக்கு அத்தனை கவனிப்பு. நாய், பூனைகள் போன்றவற்றுக்கு ஆடைகள் அணிந்து அழகு பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அதனால் இனிமேல் செல்லப் பிராணிகளுக்கான புடவைக் கடைகளும் கட்டாயம் தேவை.

இலண்டனில் பிட்ஸ்பார்க் என்னும் இடத்தில் ஆடை உலகம் ஒன்று உருவாகியுள்ளது. நாய், பூனை போன்றவற்றுக்கு ரகம் ரகமான டிசைன்களில் ஆடைகள் இங்கு கிடைக்கும். எக்கச் சக்கமான கூட்டம் அலைமோதுகிறதாம்.

செல்லப் பிராணிகள் ஆடை இன்றி இருப்பது கௌரவக் குறைச்சல் என்பது மாதிரியான நிலையும் ஏற்பட்டு வருகிறது. எல்லாம் நேரம் தான். படத்தில் உள்ளது நாயா, பூனையா? சாட் சாத் பூனையேதான்.

# பார்க்கலாம் இரசிக்கலாம்

→ பல தினுசாகவும், பல அளவுகளிலும் பந்துகள் இருக்கின்றன என்பது தெரிந்ததுதான். படத்தில் உள்ள பந்து கைக்குள் மட்டுமல்ல கண்களுக்குள்ளும் அடங்காத பெரிய்ய பந்து. இதனை வைத்து விளையாட முடியாது. எட்டி நின்று பார்த்து இரசித்துவிட்டு போக வேண்டியதுதான்.

உலகக் கால்பந்து போட்டிகள் கோலாகலத் திருவிழாவாக ஆரம்பமாகப் போகின்றன அல்லவா. அதனை முன்னிட்டு தெற்கு ஃபிரான்சில் உள்ள அல்லி என்னும் இடத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரமாண்டமான பந்து இது. உலக கால் பந்து போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகள் பந்தில் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பந்தின் பிரமாண்டத்தை காண்பிக்க அதன் அருகில் சாதாரண அளவுள்ள பந்துடன் ஒரு பையனை விளையாட விட்டுள்ளார்கள். வித்தியாசம் தெரிகிறதல்லவா. அடேங்கப்பா.

இன்றைய தேதிவரை உலகின் மிகப் பெரிய பந்து இதுதானாம்.




# உருமறைப்பு

→ போரில் முக்கியமான தந்திரங்களில் ஒன்று உருமறைப்பு. எதிரிகளின் கண்களையும், வேவு விமானங்கள் ராடர்கள் போன்றவற்றையும் ஏமாற்றுவதற்காக உருமறைப்புத் தந்திரம் கையாளப்படுகிறது.

போர் வீரர்கள்கூட இலை, குலைகளால் மறைத்துக் கொண்டும், முகங்களுக்குக் கறுப்புச் சாயங்கள் பூசிக் கொண்டும் செல்வர். வாகனங்களும் பலவிதமாக சூழலுக்கு ஏற்ப மறைக்கப்படும்.

படத்தில் இருக்கிறது பாருங்கள். இது என்ன தெரியுமா? பிரிட்டனின் விமானம் தாங்கிக் கப்பல். இதன் பெயர்: ஆர்கஸ். உருமறைப்புச் செய்யப்பட்டு கடல் நடுவே நிற்கிறது. எதிரியின் இன்னொரு கப்பலில் இருந்தோ, உளவு விமானங்களில் இருந்தோ பார்த்தால்கூட விமானம் தாங்கிக் கப்பல்தான் நிற்கிறது என்பது தெரியாது. எத்தனை தத்ரூபமாக உருமறைப்புச் செய்துள்ளார்கள் பார்த்தீர்களா?



# தகவல் பெட்டி

## பெரிய மியாவ்


→ குண்டு குண்டு மனிதர்கள் பலரைத் தகவல் பெட்டி அறிமுகப்படுத்தியிருக்கிறது. ஒரு வித்தியாசமாக இருக்கட்டுமேன் என்று இந்த வாரம் குண்டுப் பூனை.

கொழுத்த பன்றிக் குட்டி மாதிரி தோற்றம் தரும் இந்தப் பூனையாரின் எடை 16 கிலோ 700 கிராம். கழுத்துச் சுற்றளவு மட்டும் 36 சென்டி மீட்டர். உருவம் போலவே தலையும் பெரிய சைஸ். இருளில் இந்த பூனையாரைக் கண்டால் பயத்தில் வெலவெலத்துப் போவீர்கள்.

உலகில் அதிக எடையுள்ள பூனை இதுதான் என்று கருதப்படுகிறது. இன்னமும் கின்னஸில் பதியப் படவில்லை. நோர்வே நாட்டில் இருக்கிறது. 'கத்தோ' என்று பெயர் வைத்துள்ளனர்.

இந்த பூனை 'மியாவ்' என்று கத்தினால் பயங்கரமான சத்தமாகக் கேட்குமாம். இராட்சதப் பூனை.





## 'கொமொடோ டிரகன்'

↑ 'கொமொடோ டிரகன்' என்ற இப்பிராணிகள் முதலை போன்ற தோற்றமுடையவை. தரையூர்வன.

மிகப் பெரிய உடும்பு என்றும் இதனை வகைப்படுத்தலாம். இந்தோனேஷியக் காடுகளில் இவை காணப்படுகின்றன. மிகப் புராதன காலத்தில் வாழ்ந்த வேதாள இனத்தின் வழித்தோன்றல் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மிகக் கூர்மையான பற்களையும் நீளமான மெல்லிய நாக்கையும் கொண்ட இப்பிராணி மிக வேகமாக ஓடக்கூடியது.

வேகமாகப் பாய்ந்தோடும் மான்களையே துரத்திப் பிடிக்கக்கூடியன இந்த டிரகன் என்பதுதான் ஆச்சரியமான உண்மை. காட்டுப் பன்றிகள், எருமைகள் போன்றவற்றையும் ருசித்து உண்ணும்.

வசமாக மாட்டினால் மனிதர்களையும் லபக் லபக்கென்று சாப்பிட்டு முடித்துவிடும்.

தானாகவே மலைகளைக் குடைந்து குகை அமைத்து வாழ்ந்துவரும். இந்த இனப் பெண் கொமொடோ டிரகன் ஒரே தடவையில் 24 முட்டைகள் இடும்.

படத்தில் இருப்பது இந்தோனேஷியா காட்டில் பிடிக்கப்பட்டு அவுஸ்திரேலிய மிருகக்காட்சிச் சாலையில் வளர்க்கப்படும் கொமாடோ டிரகன். இதன் நீளம் 217 சென்டி மீட்டர். இரவு உணவாக சுண்டெலிகள் கொடுக்கப்படுகின்றன. லபக்கென்று நாக்கை நீட்டி விழுங்குகிறது பாருங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

* எஸ்.பி.ராஜ்குமார் இயக்கத்தில் பிரபு-தேவயானி ஜோடியாக நடிக்கும் படம் 'என் உயிர் நீதானே'. இப்படம் தெலுங்கில் வெற்றி பெற்ற 'பெல்லி சேஸ் கொந்தாம்' என்ற படத்தின் தமிழ்ப் பதிப்பு ஆகும்.

* கார்த்திக்-மீனா இணைந்து நடிக்கும் 'அரிச்சந்திரா' படத்தைத் தயாரித்துவரும் சத்யஜோதி ஃபிலிம்ஸ் நிறுவனம் அடுத்து விஜய் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறது.

* பாரதிராஜா இயக்கத்தில் அவரது மகன் கதாநாயகனாக அறிமுகமாகும் 'தாஜ்மஹால்' படத்திற்குக் கதை எழுதுபவர் 'மின்சாரக் கனவு' இயக்குநர் ராஜீவ் மேனன். இவர் விரைவில் இந்திப் படமொன்றை இயக்கவுள்ளார்.

* பிரகாஷ்ராஜ்-செண்பகா ஜோடியாக நடிக்கும் 'ஸ்மைல் ப்ளீஸ்' படத்தை இயக்குபவர் ராதா மோகன். இவர் ஆர்.வி.உதயகுமாரிடம் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

* அமிதாப் பச்சன் பல வருடங்களுக்கு முன் நடித்து வெற்றிபெற்ற இந்திப் படம் 'அமர் அக்பர் அந்தோனி'. தற்போது இதே பெயரில் த்ரில்லர் மஞ்சு-ரேஷ்மா நடிக்கும் கன்னடப் படம் ஒன்று தயாராகி வருகிறது.

* அர்ஜுன்-புதுமுகம் பூஜா நடித்து வரும் 'சூர்யப் பார்வை' தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் தெலுங்கிலும் வெளியாக உள்ளது. தெலுங்கில் இப்படத்திற்கு வைக்கப்பட்டுள்ள பெயர் என்ன தெரியுமா? 'ஹலோ ஃபிரெண்ட்'.

* 'தினந்தோறும்' படத்தை இயக்கிய நாகராஜ் அடுத்து இயக்கும் படத்திற்கு 'விண்ணைத் தொடுவோம்' என்ற பெயரிட்டுள்ளார். 'தினந்தோறும்' படத்தில் நடித்த முரளி-சுவலட்சுமி ஜோடியே இப்படத்திலும் நடிக்கிறார்கள்.

* விஜயகாந்த் நடிக்கும் 'தர்மா' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் பிரேமா. கன்னட நடிகையான இவர் 'கண்களின் வார்த்தைகள்', 'ஓம்', 'மகான்' போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்தவர்.

* 'பொண்டாட்டி தேவை' படத்தில் கதாநாயகியாக நடித்த அஸ்வினியை நினைவிருக்கிறதா? சிறிது காலம் சினிமாவில் தலைகாட்டாமல் இருந்த இவர் தற்போது 'கும்பகோணம் கோபாலு' படத்தில் வினுச்சக்கரவர்த்திக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

* தமிழில் 'காதலுக்கு மரியாதை' என்ற ஒரு படத்திலும், மலையாளத்தில் 'அனியத்தி புறாவு', 'களி ஊஞ்சல்' ஆகிய இரு படங்களிலும் நடித்துள்ள ஷாலினி தற்போது 'கை கொடுன்ன நிலாவு' என்ற மலையாளப் படத்தில் மட்டும் நடித்து வருகிறார்.

# காதல் மன்னன்

அஜித்குமார்-மானு ஜோடியாக நடித்து வெளியாகியுள்ள படம் காதல் மன்னன். அடுத்தடுத்து பல படங்கள் தோல்வி கண்டதால் சோர்ந்திருந்தார் அஜித். காதல் மன்னன் குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெற்றுள்ளது.

அஜித்குமார்-விவேக் கூட்டணி இணைந்து கலக்கல் நடத்துகிறார்கள். விறு விறுப்பாக நடித்து படத்திற்கு உருக்கொடுத்துள்ளார் அஜித்குமார். 'காதல் மன்னன்' நன்றாக ஓடினால்போதும், அஜித் மார்க்கெட் மறுபடி உயரத் தொடங்கும்.

# வதந்திதானா?

மலையாளப் பட உலகில் பிஸியானவர் மஞ்சு வாரியார். தமிழில் பிரபுவுடன் 'நண்பா நண்பா' படத்தில் ஜோடி சேருகிறார்.

மலையாளத்தில் மஞ்சுவாரியாருக்கு சிபாரிசு செய்து தட்டிக் கொடுத்தவர் ஜெயராம். இருவருக்கும் இடையே உள்ள உறவு பற்றிக் கிசுகிசுக்கள் உலாவுகின்றன. மஞ்சுவாரியார் என்ன சொல்கிறார்:

"ஜெயராமுடன்தான் நான் அதிக படங்களில் நடித்தேன். அதனால் கிளப்பிவிடப்பட்ட வதந்தி இது. உண்மையிலேயே பக்கா ஜென்டில்மேன் ஜெயராம். அதேபோல பிரபுவும் பக்கா ஜென்டில்மேன்" என்கிறார் மஞ்சுவாரியார்.



சி
னி
வி
சி
ட்

விஜய்-ரம்பா
படம்: என்றென்றும் காதல்

# சோனாலி சபதம்

'சோனாலி பந்த்ரே' தமிழிலும் 'காதலர் தினம்' படத்தில் நடித்து வருகிறார். உண்மையாக சோனாலிக்கு தினமும் காதலர் தினம்தான்.

இந்திப் பட கதாநாயகர்களில் பலருடன் கிசுகிசுக்கப்பட்டவர் சோனாலி. இளம் ஹீரோவான அமீர்கானையும் ஓடி ஓடி காதலித்தார். அமீர்கான் அதிகமாக ஒட்டவில்லையாம்.

எப்படியாவது அமீர்கானை வலையில் வீழ்த்திக் காட்டுகிறேன் என்று சபதம் செய்தாராம் சோனாலி. அமீர்கானா கொக்கா? சோனாலியின் சபதம் இன்றுவரை பலித்ததாகத் தெரியவில்லை.




அல்போன்ஷா
படம்: ரத்னா

# ரம்பாவுக்கு போட்டி

சிம்ரான் வரவால் ரம்பாவின் மவுசு குறைந்து வருகிறதா? அப்படித்தான் தெரிகிறது. ஆனால் ரம்பா அதை மறுக்கிறார்.

"உங்களுடைய போட்டியாளராக யாரை நினைக்கிறீர்கள்?" இது ரம்பாவிடம் கேட்கப்பட்ட கேள்வி.

சுற்றிவளைத்து பதில் சொல்லி இருக்கிறார் ரம்பா: "குறிப்பாக யாரும் இல்லை. எல்லோரையும் போட்டியாளராகத்தான் நினைக்கிறேன். எல்லோரும் என்று சொல்வது கதாநாயகிகளை மட்டுமல்ல, என்னுடன் நடிக்கும் கதாநாயகர்களையும்தான்.

சௌந்தர்யா, தேவயாணி, மகேஸ்வரி போன்றவர்கள் என்னுடைய க்ளோஸ் ஃப்ரண்ட்ஸ். இருந்தாலும்கூட நடிக்கும்போது விட்டுக் கொடுக்க மாட்டேன். என் கொடி பறக்க வேண்டும் என்றுதான் நினைப்பேன்".

# குளிக்கும்போது வந்த பெண்

'அண்ணாமலை' படத்தில் துணி இல்லாமல் குளிக்கும் குஷ்புவைப் பார்த்து ரஜினி அதிர்ச்சியடைவார். 'கடவுளே, கடவுளே' என்று புலம்புவார்.

அந்தக் காட்சிக்கு கிடைத்த வரவேற்பால் அதே மாதிரி பல காட்சிகள் பல படங்களில் வந்துவிட்டன. சுந்தர பாண்டியன் படத்திலும் ஒரு காட்சி வருகிறது:


சுந்தரும், பாண்டியனும் இரட்டையர்கள். சுந்தரின் நண்பி ரம்பா. ஒரு நாள் சுந்தரைப் பார்க்க அவனது வீட்டுக்கு வருகிறாள் ரம்பா.

சுந்தர் வீட்டில் இல்லை. பாண்டியன் தனியாக குளித்துக் கொண்டிருக்கிறான். யாரும் இல்லை என்ற துணிச்சலில் துணி எதுவும் இல்லாமல் குளித்துக் கொண்டிருக்கிறான்.

ஒவ்வொரு அறையாக சுந்தரை தேடிக்கொண்டுவரும் ரம்பா, குளியல் அறைக் கதவைத் திறக்கிறாள். பாண்டியன் அதிர்ச்சி அடைகிறான். ரம்பாவுக்கு கடும் அதிர்ச்சி.

தனது மானத்தை காப்பாற்ற ஓடோடி வந்து ரம்பாவை கட்டிப் பிடித்துக் கொள்கிறான் பாண்டியன். இப்படியொரு கிளு கிளு காட்சிதான் படமாக்கப்பட்டுள்ளது.

பாண்டியனாக கார்த்திக் நடித்தார். ரம்பாவாக நடித்தவர் ஹீரா.



அமீர்கான்-சோனாலி

# சித்திரைப் படங்கள்

சித்திரைப் புத்தாண்டுக்கு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படும் தமிழ்ப் படங்கள்: 'காதலா காதலா' (கமல், பிரபு தேவா, சௌந்தர்யா, ரம்பா) ஜீன்ஸ் (பிரசாந்த், ஐஸ்வர்யாராய்) கல்யாண கலாட்டா (சத்யராஜ்-குஷ்பு) 'நினைத்தேன் வந்தாய்' (விஜய்-ரம்பா) வீரத்தாலாட்டு (முரளி-குஷ்பு) கவலைப்படாதே சகோதரா (பாண்டியராஜன்-தேவயாணி), இனியவளே (பிரபு-சுவலட்சுமி).

# களஞ்சியத்துடன் நெருக்கமா? தேவயாணி மறுப்பு

தமிழ்ப்பட உலகில் இன்றைய நம்பர் வன் நாயகியாகக் கருதப்படுபவர் தேவயாணி. அவரது பேட்டியில் இருந்து..

கே: ஒவ்வொரு படத்தையும் எதை அளவுகோலாகக் கொண்டு ஒப்புக்கொள்கிறீர்கள்?

தே: என் பாத்திரம் என்ன? அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதைப் பார்ப்பேன். அடுத்து இயக்குநர், கம்பனி, அதன் பின்னர் உடன் நடிக்கும் கதாநாயகன் போன்ற விடயங்களை பார்ப்பேன்.

கே: தற்போது நடித்துவரும் படங்கள்?

தே: 'செந்தூரம்', 'உனக்கும் எனக்கும் கல்யாணம்', 'பூந்தோட்டம்', 'நினைத்தேன் வந்தாய்', 'தாலாட்ட வருவாளா?' ஆகிய படங்களில் நடிக்கிறேன்.

கே: இயக்குநர் களஞ்சியத்தின் படங்களில் அடுத்தடுத்து நீங்கள் நடித்துள்ளீர்கள். அதனால் உங்களையும் அவரையும் இணைத்து செய்திகள் வர ஏதுவாகிறதே. இதைத் தவிர்க்கும் எண்ணம் இல்லையா?

தே: இப்படியெல்லாம் எப்படி கேட்க முடியுது? களஞ்சியம் என்னுடைய சகோதரர் மாதிரி. நான் அவருடைய சின்னத் தங்கச்சி. அப்படியான எண்ணத்திலேதான் நான் அவருடைய அடுத்தடுத்த படங்களில் நடித்து வருகிறேன். அதே எண்ணம்தான் அவருக்கும்.

'காதல் கோட்டை' படத்திற்கு பின்னர் எந்தப் படம் பண்ணலாம் என்று நான் யோசித்தபோது 'பூமணி'யில் வாய்ப்பு வழங்கினார். படம் ஹிட்.

அதேபோல 'சூர்யவம்சம்' ஹிட்டான பின்னர் அவருடைய 'கிழக்கும் மேற்கும்' ஹிட்டானது. அந்த நம்பிக்கையில் 'பூந்தோட்டம்' படம் பண்ணுகிறேன்.

# அப்பா கிரண்

வேட்டியை வரிந்து கட்டியபடி முரட்டு கதாநாயகனாக நடிப்பவர் ராஜ்கிரண். சமீபத்திய படங்கள் சரியாகப் போகவில்லை. அதனால் அப்பா வேடத்திற்கு தாவியுள்ளார்.

'வீரத்தாலாட்டு' படத்தில் முரளிக்கு அப்பாவாக நடிக்கிறார். முதலில் இந்த வேடத்தில் நெப்போலியன் நடிப்பதாக இருந்தது. தலைமுறை படத்திலும் அப்பாவாக நடிக்கிறார் ராஜ்கிரண். மகனாகவும், கதாநாயகனாகவும் நடிப்பவர் இயக்குநர் கே.எஸ்.அதியமான்.

# மகேஸ்வரியின் மயக்க

'மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா?' என்று மகேஸ்வரியிடம் கேட்டுப் பாருங்கள். அழகான உதடுகள் துடிக்க முறைப்பார்.

ஆனால், மகேஸ்வரியின் மனதில் ஏகப்பட்ட குழப்பங்கள். தெலுங்கில் நடிகர் சக்கரவர்த்தியை காதலித்தார். தனிமையில் இனிமை கண்டனர்.

பின்னர் சக்கரவர்த்தியுடன் மோதல். அஜித்குமாருடன் 'உல்லாசம்' படத்தின் பின்னர் ஊர்கோலம். போனார். உறவு பலமானது. பின்னர் அதுவும் முறிந்து போனது.

'காதல் மன்னன்' படத்தில் தன்னை நடிக்கவைக்கும்படி அஜித்கு... நச்சரித்தார் மகேஸ்வரி. ... முடிந்ததும் நழுவும் அஜி... மகேஸ்வரிக்கு அல்வா ... விட்டார்.

'நாமிருவர் நமக்கிருவர்' ... பிரபு தேவாவுடன் உடும்பாக... கொண்டு நடித்தார். பட... பார்த்த அளவுக்குப் போகவ...

இப்போது மறுபடி ... படவுலகப் பக்கம் போவத... சிந்திக்கிறார் மகேஸ்வரி. ... தனது பழைய தொடர்... புதுப்பிக்கத் தொடங்கியுள்...



படிப்பகம்

www.padippakam.com

# 49 அரசியல் கவிஞரின்

கக்குப் பெயர் போன பழம்பெரும்
ர். எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோருடனும்
தார்.
தில் கொடிபோல இருந்தார். பின்னர்
த்துக் காட்சியளித்தார். நடிக்க வந்த
கைக்குப் பல தொல்லைகள்.
உலகில் மட்டுமல்லாமல், அரசியல்
ந்தும் ஏகப்பட்ட தொல்லைகள். படப்
டித்தால்கூட இரவில் ஒய்வு பெற
புக்கு நெருக்கடி.
ல் சிறிதளவு போதைப் பழக்கத்துக்கு
ளார் நடிகை. அந்தப் பழக்கம்தான்
க்கக் காரணம் என்று கூறப்பட்டது.

## ...ஞர் உதவினார்

ரை நடித்துக் கொண்டிருக்கும் மிகப்
நடிகை அவர். ஆரம்ப காலத்தில்
ல்தான் நடித்தார்.
ாட்டில் முக்கிய பதவியில் உள்ள தலை
டிகைக்கும் இடையே அந்தக் காலத்தில்
யது.
ர் பெண்கள் விவகாரத்தில் ஈடுபாடுள்ள
ங்கள், சினிமாக்கள் என்பவற்றுக்கும்
ந்தக் காலத்தில் வசனங்கள் எழுதியவர்.
நடித்தும் உள்ளார்.
நடிகைகளுடன் ஜாலியாக இருப்பது
த புதிய விஷயமல்ல. அவரது பார்வையில்
சிக்கினார்.
ம், நடிகையோ பிரபலமான கவிஞருட
க்கமாக இருந்தார். கவிஞர் தன் சிபாரி
கக்கு சினிமாவிலும் பல வாய்ப்புக்களை
கொடுத்தார்.
ருக்கும், கவிஞருக்கும் இடையே நட்பு
ஆனாலும் கவிஞரின் காதலியையும் அவ்வப்
ணைத்துக் கொண்டார் தலைவர். இது
த் தெரியவந்தபோதும் கவிஞர் அதிர்ச்சி
லை. தலைவரின் சுபாவம் கவிஞர் அறியாதது

ருக்கும், கவிஞருக்கும் இடையே ஒரு பெரிய
ம் இருந்தது.
தேவை முடிந்ததும் தலைவர் கைகழுவி

# தலைவரின் அந்தரங்க வேட்டை

## தயாள குணம்

விடுவார். கவிஞர் அப்படிப்பட்டவரல்ல. தொடர்ந்து உதவும் குணம் கொண்டவர். இரக்க சுபாவம் உடையவர். தன் சொந்த சம்பாத்தியத்தில் இருந்து உதவி செய்யும் தாராள குணம் படைத்தவர்.

பல நடிகைகள் கவிஞருடன் உடல் ரீதியாக மட்டுமல்லாமல், ஆத்மார்த்தமான நட்பையும் கொண்டிருந்தனர். கவிஞரின் குணம்தான் காரணம்.

### ஆசை வளர்ந்தது

அந்த நடிகை படிப்படியாக சினிமா உலகில் பிரபலமாகி, நகைச்சுவை நடிப்பிலும் வெளுத்து வாங்கத் தொடங்கினார்.

பிரபலமான நடிகைகளை தன் படுக்கையறைக்கு அழைப்பது என்றால் தலைவருக்கு ஏக குஷி.

நடிகையுடன் ஏற்கனவே தொடர்பு இருந்தாலும், நடிகை பிரபலமான பின்னர் தலைவரின் ஆசை பன்மடங்காகியது.

நடிகையும் சில காலம் தலைவரின் இழுப்புக்கு எல்லாம் இசைந்து போகவேண்டி இருந்தது.

பின்னர் ஒருகாலத்தில் தலைவர் வீழ்ச்சி முகம் கண்டபோது நடிகைக்கு பலத்த சந்தோசம்.

தலைவரின் வக்கிர ஆசைகளையும், மிருகம்போல தன்னுடன் நடந்து கொண்டதையும் தனக்கு நெருக்கமான நடிகைகள் சிலரிடம் கூறி வேதனைப்பட்டார் நடிகை.

அதனால்தான் ஒரு கட்டத்தில் அந்தத் தலைவருக்கு எதிரான அணியில் நின்று தேர்தல் பிரசாரம் செய்தார். அவரது கஷ்டகாலம் அவர் பிரசாரம் செய்த கட்சி படுதோல்வி அடைந்தது.

### பதவி இல்லை

'ஜெய' நடிகைமீதும் தலைவருக்கு ஒரு கண் இருந்தது. ஆனால் பிரபல நடிகரின் அன்பைப் பெற்ற நடிகையாக இவர் திகழ்ந்ததால், தலைவரால் நெருங்க முடியவில்லை.

அந்த நடிகைக்கு கட்சியில் ஒரு பதவி கொடுக்குமாறு கேட்டார் நடிகர். தலைவர் மறுத்து விட்டார்.

தொண்டர்கள் என்ன நினைப்பார்கள்? பெண் என்றால் பக்கத்தில் வைத்து பதவியும் கொடுப்போம் என்றுதானே நினைப்பார்கள் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று நியாயம் கூறினார்.

'ஜெய' நடிகை மட்டும் தலைவரை அனுசரித்துப் போயிருந்தால், தொண்டர்களாவது குண்டர்களாவது, நடிகைக்கு கௌரவம் கொடுக்கப்பட்டிருக்கும்.

## ஜூகிக்கு கல்யாணம்?

'மழை வரப்போகுது' படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடி ஜூகி சாவ்லா. மும்பாய் சினிமா உலகின் இந்த இளங்குயிலுக்கும், தொழிலதிபர் ஒருவருக்கும் கல்யாணம் என்று யாரோ கதை கட்டிவிட்டனர். 'மழை வரப்போகுது' படத் தயாரிப்பாளர்கள் கதி கலங்கிப் போனார்கள்.

முற்பணமாக சுளையாக ஒரு தொகை கொடுத்துவிட்டனர். திடீரென்று திருமணம் செய்துகொண்டு 'டாட்டா' காட்டிவிட்டால் எல்லாம் போச்சு.

ஜூகியிடமே நேரில் போய் தயங்கித் தயங்கிக் கேட்டார்களாம். எல்லாம் பொய். காதலர் இருப்பது மெய். தற்போதைக்கு திருமணம் கிடையாது என்பது மெய்யிலும் மெய்' என்று நூறுசதவீத உத்தரவாதம் கொடுத்தாராம் ஜூகி. அதன்பின்னர்தான் தயாரிப்பாளர்களுக்கு நிம்மதி.

## காதலர் மூவர்! காதலி ஒருவர்!

அப்பாஸ், அம்சவிர்தன், கரண் ஆகியோர் இணைந்து நடிக்கும் படம் 'வேண்டுமடி நீ எனக்கு'. அம்சவிர்தன் நடிகர் ரவிச்சந்திரனின் மகன்.

கதாநாயகியாக ப்ரீதா விஜயகுமார் நடிக்கிறார். மூன்று கதாநாயகன்களுக்கும் ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணென்று ஒரே ஒரு கதாநாயகி.

ஒரு இளம் பெண்ணுக்கும் மூன்று இளைஞர்களுக்கும் இடையே நடைபெறும் காதல் கதை.

இயக்குநர் பவித்ரனிடம் உதவி இயக்குநராக இருந்த திருமாவளவன் இயக்குநராக அறிமுகமாகிறார். இசை: இளையராஜா. மணிவண்ணன், ரவிச்சந்திரன், கவிதா, ஜீவா, ரூபஸ்ரீ ஆகியோரும் நடித்துள்ளனர்.



பாண்டியராஜன்-ரஸிகா
படம்: கபடி கபடி



ஜூஹி சாவ்லா

## காதோடு சொல்லுகிறோம்

மூன்றெழுத்து '..மா' நடிகை தன் காதலரான 'குமார்' நடிகர்மீது பொல்லாத கோபத்தில் இருக்கிறார். தமிழக சஞ்சிகைக்கு நடிகர்பற்றி மென்மையாக பேட்டி கொடுத்தார். ஆனால் மும்பாய் சஞ்சிகை ஒன்றுக்கு தாறுமாறாக பேட்டி கொடுத்துள்ளார். நடிகரை நார் நாராகக் கிழித்துவிட்டார். நடிகைக்காக தன் மனைவியிடம் விவாகரத்து பெறவும் துணிந்த நடிகர் இப்போது இடிந்து போய் இருக்கிறார். மக்களும் அவரை தோற்கடித்துவிட்டார்கள். இருபக்க இடி.

'சங்க' நடிகையை இப்போது சென்னையிலே பிடிக்க முடியாமல் உள்ளதாம். வீட்டில் விசாரித்தால் ஆந்திர மாநிலத்தில் இருப்பதாக கூறுகிறார்களாம். அங்கு தெலுங்குப் படங்களில் பிஸியோ என்று ஆராய்ந்தால், அப்படித் தெரியவில்லை. பின்னர் ஏன் அங்கு போகிறார்? அங்குள்ள வர்த்தக இளைஞர் ஒருவருடன் ஈருடலும் ஒருயிருமாகிவிட்டாராம். காதலர் பசையுள்ளவராம்.

'பா' ராஜனுக்கும் ரஸிப்பான நடிகைக்கும் இடையே உள்ள நெருக்கம் யாவரும் அறிந்த கதையாகிவிட்டது. படப்பிடிப்பு முடிந்தால் இருவரும் இணைந்து எங்கு செல்கிறார்கள்? என்று படப்பிடிப்பு குழுவினரிடம் ஒரு நிருபர் கேட்டாராம். அவர்கள் சொன்ன பதில், 'கபடி, கபடி'க்கு பயிற்சி எடுக்கப் போகிறார்கள்.

வள்ளி நாயகி இப்போது எதையும் இழக்கத் தயாராக இருக்கிறார். எப்படி வேண்டுமானாலும் நடிக்கத் தயார் என்று தன் கவர்ச்சிப் புகைப்படங்கள் சிலவற்றை முக்கிய இயக்குநர்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறாராம். படத்தை பார்த்து சிலர் அழைத்தார்களாம். ஆனால் நடிக்க மட்டும் சான்ஸ் கொடுக்கவில்லையாம். வெறுத்தும் போயிருக்கிறார் நாயகி.

அடுத்த படத்தில் தன்னை நடிக்க வைக்க வேண்டும் என்று சுந்தரமான இயக்குநரிடம் கட்டளை பிறப்பித்துள்ளார் 'பூ' நடிகை.

தேர்தலில் நின்று தோல்வி கண்ட நடிகரைத்தான் 'ஆசை' நாயகன் நடிப்பில் பின்பற்றுகிறாராம். அது மட்டுமல்ல, இருவருக்கும் இடையே பெயரிலும் ஒற்றுமை இருக்கிறது. இருவர் பெயரிலும் 'குமார்' இருக்கிறது. முதலாவது 'குமார்' நடிகர் காதலித்த 'ஹிர' நடிகையைத்தான் ஆசை நாயகனான குமார் காதலித்தார்.

கவர்ச்சி நடனமாடும் வாரிசு ஜோதி நடிகை, டாக்டர் ஒருவரைத்தான் திருமணம் செய்துள்ளாராம். நடிகை இப்போது கர்ப்பமாக இருக்கிறார் என்ற தகவலும் உண்மை தானாம். அதனால் குலுக்கல் நடனம் ஆட வந்த வாய்ப்புக்களை 'பின்னர் பார்க்கலாம்' என்று ஒத்தி வைத்துள்ளாராம்.

## கார்த்திக் – ரோஜா

கார்த்திக்-ரோஜா இணைநது நடிக்கும் படம் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன். படப்பிடிப்புக்கள் வேகமாக நடந்து வருகின்றன. இயக்கம்: விக்ரமன். இசை: எஸ்.ஏ.ராஜ்குமார்.

'புதுவசந்தம்', 'பூவே உனக்காக' போன்ற விக்ரமனின் வெற்றிப் படங்களின் வரிசையில் இதுவும் இணையுமா? 'ஆம்' என்கிறார் விக்ரமன்.

## ...கம்

...மாரிடம்
...சிகண்டு
...த்குமார்
...காடுத்து

...படத்தில்
... ஒட்டிக்
...ம் எதிர்
...யில்லை.
...தலுங்குப்
... பற்றிச்
அதனால்
...களைப்
...ாராம்.

## மீனாவுக்கு காதல் கடிதம் பக்தனின் மயக்கம்

நடிகைகளுக்கு ரசிகர்கள் எழுதும் கடிதங்களில் ஜொள்ளு இல்லாமல் போகுமா? நடிகை மீனாவுக்கு ரசிகர் ஒருவர் எழுதிய காதல் கவிதையைப் பாருங்கள்.

கண்ணில் கலந்த கண்மணியே, என்னில் குடிபுகுந்த உயிரே! எப்போதும் உன் பெயரை ஜெபித்துக் கொண்டிருக்கும் உன் பக்தன் எழுதும் அன்பு மடல்.

உன்னைப் பார்த்ததால் கவிஞன் ஆனவன் நான். காளிக்கு ஒரு தாசனைப்போல, மீனாவுக்கு இந்த தாசன்.

உன்னை காவியமாக்கும் பெரும் காரியத்தில் மனம் இறங்கி இருக்கிறது.

உன் கவிதை பேசும் வாயாடிக் கண்களும், புன்னகை பூத்த புதுரோஜா உதடுகளும், அந்தக் குளிர் சிரிப்பும், என்னை கனவுலகில் களவு போக வைக்கிறது.

நீ என் அறையின் சுவர்களில் மட்டும் அழகோவியம் ஆகவில்லை. என் மனசெல்லாம் நிரம்பி இருப்பதும் நீதான்.

நீ எனக்கு மனைவியாக கிடைக்க முடியாது என்பதால், உன்னைப் போலவே பெயரும், உருவமும் சிரிப்பும் கொண்ட பெண்ணாக தேடி மணந்து கொண்டிருக்கிறேன்.

பொற்சிலையே! பொற் சித்திரமே! நீ நடித்த பொற்காலம் படத்தை உனக்காகவே முப்பது முறை பார்த்தேன். எப்போதும் உன் நினைவில் தவமிருக்கும் உன்னை பூஜிக்கும் இந்த பக்தனுக்கு கனவில் மட்டும் வந்து காட்சி தரும் நீ. நிஜத்தில் எப்போது வருவாய்? தரிசனம்! தருவாய்?

இப்படிக்கு: உன் 'உம்மா' கேட்டு ஒற்றைக் கால் தவமிருக்கும் பக்தன்.

## கார் – ஒஸ்கார்

'காதலா காதலா' பட கசட் வெளியீட்டு விழாவில் கமலை ஒரேயடியாக தூக்கிவிட்டார் வாலி. அவர் பேசியது இதுதான்:

"இந்தியாவிலேயே சிறந்த ஒரே நடிகன் கமல்தான்யா... இதைச் சொல்லதில் வேணும். அது என்னைத் தவிர வேறு யாருக்கும் கிடையவே கிடையாது.

எத்தனையோ நடிகர்கள் சம்பாதித்து விதம் விதமாக கார் வாங்கியிருக்கலாம். ஆனால் ஒஸ்கார் வாங்கப் போகும் ஒரே தமிழ் நடிகன் கமல்தான். கமல் கிழவன் வேசம் போட்டு நடித்த 'இந்தியன்' பார்த்தேன். பிரமாதம்."


படிப்பகம்

www.padippakam.com

# உன் வாழ்வின் உச்சத்தைக் காண!

சொந்தங்களின் அன்பு
தேடிவர முடியாத
தேசமொன்றில் நீ!
சோகங்களை மறப்பதான
வைராக்கியத்துடன்
தொலை தூரத்தில்
தன்னந்தனியே நான்!
–o–
உனது அன்பின்
அடிச்சுவடுகளைத் தவிர
என் உள்ளத்துக்குள்
ஆறுதலை எடுத்துவர–இங்கு
எதுவுமே இல்லை!
எதுவுமே இல்லை!!
–o–
விழிதொட முடியாத
தொலைவிலிருந்து
விபரிக்க முடியாத
பாசத்தின் தவிப்போடு–உன்
குரல் மட்டுமே
காற்றலைகளில் கேட்கிறது!
–o–
உன்னிடம்
மேற்கே வரத்துடிக்கும்
என் கனவுகள் யாவும்
விதியின் புதிரின் முன்
எதுவும் புரியாமல்
தடுமாறுகின்றன!
–o–
இருண்டு போன என்
வானத்திலுமே
தீபம் ஏந்தியவாறு
ஈராயிரம் நட்சத்திரங்களின்
ஒளிப் பின்னணியில்
உன் நினைவுகளே
எனைக் கடக்கின்றன!
–o–
மாரால் உனது
அந்தகார உலகத்துள்
ஒளி வெள்ளமொன்று
பாய்ச்சப்பட்டதோ.
மாரின் அன்பு
சூன்யமாய்ப் போயிருந்த
உன் விழிகளுக்குள்
நந்தவனமொன்றைக்
கொண்டு வந்து சேர்த்ததோ.
அந்த...
உயிரின் உயிர் நானோ?
இவள்...?
உந்தன் நிழல் நானோ?
–o–
ஏழாண்டு காலமாய்
உன் உலகு வெறுத்தொதுக்கிய
ஒளிக்கிரணமெல்லாம்
இனி என்றாவது
உன் வாழ்வுக்கு
உதயத்தைத் தந்திடுமோ?
–o–
எதுவாலும்
ஈடு செய்ய இயலாத
நீண்ட நெருடு
பொட்டல் வெளி
உன் மனதில் பரந்துள்ளதே..!
அந்த வெற்றிடத்தை
ஐரோப்பா நிரப்புமா?
–o–
வாழ்க்கையின்
பொருளை மறந்து,
சுவையை இழந்து,
சீவனை பிரிந்து– அதைச்
சூனியத்துக்குள்
தொலைத்து விடாதே!
–o–
உனது வாழ்வின்
உச்சத்தைக் காணவே
எனதுயிரும் உணர்வுகளும்
காலமெலாம் காத்திருக்கும்!
–o–

பஹீமா ஜஹான்

## ஏப்ரல் 1

காலையிலேயே
தொலைபேசி அழைப்பு
கலகலவென சிரிப்பு.
"முட்டாள்!" என்றான்
ஏமாற்றிவிட்டானாம்.
இல்லை.....
நேற்றுவரை
தூரத்தில் தான் இருந்தேன்!
இன்று?
இனி என்ன
என்றுமே ஏப்ரல்
முதலாம் திகதிதான்!

எஸ். உதிரன்-கொழும்பு-4.

## அறுவடை

தேன் கிண்ணம்

வாழ்க்கை இங்கு
யாருக்குச் சொந்தம்–
உனக்கா எனக்கா?
***
நீயும் நானும்
நிலைத்திருப்போம்–என
நினைத்திருப்போம்!
***
யாருக்குத் தெரியும்–
எங்கு எமக்கு
மரணக் களமென்று?
***
இது மண்ணுக்கான
'மரணிப்பு' யுத்தமல்ல;
மனங்களின் யுத்தம்!
***
மரணங்கள்
மதிக்கப்படுகின்றன;
வணங்கப்படுகின்றன.
***
இப்படிப் போனால்
எப்படி இவ்விழ
எவ்வாறு தனைக்கும்?
***
பொதுவாக மட்டும்
கவலைப் படுங்கள்;
சிறப்பாக வேண்டாம்!
***
என்ன செய்வதென்று
தடுமாறி தடுமாறி
தவழ்வதை விட
***
ஒன்றுமே செய்யாமல்
சற்று
எழுந்து நில்லுங்கள்!
***
துயர்களை துடையுங்கள்!
***
ஏன் என்றால்
இது
துயர்களின் விழைநிலம்.

சுபாவரன்- கண்டி.



மனிதவேட்டையில் உயிர் தப்பிய பிள்ளைகளை அணைத்தபடி அம்மா.

# வரலாற்று அநியாயம்

## பணியமறுத்த பாலஸ்தீனம்

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அதன் நிலத்தை விழுங்க வேண்டும். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் பாலஸ்தீனியர்களை அழிக்கக் கையாண்ட தந்திரம் அதுதான்.

சொந்த மண்ணைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட பாலஸ்தீனியர்கள் அயல் நாடுகளான ஜோர்டான், லெபனான், சிரியா, எகிப்து போன்ற நாடுகளில் அகதி முகாம்களில் வாழ்ந்தனர்.

தகரக் கொட்டகைகளில் அறை ஒன்றுக்கு 6–8 பேர் வீதம் வசித்தனர். இந்த முகாம்களை 'முகையாம் பாலஸ்தீன்' என அழைப்பர்.

கிழக்கு லெபனானில் ரல் அல்–ஸாற்றார் எனும் பகுதியில் இருந்த பாலஸ்தீன அகதி முகாமை 1976 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் இஸ்ரேலியப் படைகள் முற்றுகையிட்டன.

பல்லாயிரம் ஷெல்கள் பொழியப்பட்டன. துப்பாக்கிகள் தோட்டாக்களைக் கக்கின. முகாம் கட்டடங்கள் தகர்ந்தன. 27 ஆயிரம் பாலஸ்தீன அகதிகள் விரட்டியடிக்கப்பட்டனர்.

ஆயிரக் கணக்கான அகதிகள்– சிறுவர், பெண்கள், முதியவர்கள் உட்பட படுகொலையாகினர். புல்டோசர்களால் நூற்றுக்கணக்கான உடல்கள் மலைபோல் தள்ளி குவிக்கப்பட்டன.

பலநாட்களாக இந்த முகாம் முற்றுகையிடப்பட்டது. அதனால் அகதிகள் பட்டினி கிடந்தனர். பச்சிளம் குழந்தைகள் பசியால் துடித்தனர்.

இங்கிருந்து தப்பிய அகதித் தாய் ஒருவர் கூறினார்: 'ஒரு குவளை இரத்தத்தை விட ஒரு குவளைத் தண்ணீர் விலைமதிப்பற்றதாக இருந்தது!'

அவ்வாறு இருந்தும், 'எதிரியிடம் மண்டியிடோம், இறுதிவரை போராடுவோம்!' என்று முகாமில் இருந்த போராளிகள் பதில் தாக்குதல் நடத்தினர். அதனால்தான் 27 ஆயிரம் பேர்வரை தப்பிப் பிழைக்க முடிந்தது. இல்லையெனில் ஷெல் வீச்சுக்களால் முகாமில் இருந்த மேலும் பல ஆயிரம்பேர் பலியாகி இருப்பர்.

மனித வரலாற்றில் நடந்த மிகப்பெரும் அநியாயங்களில் ஒன்று இது. பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேலுக்குள் நடத்தும் தாக்குதல்களைக் கண்டித்த அமெரிக்கா இத்தகைய படுகொலை வேட்டைகளை வேடிக்கை பார்த்தது.

"போராடினால் இதுதான் நடக்கும். அடங்கிவாழப் பழகுங்கள். உங்களுக்கு உணவு தருகிறோம். குடிக்க நல்ல தண்ணீர் தருகிறோம். வேலையும் தருகிறோம். பிழைத்துப் போங்கள்!" என்று சொல்லாமல் சொன்னது இஸ்ரேல்.

ஆனால், பாலஸ்தீனர்கள் மண்டியிடவில்லை. போராடியதால்தான் அழிவில் இருந்து தப்பினர். இன்று ஓரளவு சுயாட்சி கிடைத்துள்ளது. இது முதற்படிதான் என்கிறார் யாசிர் அரபாத். "இஸ்ரேலை நம்ப முடியாது! தொடர்ந்து போராடுவோம்!" என்கிறார்கள் பாலஸ்தீன போராளிகள்."

பாலஸ்தீனியர்கள் இப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பது அவர்கள் போராடியதால் தான். இல்லையெனில் தடயமே இல்லாமல் அழிந்தும், கரைந்தும் போயிருப்பார்கள். ■



படுகாயமடைந்த பாலஸ்தீனிய குடிமகன் ஒருவர் வெற்றிக்கு அடையாளமாக விரலைக் காண்பிக்கிறார். மனதில் உரம்.

உன் மடியைத்தா...!
நானொரு பூனைக்குட்டியாய்
சுருண்டிருக்க!
•
என் பூர்வீகக் கனவுகளை
சொல்லிச் சொல்லி விம்முவேன்;
என் தலை தடவி ஆறுதல் தா!
•
எனக்குரிய சிவப்புரோசா
இரத்தமொழுக,
என்னிதயம் புகுந்த
கதை சொல்ல, உன் மடியைத்தா!
•
நமக்குரிய வஸந்தத்தை
எந்தக் காலன் திருடிப்போனான்?
•
பேனாவின் நாவிலிருந்து
நம் வாழ்க்கை நிச்சயிக்கப்பட்டது.
•
தாலியேறிய மறுகணத்தில்
நான் இறந்து போயின்,
என் மலட்டுக்கவிதைகளை
நீ– பாதுகாத்துவா!
•
ஜீவனுள்ள சிவப்பு மலரே
நீ எப்படி இருக்கிறாய்–
என் பிரார்த்தனைகளால்!

என். சுஹா–கள்–எலிய.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் மேன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்கலச்கம், குடும்பக் கலகம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் செலவு, கடன் படல். | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| சனி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பொருள் நஷ்டம், மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் சஞ்சலம், பெரியோர் பகை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பெரியோர் பகை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(05.04.1998 தொடக்கம் 11.04.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன், சனி. |
| மேடம் | - செவ்வாய். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - வெள்ளி, வியாழன், கேது. |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிங்கம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரியக் கேடு, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பலவித கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி; அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| சனி- பலவித பேறு, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, மனக் கிலேசம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| புதன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பண முடக்கல். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்).

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும் | பி.ப. | 3 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பலவித கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பிரயாண கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- பயனற்ற செயல், காரியக் கேடு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- முயற்சி தடை, வீண் விரயம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 12 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பகல் | 11 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியத் தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com

# டேக் இட் ஈஸி டேக் இட் ஈஸி

எப்போதும் மன அழுத்தம் கொண்டிருப்பவர்களும் தூக்கமின்மையால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் மிக எளிதாக ஞாபகக் கோளாறினால் அவதிப்படுவார்கள். இவர்களுக்குச் சிறிது முன்னர், தான் செய்த வேலை கூட ஞாபகத்திற்கு வராது. அடுத்ததாக, நல்ல ஆரோக்கியமான நிலையிலிருக்கக் கூடியவர்கள் ஞாபகமின்மையால் அவதிப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி அதிகமான வேலைப்பளு, கோபம், விரக்தி, தூக்கமின்மை சத்தில்லாத உணவு மற்றும் உடற்பயிற்சியில்லாத உடல் உள்ளவர்களும் ஞாபக மறதியினால் அவதிப்படுகின்றனர்.



இவர்களுக்காக சில டிப்ஸ் இதோ:

### கோபத்தை நிறுத்துங்கள்:

மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும்போது சுரக்கும் ஹோர்மோன்கள் மூளையை மிகவும் பாதிக்கின்றன. மேலும் உச்சக்கட்டமாக கோபம் ஏற்படும்போது, மூளையிலுள்ள திசுக்கள் அழிக்கப்படுகின்றன. எனவே முதலில் எதற்கும் கோபப்படுவதை நிறுத்துங்கள். அதுவே உங்கள் உடல் நலத்தைக் கெடுக்கும் முதல் எதிரி.

### நன்றாகத் தூங்குங்கள்!

அதிகமான வேலைப்பளு காரணமாகச் சரியாகத் தூங்க முடியாதவர்களும் உண்டு. சராசரியான மனிதர்கள் ஒரு நாளைக்கு 8 மணிநேரமாவது தூங்க வேண்டும். பொதுவாக விஞ்ஞானிகள் சொல்வது ஒரு மனிதன் முதல் தடவையாக ஒரு வார்த்தையைக் கேட்கும் போது அது மூளையின் தற்காலிகப் பகுதிகளிலேயே சென்றடைகிறது. ஆனால் அது மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தப்படாவிட்டால், அது வேகமாக அழிகிறது. எனவே மனதை ஒருமுகப்படுத்த சிறந்த தூக்கமே உதவும்.

### உடற்பயிற்சி செய்யுங்கள்

வாரத்திற்கு மூன்று நாட்களாவது தினமும் அரைமணிநேரம் உடற்பயிற்சி செய்வது ஞாபகசக்தி பெருக்கத்திற்கு உதவும். உடலின் இரத்த ஓட்டம் சீரடைவதால் ஞாபகசக்தி பெருகும்.

### மூளைக்கு வேலை

மூளைக்கு வேலை கொடுங்கள். விதவிதமான புத்தகங்களைப் படியுங்கள். பல விடயங்களைப் பற்றி விவாதம் செய்யுங்கள்.

### சத்துணவு சாப்பிடுங்கள்!

சத்தான உணவுகளை அளவோடு சாப்பிடுங்கள். அதிகளவான சாப்பாடும் உங்களை மந்தபுத்தி உள்ளவராக மாற்றிவிடும். கொழுப்புணவுகளைக் குறைப்பதும் நல்லது.

### மருந்துகளைத் தவிருங்கள்!

சில குறிப்பிட்ட வகை மருந்துப்பொருட்கள் மூளையின் செயற்பாட்டைக் குறைக்கின்றன. எனவே அப்படிப்பட்ட மருந்துகளைத் தவிருங்கள். மயக்கமூட்டக்கூடிய மருந்துப் பொருட்களும் அதிகமான அல்கஹோல் சாப்பிடுவதும் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும். ஆராய்ச்சிகளின்படி குடிகாரர்கள் வெகு விரைவிலேயே தங்கள் ஞாபக சக்தியை இழக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

### மன அழுத்தத்திற்கு விடை கொடுங்கள்!

மன அழுத்தங்கள் தற்கொலை அளவுக்குக்கூடக் கொண்டு போய்விடக்கூடியவை. எனவே எப்போதும் மனதை இலேசாக வைத்திருக்கப் பழகிக்கொள்ளுங்கள். எந்த வேலை செய்தாலும் சிறிது ஓய்வெடுப்பது நல்லது.

## எண்ணெய்க் குளியல்

வாதநோயை அகற்றவும், உடல் வலிவு, தூக்கம், உடற்கட்டு நன்கு அமையவும் எண்ணெய்க் குளியல் எடுக்க வேண்டும். இது மட்டுமன்றி உடலின் சூட்டைக் கணிசமான அளவு எண்ணெய்க் குளியல் போக்குகின்றது.

தேர்ச் சக்கரத்தின் எண்ணெய்க் குடத்திற்கு எண்ணெய் பயனளிப்பது போல உடலுக்கும் எண்ணெய் பயனளிக்கிறது.

தலையில் எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் தலைமுடிக்கு நன்மை உண்டாவதோடு, கபாலம் என்னும் மண்டையோடும் புலன்களும் வலுவுறுகின்றன.

பாதங்களில் எண்ணெய் தேய்த்துக் கொண்டால், பாதம் நன்கு உறுதிபெறுவதோடு, தூக்கம், தெளிவான கண்பார்வை போன்றவற்றைப் பெறலாம். பாதத்தில் உணர்ச்சியின்மை, வலி, மரத்துப்போதல், சுருக்கம், வெடிப்பு போன்ற துன்பங்களும் அகலுகின்றன.

கபம், வாந்தி, பேதி இவைகளால் துன்புறுகிறவர்களும், அஜீரணக் கோளாறு உள்ளவர்களும் எண்ணெய்க் குளியலைத் தவிர்க்க வேண்டும். ■

## எது சிறந்தது?

கோப்பியை விட தேனீர்தான் அதிக கேடு இல்லாதது என்று கண்டறியப் பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 5 கோப்பைக்கு மேல் கோப்பி குடிப்பவர்கள். அவ்வாறு குடிக்காதவர்களைவிட இருமடங்கு அதிகமாக இருதய நோய்க்கு உள்ளாகிறார்கள்.



இரத்தத்தில் கொழுப்பின் அளவை கோப்பி அதிகப்படுத்துகின்றது. ஆனால் தேனீர் குடிப்பதால் இவ்வாறு அதிகமாவதில்லை. மேலும் தேனீரிலுள்ள ஒரு பொருள் இரத்தக் குழாய்களைச் சற்று விரிவடையச் செய்யக்கூடியது.

இதனால் இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது. கோப்பியோ தேனீரோ எதுவாக இருந்தாலும் சீனியை மிகக் குறைவாகச் சேர்த்துக் கொள்வது உடல் நலத்திற்கு நன்மை பயக்கும். ■


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** DL

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-04-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 29

புவனா



'குதிரையேற்றப் பயிற்சியாளரான கம்பீர இளைஞர் ஜேம்ஸ் ஹெவிற்றுடன் இளவரசி டயானா நெருக்கம்' என்று பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

செய்தியைக் கண்ட டயானா முதலில் அதிர்ச்சியுற்றார். தங்கள் நெருக்கத்தை இத்தனை விரைவாக மோப்பம் பிடித்து விட்டார்களே! என்று ஆச்சரியமும் கொண்டார்.

அதேசமயம், அச் செய்தியால் சாள்ஸ்சும் அரச குடும்பத்தினரும் அவமானப் பட்டுக் கொள்ளட்டும் என்றும் கருதினார்.

ஜேம்ஸ் ஹெவிற்றின் அழைப்பை ஏற்று அவரது இல்லத்துக்குச் சென்றார் டயானா.,

அங்கே ஹெவிற்றின் பெற்றோரும் இருந்தனர். தங்கள் மகனின் அழைப்பை ஏற்று இளவரசி நேரில் வந்ததை எண்ணி அவரது பெற்றோர் மகிழ்ந்தனர். டயானாவை விழுந்து, விழுந்து உபசரித்தனர்.

அந்தப் பெற்றோர்களது அன்பும், கவனிப்பும் அன்புக்காக ஏங்கிய டயானாவை கவர்ந்தன.

அதனால் அடிக்கடி ஹெவிற்றின் இல்லத்துக்குச் சென்றுவரத் தொடங்கினார்.

அவ்வாறு சென்றுவரும் போது பெற்றோர் இல்லாத சமயங்களில் ஹெவிற்றின் அணைப்பில் சிக்கிக் கொள்வார்.

எனினும், இனிய முத்தம், இதமான வருடல்கள் என்பவற்றோடு இருவரும் நிறுத்திக் கொண்டனர்.

டயானா-ஜேம்ஸ் ஹெவிற் உறவு பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் மேலும் சூடாக வெளிவரத் தொடங்கின.

அதனால், அரண்மனைக்குச் சென்று குதிரைப் பயிற்சி கொடுப்பதை நிறுத்திக் கொண்டார் ஜேம்ஸ் ஹெவிற்.

ஆனால், இருவரும் தினமும் இரவில் தொலைபேசியில் பேசிக்கொள்வர். எல்லாமே காதலும், கிளுகிளுப்புமான பேச்சுக்கள்தான்.

அப்படிப் பேசுவதும், தொலைபேசி அழைப்புக்காக நகம் கடித்துத் துப்பிக் கொண்டு காத்திருப்பதும்,தொலைபேசி வழியாக முத்தங்களை அனுப்புவதும் டயானாவுக்கு மாறுதலான அனுபவங்களாக இருந்தன.

சில சந்தர்ப்பங்களில் 'தான் செய்வது சரிதானா?' என்ற கேள்வி டயானாவைக் குடையும்.

சாள்ஸ்சும், அரச குடும்பமும் தன்னை ஒரு உயிருள்ள, உணர்வுள்ள மனுஷியாகவே நினைக்கவில்லையே என்ற கோபமும், விரக்தியும் அக் கேள்வியை இருந்த இடம் தெரியாமல் செய்துவிடும்.

### அந்தரங்க வட்டாரம்

தன் அந்தரங்கங்களைப் பரிமாறிக் கொள்வதற்காக சில சிநேகிதிகளை தெரிவு செய்து வைத்திருந்தார் டயானா.

அவர்களிடம் ஒளிவு மறைவு இன்றி தன் மனக் குமுறல்களையும், தன் அபிலாசைகளையும் கொட்டித் தீர்த்துவிடுவார்.

அதேபோல சாள்சும் தன் அந்தரங்கங்களைப் பரிமாறிக்கொள்ள ஒரு குழுவை வைத்திருந்தார்.

அக்குழுவில் சாள்ஸ்சின் காதலி கமீலா பார்க்கரும் இருந்தார்.

டயானா பற்றிய தன் குற்றச்சாட்டுக்களை சாள்ஸ் அங்குதான் அடுக்குவார்.

சாள்ஸின் மாளிகையான ஹைறகுரோவ் இருந்த வீதியில்தான் கமீலாவின் வீடும் இருந்தது.

மிகக் குறுகிய தூரம் என்பதால் கமீலா நடந்தே சென்றுவிடுவார். அடிக்கடி சாள்ஸ்சை சந்திக்கவும் வசதியாக இருந்தது.

பத்திரிகையாளர்கள் மோப்பம் பிடிக்கத் தொடங்கியதால், தனது ஃபோர்ட் காரில் சாள்ஸின் மாளிகைக்கு செல்லத் தொடங்கினார் கமீலா.

பத்திரிகையாளர்களை ஏமாற்ற முடியுமா? கமீலாவின் கார் ஹைறகுரோவ் மாளிகையில் நின்றபோது புகைப் படம் எடுத்து பிரசுரித்துவிட்டனர்.

அது மட்டுமல்ல ஹைறகுரோவ் மாளிகையில் பணியாற்றிய சில ஊழியர்களையும் பத்திரிகைகள் சில பணம் கொடுத்து வாங்கின.

சாள்ஸ்–கமீலா நடவடிக்கைகள் பற்றி உன்னிப்பாக கவனித்து தகவல் கொடுப்பது தான் அவர்களது பணி.

கமீலா ஒரு முறை சாள்ஸின் மடியில் முகம் கவிழ்ந்து கிடந்ததை படம் பிடிக்க முயன்றார் ஒரு பணியாளர். அதற்கிடையே கமீலா முகத்தை உயர்த்திக் கொண்டதாலும், சாள்ஸ் இயல்பான நிலைக்கு வந்துவிட்டதாலும், எங்கே மாட்டிக் கொள்ளுவோமோ என்ற பயத்தில் பணியாள் நழுவிவிட்டார்.

எனினும் ஏனைய தகவல்கள் பணியாட்களால் பத்திரிகைகளுக்கு கொடுக்கப் பட்டே வந்தன. பத்திரிகைகளின் முன்பக்கத்தில் அரச குடும்ப அந்தரங்கங்களே அடிக்கடி வெளியாகிக் கொண்டிருந்தன.

டயானாவை குற்றம் சாட்டும் விதமாக சாள்ஸ்சின் நண்பர்கள் பத்திரிகைகளுக்கு கருத்துக் கூறத் தொடங்கினார்கள்.

இந்த விடயம் டயானாவின் சிநேகிதிகள் வட்டாரத்துக்கு தெரிய வந்ததும், அவர்களும் டயானாவைப் புகழ்ந்து பத்திரிகைகளுக்கு கருத்து கூறுவார்கள்.



சாள்ஸ்சும், டயானாவும் தங்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் ஊடாக பிரசாரப் போர் ஒன்றை நடத்தத் தொடங்கினார்கள்.

சாள்ஸ்சின் ஆதரவாளர்களை டயானாவின் சிநேகிதிகள் 'ஹைறகுரோவ் குழு' என்று கிண்டல் பண்ணுவர்.

## மற்றொரு இரகசியம்

### டயானா பதிலடி

ஹைறகுரோவ் குழுவைச் சேர்ந்த சிலர் டயானாவிடம் பரிவுள்ளவர்கள்போல நெருங்கி தகவல் பிடுங்க முற்பட்டனர்.

இதனை எப்படியோ அறிந்து விட்டார் டயானா. சாள்ஸ்சின் நண்பர் ஒருவர் டயானாவை அணுகி ஜேம்ஸ் ஹெவிற்- டயானா உறவு பற்றிய பத்திரிகைச் செய்திகளைப் பிரஸ்தாபித்தார்.

டயானா அதுபற்றி என்ன சொல்கிறார் என்று கேட்டுப் போய் சாள்ஸ்சிடம் ஓதுவது தான் அவர் நோக்கம்.

டயானாவுக்கு அந்த நபரது நோக்கம் தெரிந்துவிட்டது.

லேசாகப் புன்னகைத்தபடி, "உண்மையைத் தானே போட்டிருக்கிறார்கள், ஜேம்ஸ் ஹெவிற்றை நான் காதலிக்கிறேன். ஆழமாக, மிக ஆழமாக!" என்று சொல்லிவிட்டு அந்த நபரது முகம் போன போக்கை இரசித்தார்.

"சாள்ஸ்சைவிட ஜேம்ஸ் ஹெவிற் கம்பீரமான ஆண்மகன். உண்மையான ஆண்மகன்" என்று ஒரே போடாக டயானா போட, வந்த நபரது முகத்தில் ஈயாடவில்லை.

"அவரிடம் ஏன் அப்படிச் சொன்னாய்?" என்று தோழிகள் கேட்டபோது: "தன் மனைவியை உளவறிய இன்னொரு ஆண்மகனை அனுப்பிவைக்கும் ஒருவருக்கு நான் கூறிய பதிலை கேட்கும்போது பற்றி எரியவேண்டும். அதனால்தான் அப்படிக் கூறி அனுப்பினேன். அந்த மனிதன் திருந்த மாட்டார்."

என்று திடமாகக் கூறினார் டயானா.

### மற்றொரு இரகசியம்

ஜேம்ஸ் ஹெவிற்றுடன் டயானா தொடர்ந்து சந்திப்புக்களை நடத்திவந்தார்.

டயானாவை எப்படியாவது தன் கட்டிலில் வீழ்த்திவிட வேண்டும் என்று ஜேம்ஸ் ஹெவிற் திட்டம் போட்டுக் கொண்டிருந்தான்.

ஜேம்ஸ் ஹெவிற் இயல்பிலேயே நல்லவனல்ல. அவனுக்கு பெண்கள் அவ்வப்போது 'அந்த' உபயோகத்திற்கு மட்டும்தான்.

பெரும் செல்வந்தப் பெண்களுடன் நெருங்கி உறவாடி அவர்களது பலவீனங்களை வைத்து மிரட்டி தனக்கு தேவையான காரியங்களையும் சாதித்துக் கொள்பவன்.

அவற்றையெல்லாம் டயானா அறிந்திருக்கவில்லை. வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பினார்.

ஜேம்ஸ் ஹெவிற்றை டயானா நம்பியதால், அவனைப் பற்றிய தகவல்களை திரட்ட முடியவில்லை.

அரசல் புரசலாக ஜேம்ஸ் ஹெவிற் பற்றிய கதைகளைக் கேட்டபோதும், பொறாமையால் யாரோ சிலர் கதை கட்டிவிடுகிறார்கள் என்று நினைத்தார்.

ஒருத்தர்மீது அதீத நம்பிக்கை கொண்டுவிட்டால், பின்னர் அவரது தவறுகள்கூட கண்ணில் உறுத்தாது. அப்படியான மனநிலையில்தான் இருந்தார் டயானா.

இதற்கிடையே அரச குடும்பம் பற்றிய இன்னொரு அந்தரங்க இரகசியம் டயானாவின் காதுக்கு எட்டியது.

கமீலாவின் கணவரான பார்க்கர் பொவெஸ் அரச குடும்பத்தாருடன் வெறும் நண்பராக மட்டுமன்றி அந்தரங்க நண்பராகவும் இருந்திருக்கிறார்.

இளவரசி ஆன் பார்க்கரை தன் தனியறையில் பலமுறை சந்தித்திருக்கிறார். முன்னாள் பிரதமர் வின்சன்ற் சர்ச்சிலின் பேத்தியான சார்லொட்டுடனும் பார்க்கர் நெருக்கமாக உறவு கொண்டிருந்தார்.

சார்லொட் மூலம்தான் பார்க்கரின் கீர்த்திகளை அறிந்த இளவரசி ஆன் அவரை தனது நெருக்கமான நண்பராக்கிக் கொண்டார்.

இவ் விடயங்கள் அரண்மனைக்குள் தெரிந்தாலும்கூட, கண்டும் காணாமல் விடப்பட்டன. அரண்மனைக்குள் இவ்வாறான உறவுகள் தவிர்க்க முடியாதவையாகவும் கருதப்பட்டன.

இராணுவத்தில் பிரிகேடியர் பதவி வகித்தவர் பார்க்கர். மகாராணியின் பாதுகாப்பு படையில் உயர்தர ஸ்தானம் வகித்தவர்.

அதனால் அரண்மனைக்குள் எங்கு வேண்டுமானாலும் அவர் சென்றுவர முடிந்தது. அவற்றில் ஒன்று இளவரசி ஆனின் படுக்கையறை.

மகாராணியின் தாயாருடைய 90வது பிறந்ததின அணிவகுப்பை செம்மையாக நடத்தி முடித்ததால் அரச குடும்பத்தில் பார்க்கருக்கு நல்ல மரியாதையும் இருந்தது.

அரச குடும்ப பெண்களுடன் தான் எவ்வாறு நெருங்கி உறவாடினாரோ,



டயானாவின் அமெரிக்க விஜயத்தின்போது பெருவரவேற்பு.

அவ்வாறு தனது மனைவி கமீலா அரச குடும்ப ஆண்களுடன் நட்பு கொள்வதையும் பார்க்கர் கண்டிக்கவில்லை.

இளவரசர் சாள்ஸ்–கமீலா நெருக்கம் பற்றிய செய்திகளை பார்க்கர் அலட்சியம் செய்தார்.

ஏனெனில் பத்திரிகைகளில் வெளியாக முன்னரே, சாள்ஸின் அந்தரங்க நண்பியாக கமீலா மாறிவிட்டதை பார்க்கர் அறிந்திருந்தார்.

1973 ஜூலையில்தான் கமீலாவுக்கும், பார்க்கருக்கும் திருமணம் நடைபெற்றது.

சாள்ஸ்சுக்காக தன்னை கமீலா விவாகரத்து செய்தாலும், அதனை ஏற்கக்கூடிய மனநிலையில் இருந்தார் பார்க்கர்.

இந்த விவகாரங்களையெல்லாம் அறிந்து கொண்ட டயானா, தன்னை தட்டிக் கேட்கும் தகுதி அரண்மனைக்குள் உள்ள எவருக்கும் கிடையாது என நினைத்தார்.

அதே சமயம் டயானாவின் பலவீனமான தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தான் ஜேம்ஸ் ஹெவிற்.

அந்தத் தருனமும் வந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கண்டி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி ராணி பர்னாந்து, 128/8, காசல்ஹில் வீதி, கண்டி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





கன்னத்தில் முத்தமிட்டால்
உள்ளந்தான்
கள் வெறி கொள்ளுதடி!
உன்னைத் தழுவிடிலோ—
கண்ணம்மா
உன் மத்தமாகுதடி.
—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கொக்கும் மீன்களும்

ஓர் ஆற்றிலே பல மீன்கள் வசித்து வந்தன. அந்த மீன் கூட்டத்தில் ஒரு பெரிய மீன் இருந்தது. அந்த மீன், மற்ற மீன்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து வந்தது.

மீன் கூட்டத்திலுள்ள சிறிய மீன்கள் விளையாடுவதற்காக ஆற்றின் நீர் குறைவான இடங்களுக்குச் செல்லும். அப்படிச் செல்லும் சிறிய மீன்களைப் பெரிய மீன் எச்சரிக்கும்.

"ஆற்றின் கரையோரத்தில் கொக்குகள் நிற்கும். நீங்கள் அங்கே சென்றால் அவை உங்களைப் பிடித்துத் தின்றுவிடும். எனவே அந்தப் பக்கத்திற்குச் செல்ல வேண்டாம்!" எனப் பலமுறை எச்சரித்துக்கொண்டிருக்கும்.

ஒரு நாள் வழக்கம் போல சிறிய மீன்கள் ஆற்றின் கரைப்பகுதிக்கு விளையாடச் சென்றன.

ஆற்றின் கரையோரத்தில் கொக்கு ஒன்று நின்று கொண்டிருந்தது. கொக்கு நிற்பதைக் கண்ட சிறிய மீன்கள் அப்படியே நின்றுவிட்டன. மேலே செல்லத் தயங்கின.


ஆனால் இவைகளைக் கண்ட கொக்கு பேசாமல் அப்படியே நின்றது. கொக்கு பேசாமல் நிற்பதைக் கண்ட சிறிய மீன்களில் சில இந்தக் கொக்கு என்னதான் செய்து விடும், என்று நினைத்துக் கொண்டு, கொக்கு நிற்கும் இடத்திற்கு அருகால் சென்றன.

அந்தச் சிறிய மீன்களை கொக்கு ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டதை எஞ்சியிருந்த மீன்கள் பார்த்தன. எஞ்சியிருந்த மீன்களில் கொழுத்த மீன் ஒன்று மற்ற மீன்களைப் பார்த்து,

"இந்தக் கொக்கு சரியான ஏமாளி போல் இருக்கிறது. தன் அருகால் சென்ற மீன்களை ஒன்றுமே செய்யவில்லையே. வாருங்கள் நாங்களும் அந்தப் பக்கம் சென்று, விளையாடிவிட்டு வருவோம். இந்த ஏமாளிக் கொக்கு எங்களை ஒன்றும் செய்யாது", என்று கூறி கொக்கின் அருகே சென்றது.

கொழுத்த மீன் தன் அருகே வருவதைக் கண்ட கொக்கு, அதை 'லபக்'கென்று பிடித்துத் தின்றது. மறுபடியும் இன்னொரு கொழுத்த மீன் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டு ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தது கொக்கு.

ஓடுகின்ற மீன்களையெல்லாம் ஓடவிட்டுவிட்டு, பெரிய மீன் வரும்போது பிடித்துத் தின்றுவிடும். இதைப் போல் தமக்குப் பொருத்தமான ஒரு பொருளுக்காகத் தருணம் பார்த்துக் கொண்டிருப்போரை ஏமாளிகள் என்று எண்ணி விடக்கூடாது.



# அதிசயம்—ஆனால் உண்மை!



### ஆந்தை வண்ணத்துப் பூச்சி:

← ஆந்தை போன்ற வடிவில் இருக்கும் இந்த வண்ணத்துப் பூச்சிக்கு ஏனைய உயிரினங்களால் ஆபத்து வருவதில்லை. காரணம் இவற்றின் பயங்கர உருவம்தான்.



### சிவப்பு உடை:

→ ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள ஒஸாவ் என்ற பள்ளத்தாக்கில் சொத்துக்குத் தனி வாரிசாக இருக்கும் பெண்தான் சிவப்பு உடை அணிவாள். அங்கு சகோதர, சகோதரிகளுடன் பிறந்த பெண் என்றால் கறுப்பு உடை அணிய வேண்டும்.

### பூவின் விலை:



← 1894ல் ஃபிரெஞ்சு ஜனாதிபதி ஸாதி கார்னோட் கொல்லப்பட்ட போது அவரது சடலத்தின் மீது வைக்கப்பட்ட பூக்களை மக்கள் போட்டி போட்டுக் கொண்டு விலை கொடுத்து வாங்கினார்கள். சிறிய ரோஜாப்பூ ஒன்றுகூட 30 டொலருக்கு விற்கப்பட்டது. ■

### ஸ்பேர்ம் வேல்:



↑ இந்தத் திமிங்கலத்துக்கு ஆழத்தை அறிய வல்ல சவ்வுத்தோல் இதன் கண்களில் அமைந்துள்ளது. அபாயகரமான ஆழத்தை அடைந்ததும் இது மூளைக்கு எச்சரிக்கை விடுக்கும்.

# வாரம் ஒரு நாடு

## அர்மீனியா



தலைநகர் – ஏரவன்
பரப்பு – 29,800 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை– 37 இலட்சம்
மொழி – அர்மீனியன்
சமயம் – கிறிஸ்தவம்
நாணயம் – ட்ராம்
தனிநபர் வருமானம்– 643 டொலர்.

**அமைவிடம்:**

முன்னாள் சோவியத் யூனியனின் மிகச் சிறிய குடியரசு. காகசஸின் தெற்கே அமைந்துள்ளது. வடக்கே ஜோர்ஜியாவும்; கிழக்கில் அசர்பெய்ஜானும்: தெற்கிலும், மேற்கிலும் துருக்கியும், ஈரானும் இதன் எல்லைகள்.


**வரலாறு:**

1991ல் சுதந்திர நாடானது. அருகில் உள்ள அசர்பெய்ஜானுடன் இணைய விருப்பம் தெரிவித்தது. கிறிஸ்தவர்கள் அதிகம் நிறைந்த அர்மீனியாவுக்கும், முஸ்லிம்கள் அதிகம் கொண்ட அசர்பெய்ஜானுக்கும் இடையே 1992 முதல் 1994 வரை போர் தொடர்ந்தது.

**பொருளாதாரம்:**

மலை சார்ந்த வளமிக்க நாடு. தானியங்கள், உருளைக்கிழக்கு, ஒலிவ், திராட்சை, பருத்தி போன்றவை முக்கிய விளைபொருட்கள். செம்பு அதிக அளவில் உள்ளது. சீமெந்து தயாரிப்பு முக்கிய தொழில். ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.04.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 239
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 237

பரிசுக்குரியவர்:
சா. பிரசாத்,
வவுனியா சீ.சீ.ரி.எம். பாடசாலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். மின்ஹாஜ், தெஹிகம மு.வி., முருத்தலாவ, கண்டி. | ஜி. புவனேஸ்வரன், புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |
| யோ. யோரேசியஸ், பாரதி தமிழ் மகா வித்தியாலயம், வத்தேகம. | முஹமட் நஸீர், அல்புர்கான் முஸலிம் மகா வித்தியாலயம், கலேவெல. |
| மும்தாஜ் யூசுப், அல் அஸ்ஹர் தேசியப்பாடசாலை, அக்குறணை. | ரவீந்திரன் பிரசன்னா, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு–04. |
| கி. சரவணன், இந்து மத்திய கல்லூரி, இராகலை. | பா. காருண்ணியா, பாண்டிருப்பு மகா வித்தியாலயம், பாண்டிருப்பு. |
| கிஷான் கில்மி, பெரியமுல்லை, நீர்கொழும்பு. | எஸ். வாசன், ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, அட்டன். |

# பெரிய விமான நிலையங்கள்

உலகின் மிகப் பெரிய விமான நிலையங்கள் பின்வருமாறு:

1. **கென்னடி விமான நிலையம்.**
   இது அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.
2. **ஒஹெர் விமான நிலையம்**
   இது அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரில் அமைந்துள்ளது.
3. **ஹீத்ரு விமான நிலையம்.**
   இது இங்கிலாந்தின் தலைநகர் இலண்டனில் அமைந்துள்ளது.
4. **ஃபிராங்பேர்ட் விமான நிலையம்.**
   இது ஜெர்மனியின் ஃபிராங்பேர்ட் நகரில் அமைந்துள்ளது.
5. **ஓர்லி விமான நிலையம்.**
   இது ஃபிரான்ஸின் தலை நகர் பாரீஸில் அமைந்துள்ளது.

# உலகின் வீரக்கலைகள்

| | |
|---|---|
| இந்தியா– | வர்மம், சிலம்பம் |
| சீனா– | குங்ஃபூ |
| ஜப்பான்– | ஜூடோ, கராத்தே, அக்கீடோ |
| கொரியா– | சூபக்கி, தைக்கியோன், தைக்குவான்தோ |
| ஃபிரான்ஸ்– | சாவாகே |
| ரஷ்யா– | சம்பா |
| மலேஷியா– | போசிலாட் |
| தாய்லாந்து– | கிக்பொக்ஸிங். |

# குட்டிச் செய்திகள்

★ கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூத மக்கள் பயன்படுத்தும் 'ஆமென்' என்ற ஹிப்ரு மொழி வார்த்தைக்கு, அப்படியே ஆகக் கடவது என்று அர்த்தம்.

★ வீடுகளுக்கு இலக்கம் கொடுக்கும் முறையும், வாகனங்களுக்கு பதிவு எண் கொடுக்கும் முறையும் ஃபிரான்ஸ் நாட்டவரால் கொண்டுவரப்பட்டது.

★ ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் அமைப்பு 1829ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

★ கனடா நாட்டில் 1925ம் ஆண்டு கடுமையான குளிர் ஏற்பட்டது. இந்தக் கடுங்குளிரினால் நயாகரா அருவி பனிக்கட்டியாக உறைந்து விட்டது.

★ நதி நீரைத் தேக்கி அணைகட்டிப் பயன்படுத்தும் முறை 3600 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்து நாட்டில் புழக்கமாகிவிட்டது. ■

# கொய்யாப்பழம்



★ **கொய்யாப்பழத்தின் பிறப்பிடம் எது?**

தென் அமெரிக்கா.

★ **கீழைத்தேய நாடுகளுக்கு எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?**

17ம் நூற்றாண்டில். ஐரோப்பியரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ **எந்த இடத்தில் கொய்யாப்பழங்களை 'பியாரா' (இனிமையானது) என்று அழைக்கின்றனர்?**

வங்க தேசத்தில் இவ்வாறு அழைக்கின்றனர்.

★ **கொய்யாப்பழத்தில் என்ன சத்துக்கள் உள்ளன?**

இதில் விட்டமின் 'சி' நிறைய உள்ளது. ஒவ்வொரு 100 கிராம் கொய்யாப் பழத்திலும் 300 மில்லி கிராம் விட்டமின் 'சி' உள்ளது. அத்துடன் கல்சியம், பொஸ் பரஸ் போன்ற கனிமப் பொருட்களும் உள்ளன.

★ **கொய்யாப் பழத்தை தவிர அந்த மரத்தினால் வேறு பலன்கள் உண்டா?**

ஆம். கொய்யா இலைகள் பல் துலக்கப் பயன்படுகிறது. இம் மரத்தைக் கொண்டு இசைக் கருவிகள் செய்யப்படுகின்றன. ■

# கொலோசியம் கேளிக்கை அரங்கு

உலக அதிசயங்களுள் ஒன்றுதான் கொலோசியம் கேளிக்கை அரங்கு. கி.பி. 70ம் ஆண்டில் ரோம் மன்னர் வெஸ்பேசியனால் தொடங்கப்பட்டு 12 வருடங்களுக்குப் பிறகு அவரது மகன் டைடஸ் என்பவரால் கட்டி முடிக்கப்பட்டது.

190 மீட்டர் நீளமும், 155 மீட்டர் அகலமும், 48 மீட்டர் உயரமும் கொண்டது இந்த அரங்கு. இதில் 50 ஆயிரம் பேர் உட்கார்ந்து கொண்டு உள் அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

ரோம் சிறையில் உள்ள கைதிகளில் சிலரை ஒவ்வொரு நாளும் இந்த அரங்கில் அழைத்து வந்து போட்டி வைப்பார்கள். இரண்டு கைதிகளுக்கு வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களைக் கொடுத்து ஒருவரோடு ஒருவர் போரிட விடுவார்கள். இதில் வெற்றி என்பது எதிர்ப்போட்டியாளர்களைக் கொல்வது.

அது மட்டுமன்றி கைதிகளுடன் கொடிய விலங்குகளான சிங்கம், புலி போன்றவற்றை மோத விடுவார்கள். இதில் கைதிகள்தான் கொடிய விலங்குகளுக்கு இரையாவார்கள்.

இத்தகைய கொடிய விளையாட்டை இரசிக்க இந்த அரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். இந்தக் கொடுமை கி.பி. 404ம் ஆண்டில் ஒழிக்கப்பட்டது. அதன்பின் குதிரைச் சவாரி, ரதப் போட்டிகள் இந்த அரங்கில் நடந்தன.



மக்களின் பொழுது போக்கிற்காகக் கட்டப்பட்ட இந்தக் கொலோசியம் கேளிக்கை அரங்கு இப்போது மூன்றில் இரண்டு பங்கு சிதைவடைந்து விட்டது. இதைப்பார்ப்பதற்காகப் பல சுற்றுலாப் பயணிகள் ரோமிற்குப் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ■

# மட்டக்குதிரைகள்



மட்டக்குதிரை என்பது சிறிய குதிரை ஆகும். இது 140 சென்டி மீட்டர் உயரம் வரை வளரும். வடக்கு நோர்வேயில் உள்ள ஷெட்லாண்ட் என்ற தீவினைத் தாயகமாகக் கொண்ட மட்டக்குதிரைகளுக்கு 'போனிகள்' என்ற பெயரும் உண்டு.

உருவத்தில் குள்ளமாக இருக்கும் இக்குதிரைகள் சுமை இழுப்பதிலும், புத்திக் கூர்மையிலும் சிறந்தவை. 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சுரங்கத் தொழிலில் மட்டக்குதிரைகள்தான் ஈடுபடுத்தப்பட்டன.

இக்குதிரைகள் 26 முதல் 30 ஆண்டுகள் வரை உயிர்வாழக் கூடியவை. ■


படிப்பகம்

www.padippakam.com

# திக் திக் திக் 05

"ஜெ"ர்ல இதை யார்ரா உனக்குச் சொன்னாங்க..?"

"யாரோ சொன்னாங்க.. நிஜமா, பொய்யா....?"


"நிஜந்தான்னு சொன்னா என்னடா பண்ணிடுவே? பெரிசா அரிவாளைத் தூக்கிட்டு வந்துட்டான். வெட்டிடுவியோ...? டே சின்னச்சாமி?"

"அய்யா!"

அந்த முண்டாசு கட்டின ஆள் ஓடி வந்தான்.

"நம்ம அல்சேஷனை அவிழ்த்துவுடு. அவனோட அம்மாக்காரி ஓடின மாதிரி இவனும் ஓடட்டும்...! அப்புறம் உள்ளே தூங்கிட்டிருக்கிற பூபதியை எழுப்பி போலிஸுக்கு ஃபோன் பண்ணச் சொல்லு..."

"சரிங்கய்யா..."



அந்த ஆள் ஓடிப்போய்- ஆக்ரோஷமாய் எம்பி எம்பிக் குரைத்துக் கொண்டிருந்த அல்சேஷனின் கழுத்துப் பட்டியை அவிழ்த்து விட்டான்.

அந்த விநாடிக்காகவே காத்திருந்ததைப்போல்-

அல்சேஷன் வீரபத்ரனின் மேல் பாய்ந்தது.

வீரபத்ரன் கொஞ்சம் போல் பின்னுக்கு ஓடி- மனசுக்குள் புரண்டு வந்த ஆவேசத்தையெல்லாம் வலது மணிக்கட்டுக்குக் கொண்டுவந்து- அரிவாளை-

'உய்ய்'யென்று- காற்றில் வீசினான்.

அடுத்த விநாடி.

ஆக்ரோஷமாய் பாய்ந்த அல்சேஷன் நாயின் தலை- இரத்துப் பீறிடலோடு- தனியாக எகிறிப் போய் எதிர்ச் சுவற்றில் மோதிக் கொண்டு கீழே உருண்டது. போர்டிகோ படிகளில் நாயின் உடம்பு துடித்தது.

துளித் துளியாக இரத்தம் சொட்டும் அரிவாளோடு-

ஒரு விகாரச் சிரிப்போடு வீரபத்ரன் நிமிர்ந்து-

பெரிய நாய்க்கரை ஏறிட்டான்.

அவரை நோக்கி நகர்ந்தான்.

**கை**ச் சங்கிலிகள் கலகலக்க, மாயாண்டி திரும்பிப் போனதும், சூப்ரிண்டெண்ட் பாண்டு ரங்கன் அருள்ராஜின் பக்கமாய்த் திரும்பினார்.

"மிஸ்டர் அருள் ராஜ்..."

"ஸார்...."

"மாயாண்டி என்ன சொல்லிட்டுப் போனான்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியலை ஸார்...."

"நாளைக்குக் காலையில தூக்குக் கயித்துக்குப் போறதுக்கு முன்னாடி தன்னோட கடைசி ஆசையை ஒரு பேப்பர்ல எழுதித் தர்றதா சொல்லியிருக்கான். அவன் எழுதித் தர்ற கோரிக்கையைப் படிச்சுட்டு அந்நேரத்துக்கு அதை நாம எப்படி நிறைவேத்த முடியும்? இப்பவே அவனைப் பார்த்து என்ன எழுதித் தரப் போறான்னு கேட்டுடுங்க மிஸ்டர் அருள்ராஜ். நாம கொஞ்சம் ப்ரிபேர்டா இருக்கலாம்."

"அவன் ஒரு மூர்க்கன் ஸார்.... கேட்டாலும் சொல்ல மாட்டான்... நாளைக்குக் காலையில அவன் தர்ற கோரிக்கையை கன்சிடர் பண்ணிப் பார்ப்போம். ஜெயில் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸுக்கு அவனோட கோரிக்கை கட்டுப் பட்டா நாம அதை நிறைவேத்தி வைக்கலாம்..."

"நோ... நோ... அவனோட ஆசை என்னான்னு இன்னிக்கே நமக்குத் தெரியணும்.... நீங்க ஒரு மணி நேரம் கழிச்சு... அவனோட செல்லுக்குப் போய் பேசிப் பாருங்க...."

"எஸ் ஸார்...."

"மாயண்டிக்கு பேமிலி இருக்கா?"

"அவனோட கேஸ் ஹிஸ்டரி பிரகாரம் லீகலா ஒரு பேமிலியும் கிடையாது ஸார். ஒரு வாரத்துக்கு முன்னாடி யாரோ ஒரு பொண்ணு அவனைப் பார்க்கிறதுக்காக வந்தா. யார்ன்னு கேட்டேன். மூணாவது செட்டப் ஸார்ன்னு சொல்லிச் சிரிச்சான்...."

"அப்போ இன்னொரு சிக்கலும் கிளம்புது அருள்ராஜ்."

"என்ன ஸார்...?"

"தூக்கில போட்டப்புறம்.... பாடியை யார்கிட்டே தர்றது...? அதையும் அவன் கிட்டே கேட்டுக் கன்ஃபர்ம் பண்ணிக்கிங்க..."

அருள்ராஜ் தலையாட்டினார். எழுந்து மறுபடியும் சல்யூட் ஒன்றை விநியோகித்து விட்டு வெளியே வந்தார். பாண்டுரங்கன் ரிவால்விங் நாற்காலியில் சுழன்று அருகேயிருந்த அலமாரியினின்றும் அந்த 'செல் மெயின்டனன்ஸ்' பைலை எடுத்துப் புரட்டினார். இரண்டு தாள்களைப் புரட்டியிருப்பார்.

மேஜைமேலிருந்த டெலிஃபோன் கூப்பிட்டது.

# நந்தினி 440 வோல்ட்

ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தார்.

"ஹலோ...."

டெலிபோன் எக்சேஞ்ச் பெண்ணின் குரல் கேட்டது: "ஹலோ! மிஸ்டர் பாண்டுரங்கன்..."

"எஸ்...."

"வழுக்குப் பாறை எஸ்டேட்டிலிருந்து கால் வருது... பேசுங்க."

பேசினார்.

"ஹலோ..."

"அங்கிள். நான் நந்தினி பேசறேன்..."

"அட. நந்தினியா...? என்னம்மா இது திடீர் ஃபோன்...?"

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"சும்மாதான்... நானும் அவரும் பன்னிரெண்டு மணிக்குக் கோயமுத்தூர் வர்றோம். வந்து மத்தியானம் ரெண்டு மணி ப்ளைட்ல பாம்பே போறோம்...."

"அடிச்சக்கை! ரெண்டாவது ஹனிமூனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை... பிசினஸ் விஷயமா அவர் பாம்பே போறோர்.... அவரைக் கவனிச்சுக்க நான் போறேன்... அவ்வளவுதான்... மாமி வீட்லதானே இருக்காங்க...?"

"ம்... வீட்லதான் இருக்கா...."

"நானும் அவரும் கோயமுத்தூர் வந்ததும் வீட்டுக்கு வர்றோம்..."

"வாங்க... வாங்க...! வெல்கம்..."

"மத்தியானச் சாப்பாடு எங்களுக்கு அங்கேதான்..."

"ப்ளஷர்... ப்ளஷர்... வாங்க..."

சிரித்துக் கொண்டே ரிஸீவரைச் சாத்தினார் பாண்டுரங்கன். அதே விநாடி 'எம்' செல்வார்டன் ஷூ சப்திக்க வேக நடை போட்டுக் கொண்டு உள்ளே வந்தார்.

"எஸ்....."- நிமிர்ந்தார் பாண்டுரங்கன்.

"ஸார்... மாயாண்டி, ராமசாமிங்கிற கைதியை சங்கிலியாலே அடிச்சுக் காயப்படுத்திட்டான். அவனை அடக்கப் போனா கத்தி ஆர்ப்பாட்டம் பண்றான்." – அவன் சொல்ல பாண்டுரங்கன் பதற்றமாய் எழுந்தார்.

**கா**லை ஒன்பது மணிச் சூரியன்- வழுக்குப் பாறையைச் சுற்றிலும் பரவியிருந்த கனமான பனிப்போர்வையை விரட்டி விட்டு, பூமியை சூடேற்ற ஆரம்பித்திருந்தான்.

எஸ்டேட் பங்களாவின் போர்டிகோவில்- சாக்லெட் வண்ண அம்பாஸிடர் நீர்க் குளியலை முடித்துக் கொண்டு நின்றிருந்தது. டிரைவர் கிருஷ்ணன் உள்ளேயிருந்து கொண்டு வந்த சூட்கேஸ்களையும் ப்ரீப் கேஸ்களையும் டிக்கிக்குள் அடைத்துக் கொண்டிருந்தான். போர்டிகோ வராந்தாவில் வாகீசனும் பரிமளாவும் நின்றிருக்க படிகளில் விமலும் சொப்னாவும் தெரிந்தார்கள். வாகீசன் கேட்டார்:

"பாரி இன்னமும் உள்ளே என்ன பண்றான்...?"

"டிரஸ் பண்ணிட்டிருக்கார். வந்துடுவார். மாமா..."- சொல்லிக் கொண்டே நந்தினி முன்புற அறையிலிருந்து வெளிப்பட்டாள். வெளிர் நீலநிற க்ரிம்ப் சேலையிலும்- அதே வண்ண ப்ளவுஸிலும் அமர்க்களமாய் இருந்தாள். மே ப்ளவர் செண்ட்டை மெலிதாய் மேலே ஸ்ப்ரேரித்திருந்தாள். தளர்வாய்ப் பின்னியிருந்த கூந்தலில் ஒற்றை ரோஜா இரத்தச் சிவப்பாய்ச் சிரித்தது.

அத்தைக்கு அருகில் போய் நின்று கொண்டாள் நந்தினி- பரிமளம் சொன்னாள். "நாலைஞ்சு நாள் அதிகமானாலும் பரவாயில்லை நந்தினி, பாம்பேயை நல்லா சுத்திப் பார்த்துட்டு வா..."

"சரி அத்தை...."

"ஓட்டல் ரூம்ல உன்னைத் தனியா விட்டுட்டு அவன் பாட்டுக்கா எங்கேயாவது போயிடுவான். நீ விட்டுடாதே... அவன் கூடவே போம்மா."- வாகீசன் சொல்ல, சிரிப்போடு தலையாட்டினாள் நந்தினி.

"சரி மாமா...!"

"ஸார்-ப்ளீஸ் இந்த பைலை மாத்திரம் பார்த்து சைன் பண்ணிடுங்க ஸார். ரெண்டு நாள் கழிச்சு காண்ட்ராக்ட் பார்ட்டி வந்துடுவார்...."

"வயலெட். நான் பாம்பேலிருந்து வர்றவரைக்கும் இந்த எஸ்டேட் டீலிங்க்ஸ் பூராவையும் என்னோட பிரதர் விமல் பார்த்துக்குவார்-ப்ளீஸ் கான்டாக்ட் ஹிம்..."

"எஸ். ஸார்..."

"மலையாளம் ப்ளான்டேஷன்லயிருந்து கருணாகரன்கிற பேர்ல பாடனிஸ்ட் ஒருவர் அடுத்த வாரம் என்னை மீட் பண்றதுக்காக வருவார். அப்பாயிண்ட்மெண்ட் டேட்டை அடுத்த வாரத்துல ஏதாவது ஒரு நாள் பிக்ஸ் பண்ணணும்.."

"ஐ'ல் டூ கிட்...."

கார் அருகே வந்தான் பாரி.

"என்ன கிருஷ்ணன், கிளம்பலாமா?"

"கிளம்பலாம் ஸார்."

"கார்ல இருந்த ட்ரபுளை சரி பண்ணிட்டியா?"

"அப்பவே பண்ணியாச்சு ஸார்."

"கோயமுத்தூர் போய்ச் சேர்ற வரைக்கும் வழியில தொந்தரவு ஒன்னும் வராதே...?"

"வராது ஸார்...."

பாரி அப்பா அம்மா பக்கம் திரும்பினான். "அப்பா. நான் வரட்டுமா...?"

"ம்... நந்தினியைக் கூட்டிட்டுப் போறே. ஜாக்கிரதை..."

"அம்மா வர்றேன்."

"போய்யிட்டு வாடா..."

"விமல்! வயலெட் உனக்கு நிறைய வேலை வெச்சிருக்கா. அவ அவசரம்ன்னு சொல்ற பைல்ஸை மட்டும் பார்த்திடு போதும்..."

"சொப்னா! விமலை கொஞ்ச நேரமாவது ஆபீஸ் வேலையைப் பார்க்க விடு... வரட்டுமா...?"

எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்கும் போதே- பாரியும் நந்தினியும் காரில் ஏறினார்கள். நந்தினி எல்லோரிடமும் தலையசைத்து விடை பெற்றுக் கொள்ள, கார் ஊர்ந்தது.

சிமெண்ட் கேட்டைத் தாண்டியது கார். வெளியே காத்திருந்த ஜில் காற்று கண்ணாடிக் கதவுகளின் இடுக்குகளில் புகுந்து முகத்தைத் தடவிக் கொடுத்தது.

"நந்தினி..."

"ம்."

(தொடர்ந்து வரும்)

ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:

# வெற்றியை நோக்கி ஒரு பயணம்

## கியூபா கெரில்லாப் போர் அனுபவத்திலிருந்து...

**கி**யூபாவை ஆண்ட சர்வாதிகாரி பாடிஸ்டாவை வீழ்த்தும் முயற்சியில் மீண்டும் ஒரு முறை பிடலின் முயற்சிகள் தோற்றுவிட்டன போல் தோன்றியது. புரட்சியைக் கண்டு பயந்தவர்களும், புரட்சியின் எதிரிகளும் மகிழ்ச்சிக் கூத்தாடினர். இப்படிப்பட்ட புரட்சிகள் அற்பமானவை, அவற்றால் பயனொன்றுமில்லை என்பதற்கு அந்தத் தோல்வியை விட வேறு சான்றும் வேண்டுமோ என்று எக்காளமிட்டனர். குழந்தைகள் புரட்சியோடு விளையாடலாமா என்று கேட்டனர்.

கைது செய்யப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன், ஏப்ரல் 29ல் மாங்கடாத் தாக்குதல் உதாரணத்தைப் பின்பற்றி மடன்ஸாசில் கைக்குரியாக் கொத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தியாலும் புரட்சியின் எதிரிகள் மகிழ்ச்சியுற்றிருந்தனர்.

ஆனால், பிடல் அவர்களது விமர்சகர்களிடமிருந்து வேறுபட்டு முற்றிலும் வேறு விதமாகச் சிந்தித்தார். ஒரு புரட்சிகரப் போராட்டத்தில் தோல்விகள் தவிர்க்க முடியாதவை என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். தோல்விகள் அவர் உறுதிக்கு மேலும் உரமூட்டின.


எந்த நோக்கத்திற்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருந்தாரோ அந்த நோக்கம் இறுதியில் வெற்றி பெறும் என்ற அவரது நம்பிக்கையைப் பலப்படுத்தின. அவரது உறுதியும் நம்பிக்கையும் அவரைப் பின்பற்றுவோரிடையேயும் பரவின. மெக்சிக்கன் சிறையில் அடைபட்டுக் கிடந்த நாட்களைப் பற்றிச் சொல்கிறபோது சேகுவேரா(சே) எழுதினார்: "நாங்கள் பிடல் காஸ்ட்ரோவின் மீது கொண்ட நம்பிக்கையை ஒருபோதும் இழந்ததில்லை" சிறையிலிருந்து வெளிவந்ததும், தனது குழுவை கியூபாவுக்கு அனுப்பி வைப்பதற்கான தயாரிப்பில் பிடல் தனது சக்தி முழுவதையும் செலவிடத் தொடங்கினார். மீண்டும் நிதி திரட்டினார். ஆயுதங்களை வாங்கினார். இரகசிய இடங்களை அமைத்தார். சங்கேத வார்த்தைகளையும், குறிகளையும் உருவாக்கினார். சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்ட வீரர்கள் நாட்டின் ஒதுக்குப்புறமான பகுதிகளுக்குச் சென்று இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

ஸ்வீடிஷ் மானுடவியலாளர் வென்னர் கிரென் என்பவரிடமிருந்து 12 ஆயிரம் டொலர்கள் கொடுத்து கிரான்மா என்ற சிறு கப்பலை வாங்கினார்கள். குறைந்தது எட்டுப்பேர், அதிகமாக 12 பேர் பயணம் செய்யத்தகுந்தது, அந்தக் கிரான்மா. ஆனால் அதில்தான் 80 வீரர்களை ஏற்றி அனுப்பவேண்டும். அதனால் பிடல் சோர்ந்து விடவில்லை. வேறு வழியொன்றும் இல்லையே.

தனக்கு இருந்த தொடர்புகள் அனைத்தையும் பயன்படுத்தி, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் குவேராவையும் கார்சியாவையும் சிறையிலிருந்து வெளிக் கொண்டு வர பிடல் முயன்றார். பிடல் தனது நேரத்தையும் சக்தியையும் தங்களை விடுவிப்பதில் வீணடிக்க வேண்டாம் என்று சே பிடலைக் கேட்டுக் கொண்டார். கிரான்மா மெக்சிக்கோவிலிருந்து கியூபாவுக்குப் புறப்படுவது இதனால் தாமதமாகலாம் என்று சே அஞ்சினார். ஆனால் பிடல் உறுதியாக சொல்லிவிட்டார்: "நான் உங்களைக் கைவிட மாட்டேன்!"

நவம்பர் மாதத்தில் மீண்டும் பொலிஸ் பல இரகசிய இடங்களில் புகுந்தது. பிடலின் பாதுகாவலரான ரபியல் டெல்பினோ, 15 ஆயிரம் டொலர்களுக்காக முழுப்படையையும் மெக்சிக்கோவில் இருந்த கியூபன் தூதரகத்திடம் காட்டிக் கொடுக்க இருப்பதாக அறிந்தார் பிடல்.

இவன் பெயரில்தான் கிரான்மா வாங்கப்பட்டிருந்தது. வானொலித் தொடர்பு இவனது பொறுப்பில்தான் இருந்தது. ஆகவே, இப்போது தாமதித்தால் இறப்பு நிச்சயம். "ஆத்திரமூட்டுகிற காரியங்களில் ஈடுபடுகிறவர்களை ஒதுக்கிவிட்டு ஆயுதங்களோடும், கருவிகளோடும் எல்லோரும் மெக்சிக்கோ வளைகுடாவிலுள்ள, சிறு மீன்பிடித் துறைமுகமான துக்ஸ்பினுக்கு வந்து சேரவேண்டும். அங்கே



கிரான்மா தயாராயிருக்கும்." என்று பிடல் உத்தரவிட்டார்.

சில ஆயுதங்களை மட்டும் மெக்சிக்கோவில் பாதுகாப்பான இடங்களில் வைத்துச் செல்லுமாறும் இது மிகவும் இரகசியமாக இருக்கவேண்டும் என்றும் பிடல் ஆணையிட்டார். ஏன் என்று எழுந்த கேள்விகளுக்கு பிடல் பதில் சொன்னார்.

"நான் மீண்டும் தோல்வியடைந்தால், நான் மெக்சிக்கோவுக்குத் திரும்பி வருவேன். வந்து சில நம்பகமான ஆட்களைக் கண்டறிந்து அவர்களோடு மீண்டும் கியூபாவுக்குத் திரும்புவேன். ஆனால் இம்முறை ஆகாய விமானம் மூலம் கியூபாவுக்கு வருவேன். பாரசூட்டுக்களைப் பயன்படுத்தி நாங்கள் மலைப்பிரதேசங்களில் இறங்குவோம். நான் கொல்லப்படுகிறவரை அல்லது கொடுங்கோலர்களிடமிருந்தும் சுரண்டல் பேய்களிடமிருந்தும் எனது தாய்நாடு விடுவிக்கப்படும்வரை நான் அங்கிருந்து போராடுவேன்."

ஏற்கனவே கூறியிருந்தபடி "புத்தகம் விற்றுவிட்டது." என்று சான்டியாகோவுக்குத் தந்தி கொடுக்குமாறு பிடல் இறுதி உத்தரவு பிறப்பித்தார். இந்தச் செய்தி கிடைத்ததும் பைஸ் குறிக்கப்பட்ட நேரத்தில் ஓரியண்டே மாநிலத்தின் தலை நகரில் மக்களது எழுச்சியைத் துவக்குவார்.

மருத்துவக் கருவிகளோடு, தனது கைப்பையை எடுத்துக்கொண்டு சே (மற்றப் பொறுப்புக்களோடு, அவர் அந்தக் குழுவின் மருத்துவராகவும் பொறுப்பு வகித்தார்). வீட்டுக்கு விரைந்து வந்து ஹில்டாவிடம் விடை பெற்றார். தூங்கிக் கொண்டிருந்த தனது குழந்தையை முத்தமிட்டார். தமது பெற்றோருக்கு விடைகேட்டு ஒரு கடிதம் எழுதினார். நெருக்கமானவர்களுக்கு கடிதம் எழுதுகிறபோதெல்லாம் அதில் ஒரு சோகமான நகைச்சுவை இழையோட எழுதுவது அவரது வழக்கம்.

இந்தக் கடிதத்திலும் அப்படி ஒரு சோகம் கலந்த நகைச்சுவை இழையோடியது. அதை இவ்வாறு சுருக்கிக் கூறலாம்: தலை யைச் சுவரோடு மோதுகிற காரியமாகத் தோன்றினாலும் நான் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைகளுக்காக உயிரையும் விடலாம்.

ஹில்டா, "மூச்சு வாங்கும் கருவியை (INHALER) எடுத்துச் செல்ல மறந்துவிட வேண்டாம். அதை எங்கும் தொலைத்து விடாதீர்கள்," என்று கூறினார். ஆனால் சே அதை மறந்துவிட்டார். முதன் முதலாகக் கெரில்லா யுத்தத்தில் ஈடுபடுகிறவர் இப்படியெல்லாம் மறந்துவிடுவது சகஜம்தான்.

1956 நவம்பர் 25, விடிகாலை 2 மணிக்கு துக்ஸ்பன் துறைமுகத்தில் நின்றிருந்த கிரான்மாவில் புரட்சிக்குழு ஏறிக்கொண்டது. அந்த மீன்பிடித்துறைமுகத்தில் சப்தமும் சிரிப்பும், குழப்பமும் நிறைந்திருந்தது. உள்ளூர்ப் பொலிசார் இலஞ்சம் வாங்கிக் கொண்டு கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். துப்பாக்கி ஏந்திய வீரர்கள் எண்பத்தி இரண்டு பேரும், யுத்த தளபாடங்களும், பிற யுத்தப் பொருட்களும் நிறைந்திருந்த அந்தச் சிறு கப்பல், அதிகமான மீன்கள் திணித்து வைக்கப்பட்ட பாத்திரம் போல் தோன்றியது. ஆனால் இனி தயங்க முடியாது. இருக்கிற ஒரே வழி- முன்னேறுவதுதான்.

பிடல் கட்டளையிட்டார்: "நீரின் போக்கிலேயே முழு வேகத்துடன் செல்லட்டும்!"

அளவுக்கு மீறிய சுமை ஏற்றியிருந்த கிரான்மாவின் விளக்குகள் மங்கின. அது சிரமப்பட்டு துறையிலிருந்து கிளம்பி கியூபாவை நோக்கி நகர்ந்தது.

வீரர்கள் கியூபாவின் தேசிய கீதத்தையும், ஜுலை 26 இயக்கம் பற்றிய பாடலையும் பாடிக்கொண்டிருந்தார்கள்.

"1956ல் நாங்கள் வெற்றி வீரர்களாவோம், அல்லது தியாகிகளாவோம்!" என்று தான் சொன்னதை பிடல் நிறைவேற்றிக் காட்டினார். ■

www.padippakam.com




> "லை.ஃ.ப்ல செட்டில் ஆனப்புறம்தான் கல்யாணம்னு உறுதியா இருந்தேன். ஆனா, குடும்பப் பிரச்சனைகள், சொந்தப் பிரச்சனைகள் காரணமா லை.ஃ.ப்ல செட்டிலாக எனக்கு ரொம்ப நாளாயிடுத்து. கல்யாண வயசும் தாண்டிடுத்து. அப்புறம் அதைப் பத்தி நான் நினைக்கவே இல்லை."
>
> –நடிகை குமாரி சசு ஒரு பேட்டியில்...'குங்குமம்' 18.07.97 இதழில்...

24

## பட்டுக்கோட்டை பிரபாகர்

மதுமிதா தனக்கு எழுதியதாகக் கதிரவன் கொடுத்த அந்த பழைய காதல் கடிதத்தைப் படித்துப் பார்த்த காசிநாதன், "சார், இதை நான் ஃபோட்டோ எடுத்துக்கலாமா?" என்றான்.

"நானே ஜெராக்ஸ் பண்ணி வெச்சிருக்கேன். இந்தாங்க." அருகிலிருந்த ஒரு கடித நகலை எடுத்துக் கொடுத்தான் கதிரவன்.

"நீங்க கொடுத்த லவ் லெட்டருக்கு மதுமிதா இந்த மாதிரி பதில் லெட்டர் கொடுத்தாங்க. அப்புறம் என்ன ஆச்சு?"

அறைக்கதவு தட்டப்பட்டு, ரூம் பாய் வந்து சிறிய பிளாஸ்கிலிருந்து இரண்டு கோப்பைகளில் காபி ஊற்றிக் கொடுத்து விட்டு விலகினான்.

"அம்மாவிடம் பேசுங்கன்னு மதுமிதா அதில குறிப்பிட்டிருந்தா... அப்போ மதுமிதாவோட அம்மா துர்க்காவுக்கு..."

"துர்க்காவா?"

"துர்க்காதான் சார் ஒரிஜினல் பேரு. சினிமாவுக்காக வெச்சிக்கிட்ட பேருதான் காவ்யா. அவங்களுக்குப் படவாய்ப்புக்கள் ரொம்பவும் குறைஞ்சி போயிருந்த நேரம். வருமானம் குறைஞ்சிடுச்சி... ஆனா பாப்புலர் நடிகைன்ற பந்தாவை குறைச்சுக்க முடியலை. அதனால சொந்தமா படம் தயாரிக்கிற முயற்சிகள்ல இருந்தாங்க."

"சரி..."

"நான் நேரா அவங்க வீட்டுக்குப் போயி தைரியமா அவங்ககிட்ட பேசினேன்."

"என்ன பேசினீங்க?"

"இந்த மாதிரி உங்க பொண்ணை லவ் பண்றேன். அவளும் என்னை விரும்பறா... எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வையுங்கன்னு கேட்டேன். அவங்க நம்பலை. மதுமிதா எழுதின லெட்டரைக் காமிச்சேன். அவளையே கூப்பிட்டுக் கேளுங்கன்னு சொன்னேன்."

"அப்புறம்?"

"மதுமிதாவைக் கூப்பிட்டுக் கேட்டாங்க. நடுங்கிக்கிட்டே ஆமான்னு சொன்னிச்சு. பளார்னு ஒரு அறை விட்டாங்க... அழுதுகிட்டே உள்ளே ஓடிருச்சி... என்கிட்டே என் பொண்ணு எழுதின லெட்டரைக் கொடுத்திடு. அவளுக்குப் பக்குவம் இல்லை. ஏதோ சபலப்பட்டு எழுதிட்டா... அவளை மறந்திடு. எவ்வளவு பணம் வேணும்னு கேட்டாங்க. நான் பதில் பேசாம கோபமா புறப்பட்டு வந்துட்டேன்."

கதிரவன் சட்டென்று தன் சட்டையின் கைப்பகுதியை உயர்த்தி, முழங்கை அருகில் இருந்த, சைக்கிள் ஓட்டப் பழகின போது ஏற்பட்ட காயத் தழும்பைக் காட்டினான்.

"இதைப் பார்த்தீங்களா தழும்பு"

"என்ன இது?"

"மதுமிதாவைக் காதலிச்சதுக்கு அவங்கம்மா எனக்குக் கொடுத்த பரிசு. இதே மாதிரி உடம்பு பூரா ஆறேழு இடத்தில தழும்புகள் இருக்கு"

"ஆள் வச்சு அடிச்சாங்களா?"

"ஆமாம்! அடியா அது? மரண அடி! கிட்டத்தட்ட செத்துட்டேன். பதினைஞ்சு நாள் ஆஸ்பத்திரியில இருந்தேன். ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு மதுமிதா வந்தா. என்னைப் பார்த்துக் கதறி அழுதா. அவங்கம்மா எவ்வளவு எதிர்த்தாலும் என்னைத்தான் கல்யாணம் செய்துக்குவேன்னு சத்தியம் செஞ்சா."

"அப்புறம்?"

"நான் உடம்பு குணமானதும் நாங்க ரெண்டு பேரும் ஒரு கோயில்ல வெச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டோம். என்னோட ரெண்டே ரெண்டு ஃபிரெண்ட்ஸ் மட்டும்தான் இருந்தாங்க."

"ஃபோட்டோ எடுத்தீங்களா?"

"எடுத்துக்கிட்டேன். விவகாரமான கல்யாணமாச்சே... காட்றேன். எல்லாம் சொல்லி முடிச்சுட்டு காட்றேன். காட்றது மட்டுமில்லை. உங்களுக்கு ஒரு காப்பியும் தர்றேன்."

"மேற்கொண்டு சொல்லுங்க!"

"வழக்கம் போல அந்தம்மா என் பெபண்ணைக் கடத்திட்டாங்கன்னு பொலிஸ்ல புகார் கொடுத்திச்சி.... பொலிஸ் வந்து விசாரிச்சப்ப மதுமிதா நான் மேஜரான பொண்ணு, என் விருப்பத்தோடதான் இந்தக் கல்யாணம் நடந்துச்சின்னு ஸ்டேட்மெண்ட் கொடுத்தா."

"ஐ.ஸீ..."

"அதுக்கப்புறம் அவங்கம்மா என்னை எதிர்த்துக்கிட்டா காரியம் ஆகாதுன்னு புரிஞ்சுக்கிட்டு என்னை மாப்பிள்ளையா ஏத்துக்கறதா சொல்லிட்டாங்க. ஒரு வாரம் நாங்க ஆந்தரா பூரா கார்லயே சுத்தி தேனிலவு கொண்டாடிட்டு வந்தோம். ஒருநாள் என் மாமியார் வந்து ஓ ன்னு அழுதாங்க."

"எதுக்கு?"

"அவங்க படம் எடுத்ததிலே நஷ்டம்னு சொன்னாங்க. நிறைய கடன் இருக்கிறதாச் சொன்னாங்க. அதை எல்லாம் அடைக்கணுமின்னா மதுமிதாவை நடிக்க வெச்சாகணும்னு சொன்னாங்க. மதுமிதாவுக்கும் சினிமாவுல நடிக்கிற ஆசை இருந்திச்சி. எனக்கும் என் மனைவி நடிகைன்னா பெருமிதமா இருக்கும்னு பட்டுச்சு. சரி, நடிக்கட்டும்னு சொன்னேன்."

"அப்புறம்?"

"உடனே அவங்க அடுத்த கண்டிஷன் போட்டாங்க."

"என்ன கண்டிஷன்?"

"நான் மதுமிதாவை அவங்க வீட்ல விட்டுட்டுப் பிரிஞ்சிடணுமாம். மாசா மாசம் கணிசமான தொகை கொடுத்துடுவாங்களாம். எனக்கும் மதுமிதாவுக்கும் கல்யாணமான விஷயத்தை நான் எப்பவும் யார் கிட்டேயும் சொல்லக் கூடாதாம்."

"ஏன் அப்படி?"

"சினிமால அறிமுகமாகறப்பவே மதுமிதாவைக் கல்யாணம் ஆன பொண்ணுன்னு சொன்னா தயாரிப்பாளர்களும் சரி, ரசிகர்களும் சரி வரவேற்க மாட்டாங்கன்னு விளக்கம் சொன்னாங்க."

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"அவங்க சொன்னது நியாயமா இருந்திச்சு. என் மனைவி ஒரு பிரபல நடிகையா வரணுங்கற ஆசை எனக்கு இருந்ததால அவங்க சொன்ன எல்லா நிபந்தனைகளுக்கும் நான் ஒப்புக்கிட்டேன்."

"அப்புறம்?"



"மதுமிதாவை அவங்க வீட்ல விட்டுட்டு நான் போய்ட்டேன். அவ நடிகையானா.... எனக்குச் சொன்னபடி மாசா மாசம் பணம் அனுப்பி வைச்சாங்க. மதுமிதா பிரபலம் ஆக ஆக அவ போக்குல மாற்றம் வந்துடுச்சி... எப்பயாவது நான் போனாக் கூட, என் கிட்டே முகம் கொடுத்துப் பேசாம என்னை அலட்சியப்படுத்தினா. ஒரு கட்டத்தில எனக்கும் அவளுக்கும் நடந்ததெல்லாம் ஒரு கனவான்னு நானே சந்தேகப்படற அளவுக்கு அவளும் அவங்கம்மா வும் நடந்துக்க ஆரம்பிச்சாங்க."

"ஏன் அப்படி?"

"காசும் புகழும் கத்துக் கொடுத்த திமிர்தான். வேறு என்ன? நாலு மாசம் முன்னாடி ஒரு தடவை மதுமிதாவை நான் பார்த்தேன். நீ நடிச்சது போதும். நிறுத்திக்கோ. என்னை உன் புருஷன்னு ஒரு விழா ஏற்பாடு செஞ்சி அறிவிச்சிருன்னு சொன்னேன்"

"அதுக்கு அவங்க என்னை சொன்னாங்க?"

"அவ சொன்ன பதில் என்னை அதிர்ச்சியில உறைஞ்சி போக வெச்சிருச்சி... ஏதோ அந்த சமயம் ஒரு சபலத்தில உங்களைப் பிடிச்சுப்போய் கல்யாணமும் பண்ணிக்கிட்டேன். இப்போ நான் வேற மதுமிதா. இப்ப என் நாகரிக சூழ்நிலைக்கும் மனப்பக்குவத்துக்கும் நீங்க ஒத்து வர மாட்டீங்க. மாசா மாசம் பணம் கொடுத்த மாதிரி மொத்தமா ஒரு தொகை தர்றேன். இல்லை சொத்து எழுதித் தர்றேன். நிரந்தரமா என்னை விட்டு விலகிடுங்கன்னு சொன்னா"

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"எனக்குப் பணம் வேணாம். உன்னோட இணைஞ்ச வாழ்க்கைதான் வேணும்னு சொன்னேன். அதுக்கு அவ, 'என் செல்வாக்கு புரியாம பேசாதீங்க. கொடுக்கறதை வாங்கிட்டு விலகிட்டா உங்களுக்கு நல்லது. இல்லைன்னா உங்க உயிருக்கே ஆபத்து வரலாம்'னு சொன்னா. ஒரு பொண்டாட்டி புருஷனைப் பார்த்து பேசற பேச்சா சார் இது? அதுவும் காதலிச்சு வீட்டை எதிர்த்துக் கிட்டு கல்யாணம் பண்ணிக்கிட்ட பொண்டாட்டி! நான் நொந்து போயிட்டேன் சார். இப்படிப்பட்ட கேவலமான ஜென்மத்தையா அவ்வளவு தூரம் உருகி உருகி லவ் செஞ்சோம்னு என் மேலேயே எனக்குக் கோபம் வந்திச்சு!"

காசிநாதன் தண்ணீர் ஜக்கிலிருந்து கிளாஸில் சரித்து இருமின கதிரவனிடம் நீட்டினான்.

வாங்கிப் பருகி வைத்தான் கதிரவன்.

"ஆரம்பத்தில நடிக்கணும்னு அவளும் அவங்கம்மாவும் கேட்டு நிபந்தனை வெச்சப்போ, சுதாரிக்காமப் போனது என் தப்புசார்! யாரை நொந்து என்ன பிரயோசனம்? ஆனா அவ எனக்குச் செஞ்ச துரோகத்தை என்னால மன்னிக்க முடியலை சார். சம்பத்துல பத்திரிகை பேட்டிகள்ல மதுமிதா கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கப் போறான்னு போட்டி கொடுத்திருக்கிறதைப் பார்த்துட்டு நான் மறுபடி கொதிச்சுப் போய்ட்டேன். நான் ஒருத்தன் ஏமாளியானது போதாதா? அவ மூலமா வேற யாரும் ஏமாளி ஆகக் கூடாதுன்னு தீர்மானிச்சேன். எனக்கு அவகிட்டேர்ந்து ஒரு பைசாகூட சொத்து தேவையில்லை சார். உலகமே அவளைக் கொண்டாடிக்கிட்டு இருக்கு. ஆனா அவளோட சுயரூபம் என்ன, எப்படிப்பட்ட அயோக்கிய சிகாமணின்னு எல்லோருக்கும் புரிய வைக்கணும்னு தீர்மானிச்சுத்தான் உண்மைகளை சமுதாயத்துக்கு வெளிப்படுத்தறதுன்னு முடிவெடுத்தேன். முதல் கட்டமா உங்க பத்திரிகைக்கு எழுதினேன்."

"உயிருக்கு ஆபத்து ஏற்படும்னு மதுமிதா மிரட்டினதா சொன்னீங்க... இப்ப இந்த மாதிரி உண்மைகள் வெளிப்படறதால அந்தப் பயம் இப்ப இல்லையா?"

"துணிஞ்சுட்டேன். ஒரு பொண்டாட்டி கொலை விழும்னு மிரட்டறதை ஒரு மீசை வைச்ச ஆம்பளை எப்படி சார் பொறுத்துக்க முடியும்? நான் சொன்ன எல்லாத் தகவல்களையும் விபரமாப் போடுங்க சார். எழுதுங்க. அவ எப்படிப் பட்டவன்னு உலகத்துக்குப் புரிய வைங்க."

"அந்த கல்யாண ஃபோட்டோ"

"தர்றேன்."

கதிரவன் சூட்கேஸிலிருந்து எடுத்துத் தந்த புகைப்படத்தில் கல்யாணக் கோலத்தில் கதிரவனும் மதுமிதாவும் இருந்தார்கள்.

மறுநாள் வெளியான 'சினிமா புயல்' பத்திரிகையில் 'மதுமிதா ஏற்கனவே திருமணமானவரா?' என்ற தலைப்பில் நான்கு பக்கத்திற்கு சூடாக அந்தக் கட்டுரை வெளியிடப்பட்டு ஊர் முழுவதும் அதே தலைப்பில் போஸ்டர்களும் ஒட்டப் பட்டன.

(தொடரும்)

---

## கவியரசு கண்ணதாசனே கண்ணதாசனைப் பற்றி சுவையான சுய விமர்சனம்!

## நில்–கவனி–முன்னேறு

## கவியரசு கண்ணதாசன்

அவனது வாழ்க்கை அதிசயமானதுதான். எந்த ஒரு சராசரி மனிதனும் இப்படிப்பட்ட வேடிக்கையான வாழ்க்கையை மேற்கொள்ளமாட்டான். அவசரத்தில் காரியம் செய்து, சாவகாசத்தில் சங்கடப்படுவது அவனது இயற்கையான சுபாவம்.

இந்த வாரம் அவனை நான் சந்தித்த போது அவனுக்காக இரக்கப்பட்டேன். நரகம், சொர்க்கத்தை உணரத் தெரிந்த அவனுக்கு அதைத் தேர்ந்தெடுக்க மட்டும் தெரிந்திருந்தால், இவ்வளவு நீண்ட கால வாழ்க்கையில் எவ்வளவோ அற்புதங்களை அவன் சாதித்திருக்க முடியும்.

தவறுகளின் மீது நின்று கொண்டே அவற்றை மறந்துவிட அவன் முயன்றான். அதனால் அவன் நெஞ்சு அழும்போதே, வாய் சிரித்துக் கொண்டிருந்தது.

பரமஹம்ஸர் சொன்னதைப் போல, பயனற்ற வேலைகளில் ஆசையோடு ஈடுபட்டுப் பொழுதைச் செலவழித்தான். பரமஹம்ஸரின் கதை இதுதான்:

ஆறுமாதம் சிரமப்பட்டு ஒரு சீடன் நீரில் நடக்கக் கற்றுக்கொண்டானாம். கங்கையில் நடந்து அவன் கரையேறியதும், பகவான் அவனைப் பார்த்து அனுதாபத்தோடு, 'நாலணா கொடுத்தால் ஓர் ஓடக்காரன் இந்த வேலையைச் செய்து விடுவானே! இதற்காக இவ்வளவு காலத்தை வீணாக்கி விட்டாயே!' என்றாராம்.

வாழும் காலம் மிகவும் குறுகியது. செயலற்ற காலம் ஒன்று வரக்கூடும். இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு மணி நேரத்தையும் பயனுள்ளதாக்க வேண்டும்.

இவையெல்லாம் அவனுக்குத் தெரியாதவையல்ல. ஆனால் நிரந்தரமாக விளையாடப் போகிறவன் போலவே வாழ்ந்து பார்த்தான்.

அவனது அரசியல் வேடிக்கையானது. அவனது தேர்வுகள் சிரிப்புக்கிடமானவை. கடந்த முப்பதாண்டுகளாக ஒவ்வொன்றிலிருந்தும் விடுபடுவதாக நினைத்து, மேலும் மேலும் அவற்றிலேயே சிக்கிக் கொண்டான். இப்போது அஸ்தமன சூரியன் கிழக்கு வானத்தைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறது.

தான் பசுமையாக இருந்தபோது காய்த்துக் குலுங்கிய காலங்களை எண்ணிப் பார்க்கிறது. கண்ணாடியில் பார்த்தால் உருவம் இப்போது அழகாக இருக்கிறது. உள்ளம் தான் தனது பரந்த மைதானத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து விற்றுவிட்டது.

ஏக்கர் கணக்கில் இருந்த நிலம் கிரவுண்ட் கணக்கிலாகி, இப்போது செண்டுக் கணக்கில் ஆகி இருப்பது போன்ற மயக்கம்.

ஆர்ப்பாட்டங்களில் இருந்து ஒதுங்கி விட்டதாலே பெரிய கண்டங்களில் இருந்து தப்பியாகிவிட்டது. ஆனாலும் மெய்சிலிர்க்கக் கூடிய உற்சாகம் மீண்டும் எதிர்பார்க்கப் படுகிறது.

ஆற்றங்கரைகளில் துள்ளிக்குதித்து, பசுமையான மலைகளின் காற்றில் உலாவி, குற்றாலத்து அருவியிலே 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று குளித்து, 'வாழ்க்கை அற்புதமானது என்றெண்ணிய மனது' பட்டியில் அடைபட்ட ஆட்டுக்குட்டி போல் சுற்றிச் சுற்றி வருகிறது.

பாம்புக்கு பிடாரனின் கூடை வசதியாக இருந்தாலும், அது வாழ்ந்த காடுபோல் ஆகுமா?

அழகான மாளிகையின் தொட்டியில் எவ்வளவுதான் உணவுப் பொருட்கள் விழட்டுமே, ஆற்றில் கிடப்பது போன்ற சுகம் மீனுக்கு வருமா?

இரத்தத்தின் வெள்ளோட்டம் குறையக் குறைய, அந்த நாள் ஞாபகம் நெஞ்சைச் சுடுகிறது.

நான் அவனைச் சந்தித்தபோது, சிரித்துக்கொண்டே அழுதான்; அழுது கொண்டே சிரித்தான். பாவம்! இப்போது மனிதன் மாறிவிட்டான்.

ஒரு சுகமான இடைக்காலமே இப்போது அவன் வாழ வேண்டிய அவசியத்திற்குக் காரணமாகிறது. இல்லையென்றால் 'ராஜா மாதிரி வாழ்ந்தவன், சந்நியாசி மாதிரி வாழக்கூடாது' என்ற கொள்கை அவனுக்கு உண்டு.

'அதிசயங்கள் நிகழ்த்திய பெருமையோடு ஆவிபிரிந்து விட வேண்டும்,' என்பான். 'மாரடைப்பால் மரணம் என்பது கடவுள் கொடுக்கும் வரம்' என்பான்.

அவனது நிறம் இன்னும் பசுமையாகவே இருக்கிறது. அவனது கற்பனை என்ற மகாநதியில் இன்னும் வெள்ளம் நுங்கும் நுரையுமாகப் பொங்கியே வருகிறது.

ஆத்ம ராகத்தில் மெய்சிலிர்க்க, இரண்டு



கைகளையும் பின்னுக்குக் கட்டியபடி முன்னும் பின்னும் உலாவும்போது வானம் கீழே இறங்கி அவன் கால்களை முத்தமிடுகிறது.

அவனுக்கு உலகத்தில் எதுவுமே பெரிதல்ல. சம்பாதிக்கத் தெரிந்தவன்; பத்திரப்படுத்தத் தெரியாதவன். சேமிப்பு இல்லாத காரணத்தால், பல நேரங்களில் கண்ணீரையே எண்ணிப் பெட்டியில் வைக்க வேண்டியதாயிற்று.

முப்பது வருட முட்டாள்தனத்தில் அவன் சேமித்த சொத்துக்கள், அவனது எழுத்துக்களே!

அவையும் இல்லாமற் போயிருக்குமானால், பூமியில் முளைத்து நிற்கும் தூங்குமூஞ்சி மரங்களில் அவனும் ஒன்றாகி இருந்திருப்பான்.

எப்போது தன் மதத்துக்குச் சம்பந்தமில்லாத ஒன்றில் தலையிட்டானோ, அப்போது அவனது உற்சாகம் குறையத் தலைப்பட்டது. இது ஒருவகையில் தெய்வத்தின் பரிசே!

ஆயிரம் இருக்கட்டும். அவனது வாழ்க்கை வரலாறு ஓர் அற்புதமான பெருங்கதை. தனது காதல் கதைகளில் தன்னை நேசித்த பெண்களையும் தன்னிடம் அன்பு செலுத்திய உள்ளங்களையும் அவன் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறான்.

இவ்வளவு நாடகத் திருப்பங்கள் வேறு யாருடைய வாழ்க்கையிலும் நிகழ்ந்திருக்க முடியாது.

இன்றைய இளைஞர் சமுதாயம் முழுமைக்கும் எப்படி வாழக்கூடாது என்று போதிக்க அவனுக்குச் சக்தி உண்டு.

கள்ளம் கபடமற்ற அந்த வாழ்க்கையில் கங்கையின் புனிதமும் இருக்கிறது. வைகையின் வறண்ட தன்மையும் இருக்கிறது.

கடந்த ஜூன் இருபத்து நான்காம் நாள், ஐம்பத்து நான்கு வயதை எட்டிவிட்ட அந்த அதிசய மனிதனைப் பார்த்தபோது அவனது ஆதங்கங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் கடந்து, கண்களில் பரவி நின்ற தெளிவையே என்னால் காண முடிந்தது.

அவனுக்கு முதுமை வரவில்லை என்பதுபோல், அவனது உருவம் இருந்தது. தத்துவங்களுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் அவனிடமிருந்து விடைபெற என்னால் முடியவில்லை. காரணம் இது என் சுயதரிசனம்.



படிப்பகம்

www.padippakam.com

## போனஸ் சிறுகதை

# இன்னொரு பக்கம்



### க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"மாமா பொண்ணு நளினி உனக்குப் பொருத்தமாக இருப்பா. ரொம்ப நல்ல பொண்ணு"

பேஷண்ட் ஒருவரை கவனித்து அனுப்பிவிட்டு வாஷ்பேசனில் கையைக் கழுவிக் கொண்டிருந்த போது, "நான் உள்ளே வரலாமா டாக்டர்...?" என்ற குரல் கேட்க திரும்பினேன்.

புஷ்பராஜ் நின்றிருந்தான்.

நான் மலர்ந்தேன்.

"அடடே... புஷ்பராஜா...? வா..வா.. ரொம்ப நாளா ஆளையே காணோம்..."

"டில்லியில ஒரு ட்ரெய்னிங் கோர்ஸ் விஷயமா ரெண்டு மாசம் போயிருந்தேன்... அப்பாவும் அம்மாவும் மெட்ராஸ்ல இருக்கிற அண்ணன் வீட்டுக்கு போய் தங்கிகிட்டு நேற்றுதான் வந்தாங்க..."

"அப்பாவும் அம்மாவும் சௌக்கியமா இருக்காங்களா?"

"ரொம்ப ரொம்ப சௌக்கியம் டாக்டர். சௌக்கியம் இல்லேன்னா ஃபேமிலி டாக்டரான உங்ககிட்டே வந்திருப்பாங்களே...?"

நான் சிரித்து அவனை ஏறிட்டேன். "சரி... என்ன விஷயம்... காரணம் இல்லாமே இந்த ராத்திரி நேரத்துல வரமாட்டியே...?"

"டாக்டர்! ஒரு பிரச்சனை.."

"அதை உட்கார்ந்துகிட்டே சொல்லலாமே...?"

அவன் உட்கார்ந்து குரலை கீழ் ஸ்தாயிக்கு கொண்டு வந்து பேச்சை ஆரம்பித்தான். "டாக்டர்...! நான் இப்ப எம்.எஸ்.ஸி வரைக்கும் படிச்சு ஒரு நல்ல வேலையில சேர்ந்து மாசம் ஐயாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிட்டிருக்கேன். எனக்கு பொண்ணைக் கொடுக்க 'நான் நீ' என்று நிறையப் பேர் போட்டி போட்டுகிட்டு வர்றாங்க. வர்றது எல்லாமே பெரிய இடம்."

நான் புன்னகைத்தேன்.

"சரி... பிரச்சனை... என்ன...?"

"என் மாமா பொண்ணுதான் பிரச்சனை. என் மாமா ரத்னம் அன்னிக்கு காலையில வீட்டுக்கு வந்து அப்பா அம்மாகிட்டே நேரிடையாகவே கல்யாணத்தை எப்ப வெச்சிக்கலாம் என்று கேட்டுட்டார். மாமா பொண்ணு நளினிக்கு கண்ணைக் பறிக்கிற மாதிரி அழகுதான்.. ஆனாலும் வசதி கம்மி. அப்பாவுக்கும் சரி அம்மாவுக்கும் சரி அந்த வீட்டிலிருந்து பொண்ணை எடுக்க கொஞ்சம்கூட இஷ்டமில்லை."

"உனக்கு....?"

"எனக்கும் இஷ்டமில்லை..."

"சரி... உங்க மாமாவுக்கு என்னதான் பதில் சொன்னீங்க...?"

"சொந்த தாய்மாமன். பட்டு கத்திரிக்கிற மாதிரி உங்க பெண்ணைக் கட்டிக்க எங்களுக்கு இஷ்டமில்லைனு சொல்ல முடியாதே... ஏன்னா... எங்க ரெண்டு குடும்பத்துக்கும் நீங்க ஃபேமிலி டாக்டர் மட்டுமில்லை... ஒரு வெல்விஷரும் கூட...."

"புஷ்பராஜ்... நான் ஒரு விஷயம் சொல்லலாமா...?"

"என்ன டாக்டர்....?"

"மாமா பொண்ணு நளினி உனக்கு பொருத்தமான ஜோடியா இருப்பா... ரொம்ப நல்ல பொண்ணு... வசதியில்லேங்கிற காரணத்துக்காக... அந்தப் பொண்ணை வேண்டாம்னு சொல்றது தப்பு..."

"ஸாரி டாக்டர்..! வாழ்க்கையை நடத்த வெறும் அழகு மட்டும் போதாது... ஆஸ்தியும் வேணும்... என்னோட எதிர்கால வாழ்க்கை சிறப்பாக இருக்கணும்னா நீங்க அந்த பொய்யைச் சொல்லித்தான் ஆகணும் டாக்டர்..."

அதனால இப்படி சொல்லி வைப்போம்."

"எப்படி...?"

"சொந்த அக்கா பொண்ணையோ, தாய் மாமன் பொண்ணையோ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடி ஒரு டாக்டரைப் பார்த்து ஆலோசனை கேட்கிறது நல்லது. ஏன்னா.. சொந்தத்துல கல்யாணம் பண்ணினா... பிறக்கிற குழந்தைகளுக்கு ஊனம் இருக்கும்னு பேசிக்கிறாங்க... எதுக்கும் நம்ம டாக்டர்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு மேற்கொண்டு பேசுவோம்னு அப்பா சொல்லிட்டார்.."

நான் சிரித்து தலையாட்டினேன். "எனக்கு புரியுது..! நாளைக்கு காலையில உங்க குடும்பமும், மாமா குடும்பமும் சேர்ந்து என்னைப் பார்க்க வரப்போறீங்க. மாமா பொண்ணைக் கட்டிக்கலாமான்னு கேட்பீங்க.... நான் கட்டிக்கவேகூடாதுன்னு சொல்லணும்."

"அதேதான் டாக்டர்... எங்க ரெண்டு குடும்பத்துக்கும் மத்தியில் எந்த மனக்கசப்பும் வந்துடக்கூடாது. ஒரு டாக்டரான நீங்க... இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு சொன்னா.... மாமா அதை ஏத்துக்குவார்...

தோள்களைக் குலுக்கினார்.

"உன்னோட சந்தோஷத்துக்காகச் சொல்றேன்!"

புஷ்பராஜ் சென்ற அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் மறுபடியும் கதவருகே நிழல் தட்ட மெடிக்கல் மேகஸினைப் புரட்டிக் கொண்டிருந்த நான் தலை நிமிர்ந்தேன்.

புஷ்பராஜின் மாமா ரத்னம் நின்றிருந்தார்.

"வணக்கம் டாக்டர்...!"

"வாங்க.... வாங்க... வணக்கம்"

உள்ளே வந்தார். நாற்காலியைக் காட்டினேன். உட்கார்ந்தார். 'எதற்காக வந்திருப்பார்...?' மனதுக்குள் எண்ணம் ஓடியது.

'தாய்மாமன் பொண்ணை கல்யாணம் செய்து கொண்டால் எந்த தப்பும் இல்லை என்று புஷ்பராஜ் அப்பா அம்மாவிடம் நான் சொல்லவேண்டும் என்று வற்புறுத்த வந்திருக்கிறாரோ...?'

"உடம்புக்கு...?" அப்பாவித்தனமாய் கேட்டேன்.

உடம்புக்கு ஒன்றும் இல்லை டாக்டர்... நான் வந்தது வேற ஒரு பிரச்சனைக்கு..."

"சொல்லுங்க...!"

"நாளைக்கு காலையில.... பத்து மணி சுமாருக்கு நானும் புஷ்பராஜோட அப்பா அம்மாவும் உங்ககிட்ட வருவோம். தாய் மாமன் பொண்ணை- அதாவது என்னோட பொண்ணை புஷ்பராஜ் கல்யாணம் பண்ணிக்கிறது நல்லதான்னு கேட்பாங்க.... அந்த சமயத்துல நீங்க...."

நான் சிரித்து வெக்கிட்டேன்

"தாய்மாமன் பொண்ணைத் தாராளமா கல்யாணம் பண்ணிக்கலாம். பண்ணிக்கிட்டா தப்பே இல்லைன்னு சொல்லணும். அவ்வளவுதானே...?"

"இல்லை டாக்டர்...!"

"பின்னே...?"

"தாய்மாமன் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறது தப்புன்னு சொல்லணும்."

நான் அதிர்ந்து போய் அவரைப் பார்க்க அவர் குரலைத் தாழ்த்திக் கொண்டு தொடர்ந்தார். "டாக்டர்...! எம் பொண்ணு நளினி கண்ணுக்கு லட்சணமா இருக்கிறதுனால... ஒரு பெரிய இடத்திலிருந்து மாப்பிள்ளை வந்திருக்கு... எஸ்டேட்- பங்களான்னு எக்கச்சக்க சொத்து. புஷ்பராஜ் வெறும் மாச சம்பளக்காரன்தானே...? அவனுக்கு என் பொண்ணை கொடுக்க இஷ்டமில்லை. ஆனா கூடப்பொறந்த தங்கச்சிகிட்ட உன் பையனுக்கு என் பொண்ணை குடுக்க முடியாதுன்னு சொல்ல முடியுமா...? அதான் அவங்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டுடக் கூடாதுங்கிறதுக்காக கல்யாண விஷயத்தை வலிய பேசப் போனேன்... என்னோட அதிர்ஷ்டம்... உங்க கிட்ட ஆலோசனை கேட்கணும்னு சொன்னாங்க.... நாளைக்கு எல்லா ருமா உங்க கிட்ட வருவோம்... ஒரு டாக்டர் அதுவும் ஃபேமிலி டாக்டரான நீங்க சொந்தத்துல கல்யாணம் வேண்டாம்னு சொன்னா... அவங்க நிச்சயம் ஏத்துக்குவாங்க... அதனால எங்க ரெண்டு குடும்பத்துக்கும் மத்தியில் எந்த மனக்கசப்பும் வராது. எம்பொண்ணோட எதிர்கால வாழ்க்கை சிறப்பாக இருக்கணும்னா.. நீங்க அந்த பொய்யைச் சொல்லித்தான் ஆகணும் டாக்டர்...."

நான் அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளாமல் எந்திரத்தனமாய் தலையாட்டினேன்.

---

## சர்வ ஜாக்கிரதை

பஸ்ஸில் பாபுராஜின் பார்வை இந்திராணியின் கழுத்துமேலேயே இருந்தது

"என்னங்க, நான் கிளம்பிட்டேன், நீங்க புறப்பட்டாச்சா?" லவுட்ஸ்பீக்கர் போன்று வீரிட்டு வந்தது இந்திராணியின் குரல்.

"அப்பவே கிளம்பிட்டேனே"

வீட்டைப் பூட்டிவிட்டு, விசுவாசமான வேலைக்காரன் போன்று, அவளது அருகில் வந்தான் பாபுராஜ். 'சரி, புறப்படலாம்' என்பது போன்று இருந்தது அவனது பார்வை.

"ரிசப்ஷன் எத்தனை மணிக்கு?" கேட்டவாறு இந்திராணி நடக்கலானாள்.

"ஐஞ்சரை மணிக்கு!"

"கல்யாண மண்டபம் எந்த பக்கத்திலே இருக்கு? எந்த ஸ்டாப்பிங்லே இறங்கணும்னு நல்லா விசாரிச்சிட்டீங்கல்லே?"

"ஆனந்தம் கல்யாண மண்டபம். கொன்வெண்ட் ஸ்டாப்பிங்லே இறங்கணும் இந்திராணி!" பாபுராஜ் படபடவென்று ஸ்கூல் வாத்தியார் முன்பு, பாடம் ஒப்புவிக்கும் மாணவன் போன்று பதில் சொன்னான்.

இருவரும் பஸ் ஸ்டாப்பிங்கை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தனர். பாபுராஜின் பார்வை இந்திராணியின் கழுத்தில் விழுந்தது. டாலர் செயின், நெக்லஸ், இரட்டை வட செயின், ஆரம் என்று, தாலி செயினுக்கு மேல் சிறிய நகைக் கடையையே கழுத்தில் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

பார்த்த பாபுராஜுக்கு பகீரென்றது. சும்மாவே பிக்பாக்கெட் அதிகம். கழுத்தில் இப்படி நகைகளை அடுக்கிக்கொண்டு போனால், பார்க்கும் எவனுக்குத்தான் ஆசை வராது?

இதுபற்றி அவளிடம் சொன்னால், வீணாகக் கத்துவாள். சரி, பஸ்ஸில் அவளது கழுத்தை விட்டு, நமது பார்வை போகக் கூடாது. பாபுராஜ் மனதினுள் தீர்மானம் செய்துகொண்டான்.

பஸ்ஸில் பாபுராஜின் பார்வை, இந்திராணியின் கழுத்து மேலேயே இருந்தது.

கொன்வெண்ட் ஸ்டாப்பிங் வந்து விட்டது.

இருவரும் பரக்கப் பரக்க இறங்கினார்கள்.

"எப்படிப் போகணும்?" இந்திராணி வேகமாக கேட்டாள்.

"அதோ... அருள் தியேட்டர் ரோடு பக்கமா போகணும்!" இந்திராணிக்கு சுட்டிக் காட்டியவாறு, அவளது கழுத்தை, பாபுராஜ் பார்த்தான்.




'அப்பாடா... எல்லா நகைகளும் அப்படியே அவளது கழுத்தில் பத்திரமாக இருக்கிறது!'

'அப்பா... என்னா வியர்வை!' திருப்தியுடன், கழுத்திலிருந்த வியர்வையை கர்சீப்பால் துடைத்தான். துடைத்த அவனுக்கு துணுக்குற்றது.

அவனது கழுத்திலிருந்த மைனர் செயின் காணவில்லை. பஸ்ஸில் அது பறிபோயிருந்தது.

---

# வையகத்தில் காதல் எனில்...



**ஆர்.வி.சங்கர்**

"இந்த உலகத்தில் ஒன்றுமே இல்ல ராஜா. எதிர்காலத்தில் நல்லா இருப்போமென்று எல்லோரும் நம்புறாங்க"

மிக அருகில் வளைந்து வளைந்து ஆக்ரோஷமாய் சீறி வேகமாய் கடிக்க வந்த பாம்பை யாரோ தட்டிக்கொண்டு மிக சரியாகத் தாக்கியதில் பலமாய் அடிபட்டதை போல கடலில் தலைகுப்புற விழுந்தது அலை.

"இப்படியே செத்துப் போயிடலாம்னு இருக்கு ராஜா!"

"ஏன்?"

"ரொம்ப சந்தோஷமா இருக்கு. வானத்துல பாருங்க என்னுடைய 'இன்சியல்' ரொம்ப ஜாக்கிரதையா எடுத்துட்டுப்போற பறவை கூட்டம், இந்த கடல், காத்து, அதோ லேசா தெரியற நிலா. இந்தத் தனிமை எல்லாத்துக்கும்மேல நீங்க! சந்தோஷமா இருக்கு. ரொம்ப சந்தோஷமா... இந்த கடல்கூட பார்க்காம உலகத்துல எத்தனையோ பேர் செத்துப் போயிருப்பாங்க இல்ல?"

"இருக்கலாம்!... யூனிவர்சிட்டில என்ன சொன்னாங்க?"

"என்ன சொல்லுவாங்க? எல்லாத்துக்கும் கையேந்திற நாடு. யூனிவர்சிட்டில பணம் இல்லையாம். நம்ம ரெண்டு பேர்ல ஒருத்தரத்தான் அமெரிக்காவுக்கு அனுப்ப முடியுமாம். உங்க ரெண்டு பேர்ல யாரை அனுப்பறதுன்னு நீங்களே முடிவு பண்ணிக்கோங்கன்னு சொல்லிட்டாங்க!"

நாடு முழுக்க நடந்த மாணவ வழக்கறிஞருக்கான போட்டியில் இறுதியாய் வென்ற இருவர் இவர்கள்தான். வென்ற இருவரை அமெரிக்காவிற்கு அனுப்பி வைப்பது பல்கலைக்கழகத்தின் கடமை. இந்த முறை அரசியல் மாற்றங்களினாலும் ஏற்பட்டுவிட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகவும், அரசாங்கம் அவ்வளவு பணத்தைக் கல்விக்காகச் செலவு செய்ய மனம் வரவில்லை. பல்கலைக்கழகத்திடம் பணமும் இல்லை.

ராஜாவிற்கு மெல்லக் கனவு படர்ந்தது.

போட்டியில் கலந்து கொண்டாலே போதும், வென்றாலும் தோற்றாலும் அமெரிக்காவில் உள்ள 'ஹார்வேடு' யூனிவர்சிட்டியில் இடம் கிடைத்துவிடும். கார், பங்களா, முழுக்க முழுக்க வெளிநாட்டினர் தொடர்பு, அந்தஸ்து. இங்கே பத்து வருடம் கழித்துக் கிடைக்கும் பொருட்கள் எல்லாம் அப்பொழுதே கிடைத்துவிடும் வசதி! இந்த வாய்ப்பைத் தவறவிட்டால் அவள் சொல்வதைபோல கடலைப் பார்க்காமல் இறந்து போனவர்களைப்போல நான் அமெரிக்காவைப் பார்க்காமலே இறந்து போகலாம். இவளை எப்படித் தவிர்ப்பது? காதலை எப்படி மறப்பது?

அதே வேளையில் அவளும் மிகத் தீவிரமாக எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

மெல்ல இருட்டு கவிழ, கவிழ, கடற்கரையில் இருந்த கொஞ்சம் கூட்டமும் கலையத் துவங்கியது. அந்த அந்நியப்படுத்தப்படும் தனிமை தந்த பயமோ என்னவோ, இருவரின் பேச்சும் தத்துவத்திற்குத் திரும்பியது.

"இந்த உலகத்துல ஒன்றுமே இல்ல ராஜா. எதிர்காலத்துல நல்லா இருப்போம்னு எல்லாருமே நம்பறாங்க. ஆனா அவங்க நினைக்கிற எதிர்காலம் எப்ப வந்ததுன்னே அவங்களுக்கே தெரியாம பிரச்சனையில தான் வாழறாங்க!"

"இப்ப செத்தாலும் இன்னும் பத்து வருஷம் கழிச்சுச் செத்தாலும் நடக்கப்போற விஷயங்கள் எல்லாமே ஒன்னுதான், ஏதோ ஒரு விஷயத்துக்காக அப்பவும் அழப் போறோம். எதுக்கோ சிரிக்கப்போறோம். யாரோ ஒருத்தர எதிரியா யாரோ ஒருத்தரை நண்பனா ஏத்துக்கிட்டு, அது இருந்தா நல்லா இருக்கும்; இது இருந்தா நல்லாயிருக்கும்னு ஏன் இந்த வாழ்க்கை? ஏன் இப்படி?"

"தெரியல ரம்யா! நம்ம கதையையே எடுத்துக்கோயேன்! நம்ம ரெண்டுபேர்ல ஒருத்தர் அமெரிக்கா போய் என்னத்தக் கிழிக்கப்போறோம்? அங்கபோய் போட்டியில ஜெயிச்சா தலைமேல வெச்சுக் கொண்டாடுவானுங்க! தோத்துட்டம்னு வெச்சுக்க சொல்லவே வேணாம்.."

"மத்தவங்க சந்தோஷத்துக்காக நாம வாழறது இருக்கே, அதுப்போல நரகம் வேற இல்லை!"

"வாய்ப்புக்கள் வருதுன்னா எந்த கொள்கையும் எப்பவும் மாத்திக்க இங்க எல்லாருமே தயாரா இருக்காங்க. ஆனா நாம இதிலே இருந்து மேம்பட்டவங்க, நாம நிஜமா வாழப் போறோம்."

"ஆமா ராஜா! இந்த உலகத்துல எல்லாமே தப்பா இருக்கு எல்லாமே தப்பு. வாழற முறை, நிஜமில்லாத உறவு, பேச்சு, சாகவேமாட்டோம்ன்ற தைரியம் எல்லாம்! சாவுதான் நிஜம், அதுதான் எல்லாம், அது தான்! இனி எதிரியே இல்லாம, யாரையும் ஏமாத்தாம, ஏமாத்தப்படாம நாம ஒண்ணா சாவலாம் ராஜா!"

"மிக சுலபமா விடுதலை எல்லாத்திலேயும் இருந்து விடுதலை!"

இனி வாழ்வது அர்த்தமற்றது போல் இருவரும் கடலை நோக்கிக் கை கோர்த்து நடந்தார்கள்.

இறுகக் கோர்த்த விரல்களுக்குள் பயம் இருந்தது. "சாவுதான் நிஜம்! சாவுதான் நிஜம்!" என்று ரம்யா ஏதோ வெறி பிடித்தவள் போல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

கடல் அலைகள் அவர்களின் காலைத் தொட்டு இடுப்பைத் தொட்டு கழுத்துக்... தலைக்குமேல் போய் இருவரின் கையையும் பிரித்து விட்டது.

பி.கு:- நாளை தான் மட்டுமே உயிரோடு இருந்து, அமெரிக்கா போகும் வாய்ப்பைப் பெறப்போவதாய், ஒருவரை ஒருவர் மிகச் சரியாகத் தத்துவம் பேசி ஏமாற்றிவிட்டதாய் நினைத்து அந்த இருளில் இருவரும் வெவ்வேறு திசைகளில் நீச்சலடித்துக் கரையேறினார்கள்.

---

# "வில்லங்கம்"



**சிலாபம் பொ.புஷ்பராஜ்**

அன்று வேலை முடிந்து செவ்வந்தி கொழுந்துக் கூடையுடன் வீடு திரும்பினாள். வீட்டினுள் அவள் அடி எடுத்து வைத்ததுதான் தாமதம். அலமேலு செவ்வந்தியின் லயத்து காம்பராவுக்கு வேகமாக ஓடி வந்தாள்.

"என்ன அத்தை இவ்வளவு அவசரமா ஓடி வருறீங்க?"

இல்ல புள்ள செவ்வந்தி. கொழும்புல்ல இருக்கிற நம்ப மவனுக்கு ஒரு கடுதாசி அவசரமாய் எழுதணும். கொழும்பு சேதிகளை தோட்டத்து சனங்கள் ஒவ்வொருத்தரும் சொல்லுறதைக் கேட்கும்போது அந்தப் பய எந்த நேரமும் நெஞ்சுக்குள்ள வந்து வில்லங்கம் செய்யுறான் புள்ள."

"கொஞ்சம் நேரம் பொறுத்துக்க அத்தை. பீலியில தண்ணீர் வரமாட்டேங்குது. ஓடிப் போய் ஆத்துல்ல முகத்தை கழுவிக்கிட்டு ஓடி வந்துடுறேன்!"

சொன்னது போலவே செவ்வந்தியும் ஆற்றில் முகத்தைக் கழுவிக் கொண்டு விரைவாக லயத்து காம்பராவுக்கு ஓடி வந்து சேர்ந்தாள்.

"சரி இப்ப சொல்லுங்க"

"செவ்வந்தி நான் சொல்றமாதிரியே எழுதணும். எழுதுப் புள்ள"

மவன் ராமசாமிக்கு,

அம்மா அலமேலு எழுதுவது. நாங்க எல்லோரும் நல்ல சொகம். நீ எப்படி சொகமாய் இருக்கிறாயா?

உன்னை நெனைச்சா எனக்கு பயமாயிருக்கு. நேத்துராவு தூக்கத்துல செத்துப் போன உன் அப்பா கனவுல்ல வந்து உனக்கு என்னாதோ ஆபத்துன்னு சொன்னாரு. அதே மாதிரி தோட்டத்து ஆபிசில்ல வேலை பார்க்கும் கிளாக்கர் ஐயாவும் கொழும்புல்ல நம்ப பொடியன்மாருக வீதியிலகூட போக முடியாது உள்ளது. ரொம்பதான் சோதிக்கிறாங்கன்னு சொன்னாரு. இப்ப அந்தப் பயம் மேலும் மனசை உசுப்பி விட்டுருச்சு.

நீ பொங்கலுக்கு வந்தப் போதே டிக்கோயா தோட்டத்தில்ல பேர் பதிஞ்சு, வேலைக்கு போகலாம்ன்னு சொன்னேன். எங்க விட்டான் அந்த செட்டிப் பய. உன் மனசை மாத்திப்புட்டான். கொழும்புல்ல கை நிறைய நல்லா சம்பாதிக்கலாம்ன்னு பொய் சொல்லி திரும்பவும்- கொழும்புக்கு அழைச்சுக்கிட்டுப் போயிட்டான். நீ ஏமாந்து போயிட்டாய்.

நீ செட்டிப்பயலோட பேச்சைக் கேட்காம, அட்டனுல்ல நம்ப சிவனுடைய தேத்தண்ணி கடையில்ல வேலைக்கு சேர்ந்திருந்தா எனக்கு இப்ப ஒரு பயமும் இருந்திருக்காது. கொழும்புக்கு போய் எங்களையும் பயந்து வாழ வெச்சுபுட்டப்பா.

தேயிலை தூர்க்குல்ல இருந்து நம்ப இரத்தத்தை உறிஞ்சும் அட்டையைப் போல, நம்ப உயிரையே விலைபேசும் அடையாள அட்டையும் உனக்கு இல்ல. பார்க்கிற கண்ணுக்கு சவுக்குமரம் மாதிரி உயரமா வாட்ட சாட்டமா வேற இருக்கிற. கொழும்புல்ல ஏதும் அசம்பாவிதம் நடந்துட்டா பொலிஸ் புடிக்கும்ன்னு தோட்டத்து சனமே பேசிக்கிறாங்க. எனக்கு என்னாதோ மனசுக்கு நல்லதா படல்ல. எதுக்கும் நெதானமா நடந்துக்க.

-அம்மா அலமேலு-

இரவு பதினோரு மணி ராமசாமி கொழும்பு தியேட்டர் ஒன்றில் 'ஆயுத பூஜை' படத்தை திரையில் பார்த்து இரசித்துக் கொண்டு இருந்தான். கொஞ்சம்கூட கவலை இல்லாமல் கால்மேல் கால்போட்டு, லேசாய் கால்களையும் ஆட்டியப்படியே இடது கையால் சிகரெட்டை வாயில் வைத்து உறிஞ்சியப்பின் சிகரெட் புகையை சுருள் சுருளாக வட்டமாக வாயிலிருந்து ஸ்டைலாக வெளியேற்றிக் கொண்டு இருந்தான்.

திடீரென இப்போது தியேட்டர் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. படையினர் திபு, திபுவென தியேட்டருக்குள் நுழைந்தனர். எல்லோரினதும் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன. ராமசாமியிடம் அடையாள அட்டை இல்லை. தேயிலை தூள் களவெடுத்து துரையிடம் மாட்டிக்கொண்டவனைப் போல திருதிருவென முழித்தான். அவனது இதயம் படவென்று அடித்தது. அவனது பார்வையே அவனைக் காட்டிக் கொடுத்தது. அவன் ஏதேதோ நியாயம் சொன்னான். ஒன்றும் எடுபடவில்லை. படையினரால் வேனில் ஏற்றப்பட்டான்.

செட்டி ராமசாமியைப் பார்த்து சிரித்தபடியே வீதியில் நடக்கத் துவங்கினான். செட்டியின் செயலால் ராமசாமிக்கு கோபம் கொப்பளித்தது. அப்போது ராமசாமியின் விழிகளில் நீர் முட்டியது. மனதிற்குள் தன் தாயிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். இப்போது அவனது விழிகளில் இருந்து கண்ணீர் மெதுவாக கன்னத்தில் வடியத் துவங்கியது.



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

# பொய் யுத்தம்

தருவது ரசிகன்



அவன் வந்த
நேரம் முதலாக
முகம் பார்த்து
அவள் பேசவேயில்லை!

"திருவிழா காண
சேர்ந்தே போகலாம்"
சொல்லிவிட்டுப் போனவன்
விரைவிலே வரவேண்டாமோ?
அதுதான் கோபம்!

உணவு தயாராக
இருந்தது!

அவனுக்கோ
கொலைப் பசி
குடலைத் தின்றது!

அறுசுவை வாசனை
கொடுமை செய்தது!

'அழைக்க மாட்டாளா?'
வயிறு விசாரித்தது.

அவளுக்கோ
கோபத்தை உடனே
கைவிட முடியாத
பொல்லாத வாதம்
அது பிடிவாதம்!

'பாவம் பசியாக
இருப்பானே' என்றும்
உள்ளூர வருத்தம்!

ஊடல் நாடகத்தில்
இரண்டு அரங்கம்
உண்டு!

அக அரங்கம்
புற அரங்கம்!

அக அரங்கில்
நேசம்
நடை போடும்!

புற அரங்கில்
பொய் யுத்தம்
நடந்து வரும்!

பொய் யுத்தம்தான்
அங்கே
நடந்து கொண்டிருந்தது!

யார் முதலில்
நிறுத்தம் செய்வது?

ஆரம்பித்தது
அவள்தான் என்றாலும்
அதன் காரணம்
அவன் தானே!

'சமாதானம் சொன்னால்
சந்நதம் அதிகமாகுமோ'
என்று நினைத்தான்!

'சமாதானம் சொல்ல
வந்தாலாவது
சாக்காக வைத்து
பேசத் தொடங்கலாமே!'
அவள் நினைத்தாள்!

நேரம் போனதே தவிர
பொய் யுத்தம்
போன பாடில்லை!

அவனைப் பார்க்க
அனுதாபம் சுரந்தது!

தற்காலிக
யுத்த நிறுத்தத்துக்கு
அவள் முன்வந்தாள்!

"உணவு தயாராக
இருக்கிறது
விரும்பினால்
உண்ண வேண்டியதுதான்!"

அவனைப் பார்க்காமல்
அதைச் சொன்னாள்!

'அப்பாடா
மனம் கனிந்துவிட்டது!
அவனுக்குள் திருப்தி

அகத்தில்
மகிழ்ச்சி ஊறியது
புறத்தில் மட்டும்
இகழ்ச்சி காட்டினான்.

"விரும்பிப் போட்டால்
உண்ணலாம்!
வேண்டாம் என்றால்
உறங்கலாம்!"
என்றான் அலட்சியமாக!

தன் கையால்
போட்டால்தான் உண்பான்
இல்லையெனில் அவனுக்கு
செரிக்காது, சகிக்காது!
அவளுக்கா தெரியாது?!

ஆனாலும்
ஊடலை விட மாட்டாள்.
"போய் அமர்ந்தால்
படைக்கலாம்!"
என்று உரைத்தாள்!

போய் அமர்வான்
பரிமாறுவாள்!

அப்படியே அசையாது
அமர்ந்திருப்பான்!

"உண்பதற்கு என்னவாம்?"
கேலி குரலில் வரும்.

"ஊட்டி விட்டால்
உண்ணலாம்!
அமுதம் என்று
உண்ணலாம்!"
என்பான் குறும்பன்

"ஆளைப்பார்
ஆசையைப் பார்!"
என்பாள் முறைப்பாக

"எனக்கு நீ ஊட்டு
உனக்கு நான் ஊட்டுவேன்"
என்பான் கண் சிமிட்டி

அவன் கையால்
உண்ண
அவளுக்கும் ஆசைதான்!

"உதை விழும்
எதையெதை மறப்பது
என்றில்லையாக்கும்?"
என்பாள் அவள்.

"எதை மறந்தேன்
என் இராசாத்தி?
எல்லாவற்றையும்தானே
நினைவு வைத்திருக்கிறேன்!

முதல் முத்தம்-உன்
வெட்கம்!
முதல் தழுவல்-உன்
நழுவல்!
முதல் தேடல்-உன்
மறுத்தல்!"

அவன் பட்டியலிட
அவள் படபடப்பாள்.

"போதும்! போதும்
வெட்கம் கெட்ட
மனிதா!"

கவளம் கவளமாய்
உணவைப் பிசைந்து
அவனுக்கு ஊட்டுவாள்!

ஊட்டிய கையின்
விரலினைக் கடிப்பான்!

"கரும்பு கடித்தபடி
உண்பது சுவை"
என்பான் குறும்பாக!

"ஊட்டிவிடும்
உன் கைகளின் வாசனை
சுவையைக் கூட்டுதடி!"
என்று புகழ்வான்!

மறுக்க மறுக்க
கவளம் பிசைந்தூட்டுவாள்!

வயிறு புடைக்க
அறுசுவை விருந்து!

ஊடலும் முடிந்து
கூடலுக்கும் ஒத்திகை!

"எப்போது தீருமோ
என்று நினைத்தேன்!
அப்பாடா! இராசாத்தி
இப்போதே தீர்ந்ததேயடி
பொல்லாத உன் கோபம்!"

அவன் சொல்ல
அவள் நகைத்தாள்!

"பதமறிந்துதான்
பேச வாய் திறந்தேன்!"
என்றாள்

அவனுக்கு ஆச்சரியம்.
"பதமறிந்தாயோ-அது
என்ன பதமோ?"

அவள் சொன்னாள்
விளக்கம்:
"உப்பு அளவோடு
கலந்திருந்தால்தான்
உணவு சுவைக்கும்!
ஊடலை அளவோடு
நிறுத்திக் கொண்டால்தான்
வாழ்க்கை சுவைக்கும்!"

"உப்பமைந் தற்றால் புலவி
அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்"

அதிகாரம்: 131, குறள்: 1302

ஸ்போர்ட்ஸ்

## முத்தரப்புப் போட்டிகள்



அஜித் அகர்கர்

இந்தியாவில் அவுஸ்திரேலிய, ஸிம்பாப்வே, இந்திய அணிகளுக்கிடையேயான முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகள் ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 14 வரை நடைபெறுகின்றன.

இப்போட்டிகளில் பங்கேற்க இந்திய அணியில் ரொபின் சிங், அஜய் ஜடேஜா, ராகுல் சங்வி, நீண்ட நாட்களுக்குப் பின் வினோத் காம்ளி ஆகியோருடன் மும்பையின் சகலதுறை ஆட்டக்காரர் அஜித் அகர்கர் என்ற புதுமுகமும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதே வேளை ராகுல் ட்ராவிட், சௌரவ் கங்குலி, வெங்கடபதி ராஜு ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

பெங்களூரில் அவுஸ்திரேலியாவுடனான இறுதி டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் விளையாடிய கங்குலி, எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இதை இங்கிலாந்து அம்பயர் டேவிட் ஷெப்பேர்ட் அறிவித்தபோது கங்குலி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இது குறித்து கூறப்பட்ட புகாரின் அடிப்படையில் போட்டி நடுவரான பீட்டர் வேன்டெர் மெர்வ், "இந்தியாவில் நடைபெறும் முத்தரப்புப் போட்டிகளில் முதலாவது போட்டியான கொச்சியில் நடைபெறும் போட்டியில் விளையாட கங்குலியைத் தடை செய்துள்ளது." என்று கூறியுள்ளார்.

"ஒரு போட்டியில் மட்டும் விளையாட தடைவிதிக்கப்பட்ட கங்குலியை முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் விளையாட முற்றிலுமாகப் பரிசீலிக்கவில்லை" என்று இந்திய கிரிக்கெட் சபையின் செயலர் லெலெ கூறியுள்ளார்.

## மல்யுத்தத்தில் டைசன்

குத்துச் சண்டைப் போட்டியில் மிக இளம் வயதிலேயே அதிபாரக் குத்துச் சண்டை சாம்பியன் பட்டத்தை வென்றவர் மைக் டைசன்.

கடந்த வருடம் நடந்த குத்துச்சண்டைப் போட்டி ஒன்றில் இன்னொரு குத்துச் சண்டை வீரரான இவாண்டர் ஹோலிஃபீல்டின் காதைக் கடித்துவிட்டார்.

இதனால் டைசன் குத்துச்சண்டைப் போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர் குத்துச்சண்டைப் போட்டியில் கலந்து கொள்ள விதிக்கப்பட்டிருக்கும் தடை இன்னமும் நீக்கப்படாததால் மல்யுத்தம் மீது டைசனின் பார்வை திரும்பியுள்ளது.

மல்யுத்தப் போட்டிகளில் கலந்து கொள்வது குறித்து டைசன் கூறும்போது, "நான் ஆரம்பத்திலிருந்தே மல்யுத்தப் போட்டிகளின் இரசிகன். இப்போது நானே மல்யுத்தப் போட்டிகளில் கலந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. மறுபடி குத்துச் சண்டைப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு எனக்கு அனுமதி கிடைப்பதற்கு நான் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் இதுவும் ஒன்று," என்று தெரிவித்துள்ளார்.

டைசன் தற்போது பணப்பற்றாக்குறையால் கஷ்டத்தில் இருப்பதாகவும், பணத் தேவைக்காகத்தான் அவர் மல்யுத்தப் போட்டிகளில் கலந்து கொள்கிறார் என்ற பேச்சுக்கள் பரவலாக அடிபடுகின்றன.

## நான்கு நாடுகள் மோதும்

இவ்வருடம் டிசம்பர் மாதம் முதல் அடுத்த வருடம் மார்ச் மாதம் வரையிலான இடைவெளியில் இந்தியாவில் நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்திய மாநிலங்களில் ஒன்றான ஒரிஸ்ஸா கிரிக்கெட் சங்கத்தின் பொன் விழாவையொட்டி இப்போட்டிகளை நடத்துகிறது.

இப்போட்டிகளில் இந்தியாவுடன் பாகிஸ்தான், நியூஸிலாந்து, ஸிம்பாப்வே ஆகிய நாடுகளை விளையாட வைக்க, அந்தந்த நாடுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இந்தப் போட்டிகள் 9 ஆட்டங்களைக் கொண்டது. இதில் ஒவ்வொரு அணிகளுக்கிடையேயும் 6 ஆட்டங்களும், இறுதி ஆட்டங்கள் 3ம் இடம்பெறவுள்ளன.

இதற்காக 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஒரிஸ்ஸா கிரிக்கெட் சங்கத் தலைவர் பி.பி.தாஸ் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கப் படையினர் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்கும் காட்சி.

## சிந்தியா பதில்கள்

❑○

★ இன்றைய மாணவர்கள் சிலரால் ஆசிரியர் களுக்கும் கெட்ட பெயர் வருகிறதே?

கே.செந்தூரன், கொழும்பு-11.

ஓர் ஊரில் குருவும், சிஷ்யனும் இருந்தார்கள். சிஷ்யன் ஒருநாள் முயல் வேட்டைக்குப் போனான்.

ஒரு முயல் கிடைத்தது. வரும் வழியில் நெருப்பில் சுட்டு ஒரு காலைச் சாப்பிட்டு விட்டான். மீதியாக மூன்று கால்கள் இருந்தன.

அதனை கொண்டுபோய் தன் குருவிடம் கொடுத்தான். "இன்னொரு கால் எங்கே?" என்று கேட்டார் குரு.

சிஷ்யன்: "நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் இருந்தன!" என்றான்.

சிஷ்யன் பொய் சொல்லுகிறான் என்பது குருவுக்குத் தெரிந்துவிட்டது. 'சரி, இவன் சொன்னதுதான் சொன்னான், சொன்ன பொய்யை காப்பாற்றுகிறானா பார்ப்போம்'! என்று நினைத்தார்.

அப்போதைக்கு அந்த விடயத்தை ஆறப்போட்டுவிட்டு, திடீரென்று ஒருநாள் சிஷ்யனைக் கூப்பிட்டு ,"நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்?" என்று கேட்டார்.

சிஷ்யன் அசராமல், "மூன்று கால்கள்" என்றான். எத்தனை தடவை எப்போது கேட்டாலும் மூன்று கால்கள் என்று சாதித்தான்.

'சரி, சிஷ்யன் பரவாயில்லை. சொன்ன பொய்யையாவது காப்பாற்றுகிறான் என்ற முடிவுக்கு வந்தார் குரு.

இக் கதையை அறிந்த வேறொரு குருவின் சீடன் சொன்னான்: "எனக்கும் குரு இருக்கிறார். நானும் முயல் பிடித்தேன். ஆனால் குருவு டன் தகராறு வரவில்லை".

"அது எப்படி?"

சிஷ்யன் சொன்னான்: "அந்த சிஷ்யன் ஒரு காலை சாப்பிட்டுவிட்டு மூன்று கால்களைக் குருவிடம் கொடுத்ததுதானே பிரச் சனையானது. நான் அப்படி செய்யவில்லை. நாலு காலையும் நான் சாப்பிட்டுவிட்டேன். குரு விடம் போய் வேட்டையில் ஒரு முயல் கிடைத்தது அதுக்கு நாலு கால்களுமே இல்லை! என்று சொல்லிவிட்டேன்" என்றான்.

"அதை நம்பும் அளவுக்கு உன் குரு முட்டாளா?" என்று கேட்டனர்.

அவன் சொன்னான்:

"ஆமாம். அதனால்தான் அவர் எனக்கு குருவாக இருக்கிறார்."

❑○

★ இந்தியா மூன்றாவது டெஸ்ட்டில் அடைந்த தோல்விக்கு யார் காரணம்?

கி.இனியன், மாத்தளை.

இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுதான் காரணம். வேகப்பந்து வீச்சாளருக்கு சாதகமான ஆடுகளத்தில் அனுபவமுள்ள ஸ்ரீநாத்தை அணியில் இருந்து பிடுங்கிக் கொண்டார்களே!

❑○

★ தமிழ்க் கட்சிகள் அரசை எதிர்க்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

என்.காசிநாதர், வவுனியா.

இல்லை! ஒருக்காலும் இல்லை! "நாங்கள் அடிப்பது போல அடிப்போம், நீங்கள் அழுவது போல அழுங்கள்" என்று கண்டன அறிக்கை விடுவார்கள். ஆனால் ஒன்று தமிழ்க் கட்சிகளின் சொற்படி அழுவது போல்கூட அரசு நடிப்பதில்லை. அதுதான் இக் கட்சிகளது அறிக்கைகள்- அரசுடன் நடத்தும் பேச்சுக்களின் சாயங்கள் விரைவாக வெளுக்கின்றன.

❑○

★ எடுத்த காரியத்தில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?

ஆர்.உலகநாதன், திருமலை.

இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த கயிற்றை குறிபார்த்து சுட்டுக் கொண்டிருந்தனர்.

குறி தவறிக்கொண்டே இருந்தது. பக்கத்தில் நின்று விவேகானந்தர் சிரித்தபடி கவனித்துக் கொண்டிருந்தார்.

"என்ன சிரிக்கிறீர்கள்? நீங்கள் சுடுங்கள் பார்க்கலாம்!" என்றார் ஓர் இளைஞர்.

விவேகானந்தர் துப்பாக்கியை வாங்கிச் சுட்டார். குறி தவறவில்லை. இளைஞர்களுக்கு ஆச்சரியம்.

"ஏற்கனவே உங்களுக்கு துப்பாக்கி சுடும் பழக்கம் உண்டா?" என்று கேட்டனர்.



ரோஜா

"அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது. ஆனால் குறிதவறாமல் சுட முடிந்ததுக்கு ஒரு காரணம் இருக்கிறது!" என்றார்.

"என்ன காரணம்?" என்றனர்.

விவேகானந்தர் சொன்னார்:

"மனதை ஒருமுகப்படுத்தினால் சாதிக்க முடியாததை எல்லாம் சாதிக்கலாம்!" என்றார்.

★ தேவயானி, மீனா, ரோஜா நடிப்பில் யார் நம்பர் வன்?

செல்வி இ.சரோஜா, சிலாபம்.

இன்று தேவயானி.

❑○

★ இந்துக் கோயில்களுக்குள் படையினர் புகுந்தது பற்றி என்ன நினைக்கிறீர்?

ஆ.மதியழகன், மட்டக்களப்பு

படையினரைப் பற்றி நினைப்பது இருக்கட்டும்; பௌத்த தேவாலயம் தாக்கப் பட்டதை இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள் எத்தனைபேர் பாடமாக்கிச் சொல்வதுபோல தெளிவாகக் கண்டித்தார்கள்! இந்து மத கோயிலுக்குள் நடந்த அவமரியாதை பற்றி ஒரு பௌத்த மதகுருகூட வாயே திறக்கவில்லை. மருதானையில் தற்செயல் குண்டு வெடிப்பைக் கண்டித்த அமைப்புக்கூட மூச்! மனிதாபிமானமா? இன அபிமானமா?!

❑○

★ கொழும்பில் இந்து அமைப்புக்கள் இந்தியாவிடம் முறையீடு செய்தது பற்றி உமது அபிப்பிராயம் என்னவோ?

பி.சத்தியநாதன், கொழும்பு-05.

வரவேற்கத்தக்க மாற்றம்! ஆணையிட்டவர்களிடமே அருள் பாலிக்குமாறு வேண்டுகோள் விடுக்காமல், 'இவர்கள் கவனிப்பார்கள் என்று நம்பிக்கையில்லை, இவர்கள் திட்டமிட்டே செய்கிறார்கள், சுட்டிக் காட்டி என்ன பயன் என்றே உம்மிடம் வந்தோம்!' என்று வெளிநாட்டு தூதரகங்களிடம் முறையிடுவதுதான் இனிமேல் பொருத்தமாக இருக்கும்! தமிழ்க் கட்சிகள் என்று கூறப்படுபவற்றால் முடியாத காரியத்தை, செய்துள்ள இந்து மன்றங்களைப் பாராட்டுவோம்.

❑○

★ சிந்தியா! இரண்டுங் கெட்டான் என்றால் என்ன?

சி.சாந்தகுமார், கண்டி.

ஒருத்தர் இருந்தார். அவர் முன்னாடி ஒரு தட்டில் வாழைப்பழமும், ஆப்பிள் பழமும் இருந்தது. சாப்பிடாமல் யோசித்தபடியே அமர்ந்திருந்தார்.

அவரது நண்பர் ஒருத்தர் அங்கே சென்றிருந்தார். "ஏன் சாப்பிடாமல் அமர்ந்திருக்கிறீர்கள்? சாப்பிடவேண்டியதுதானே?" என்று கேட்டார்.

"சாப்பிடவேண்டியதுதான்! எதைச் சாப்பிடுவது என்று தெரியவில்லை. அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றார்.

"இவை இரண்டில் எது உங்களுக்குப் பிடிக்கும்?" என்று கேட்டார் நண்பர்.

"இரண்டும் பிடிக்கும்!"

"அப்படியானால் ஏதாவது ஒன்றை எடுத்துச் சாப்பிடுங்கள்!" என்றார் நண்பர்.

"அதுதான் இப்போது யோசனை. எதனை முதலில் எடுப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றார்.

அப்போது அவர் மனைவி அங்கு வந்தார். "இவர் எப்போதும் இப்படித்தான்! எதைத் தேர்ந்தெடுப்பது என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள் அந்த இரண்டு பழங்களும் அழுகிப்போய்விடும். அதனால் நான் ஒரு சுலபமான முடிவுக்கு வந்துவிடுவேன்!" என்றார்.

"என்ன செய்வீர்கள்?" என்றார் நண்பர். அழுகிப்போன அந்த இரண்டு பழங்களையும் எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டு விடுவேன்!" என்றார்.

பாத்தீர்களா, சரியான முடிவுக்கு வராதபடியால் இரண்டு பழங்களும் கெட்டுப் போச்!



படிப்பகம்

www.padippakam.com



# திருமறை தரும் பொது நெறி 3

ஆண்டவரின் ஆணைப்படி நோவா ஒரு பெரிய பேழையை உருவாக்கி, பெரு வெள்ளத்திலிருந்து தனது குடும்பத்தினரையும் உயிரினங்களையும் காப்பாற்றி, மீண்டும் உலகில் மனிதரும் ஏனைய உயிரினங்களும் பல்கிப் பெருகத் தூண்டுகோலானார்.

பேழையிலிருந்து வெளியேறிய அனைத்து சீவராசிகளையும் ஆண்டவர் வாழ்த்தி, பல்வேறு இடங்களுக்கும் சென்று பல்கிப் பெருகுமாறு அனுப்பிவைத்தார். அதே போல் நோவாவையும் அவர் தம் புதல்வர்களான சேம், காம், எப்பேத்து ஆகியோரையும் அழைத்து, அவரவருக்கான

## ஆண்டவரின் அன்பரான ஆபிராம்



தொழில்களையும் வகுத்துக் கொடுத்து ஆசி வழங்கினார். நோவா ஆண்டவருக்கு நன்றி கூறி பிரார்த்திப்பதற்கேற்ற பலிபீடம் ஒன்றை அமைத்து வழிபட்டார்.

சோம், காம் மற்றும் எப்பேத்து ஆகியோரும் தமக்குரிய குடும்பங்களுடன் வெவ்வேறு தொழில்களிலீடுபட்டு உழைத்து வந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் பல பிள்ளைகளைப் பெற்றனர். சந்ததிகளும் பெருகின.

நோவாவின் மூத்த மகனான சேமின் வழிவழி வந்தவர்களுள் தெராகு ஒருவராவார். இவருக்கு ஆபிராம், நாகோர் மற்றும் ஆரான் என்று மூன்று புதல்வர்கள் பிறந்தனர். இவர்கள் வாழ்ந்த இடம் ஊர் என்றும் கல்தேயர் நகர் என்றும் வழங்கப்பட்டது. தன் மூத்த மகனான ஆபிராமையும், இளைய மகனான ஆராமின் மகன் லோத்தையும் ஆபிராமின் மனைவி சாராயையும் தம்முடன் அழைத்துக் கொண்டு கானான் தேசத்தை நோக்கிச் சென்றார். ஆனால் இவர்களால் கானான் தேசம் செல்ல முடியவில்லை. இடையில் காரான் என்ற இடத்தில் தெராகு நோய்வாய்ப்பட்டு இறந்தார். இதனால் ஆபிராம் சற்றுச் சோர்வடைந்தவராக ஆண்டவரைப் பிரார்த் தித்தார்.

ஆண்டவர் ஆபிராமின் உண்மையான அன்பை மெச்சியவராக, "ஆபிராமே!- நீ நான் தேர்ந்தெடுத்திருக்கும் நாட்டுக்கு உன் குடும்பத்தாருடன் செல்வாயாக. உன் தந்தையாகிய தெராகு கானான் தேசம் செல்லவிரும்பினாரல்லவா? அவரால் அது முடியவில்லை. ஆனால் நீ கானான் தேசம் செல்லலாம். அங்கு உன் வழித்தோன்றல்கள் பல்கிப் பெருகி பெரு நிலப்பரப்பில் பரந்து வாழ்வார்கள். உன் குடும்பத்துக்கும் உனக்கும் என்றென்றும் என் ஆசிகள் உண்டு!" என்று வாக்குறுதி அளித்தார்.

### கானான் தேசம் நோக்கி

ஆண்டவரின் ஆணையினை ஏற்ற

## இராஜகுமாரன்

ஆபிராம், தன் மனைவி சாராய், தம்பிமகன் லோத்து ஆகியோருடன் புறப்படலானார். அவர்களுடைய ஆடு மாடுகளையும் பொதி சுமக்கும் கழுதைகளையும் உடைமைகளையும் எடுத்துக் கொண்டு அவர்களுடைய பணியாளர்களுடன் சென்றனர்.

ஆபிராமுக்கும் சாராய்க்கும் நீண்ட காலமாகக் குழந்தைகள் பிறக்கவில்லை. ஆனால் ஆண்டவரோ ஆபிராமின் வழித்தோன்றல்கள் பல்கிப் பெருகுவார்கள் என்று வாக்களித்தாரே! குழந்தைகளே பெற்று வளர்க்காத தம்பதியினருக்கு எவ்வாறு வழித்தோன்றல்கள் உருவாக முடியும்? இத்தகைய எண்ணம் ஆபிராமுக்கும் அவர் மனைவி சாராக்கும் அடிக்கடி தோன்றவே செய்தன. இருப்பினும் ஆண்டவர்மீது அளவற்ற அன்புடையவரான ஆபிராம் 'இறைவனின் வாக்கு என்றுமே பொய்யாகாது' என்று திடமான நம்பிக்கையுடன் இருந்தார்.

ஆபிராமும் குழுவினரும் கானான் தேசத்தை அடைந்தனர். அங்கு கானானியர் என்ற மரபினர் வாழ்ந்தனர். அந்நாட்டிலிருந்து பெத்தேலுக்குக் கிழக்கே ஒரு மலைப்பகுதியில் கூடாரம் அமைத்து ஆபிராமும் அவர் தம் குடும்பத்தவரும் குழுவினரும் தங்கியிருந்தனர். ஆண்டவரைத் துதிப்பதற்காக ஆபிராம் அங்கே ஒரு பலிபீடத்தையும் அமைத்துக் கொண்டார்.

இக்காலகட்டத்தில் ஆபிராமின் பணியாட்களுக்கும் லோத்தின் பணியாட்களுக்குமிடையில் பிணக்குகள் தோன்றின. இத்தகைய சிறுசிறு பிணக்குகள் பெரிதாகி உறவினர்களுக்கிடையில் கசப்புணர்வு வளர்வதை ஆபிராம் விரும்பவில்லை. இதனால் தனது தம்பி மகனான லோத்திடம் நிலமையை விளக்கி சமாதானமான முறையில் இரு திறத்தாரும் பிரிந்து செல்வதற்கான ஆலோசனையை ஆபிராம் தெரிவித்தார். அக்கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்காமல் லோத்து, தனது குடும்பத்தினரையும் கூட்டத்தினரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

லோத்தின் பார்வை, நீர்வளம் நிறைந்து செழிப்பாகத் தோன்றிய யோர்தான்மீது சென்றது. அங்கு சென்று வாழ்வதே சாலச் சிறந்தது என்று கருதிப் புறப்பட்டுச் சென்றார்.

### ஆண்டவரின் வாக்குறுதி

ஆபிராமை ஆண்டவர் அழைத்து, "உன் பார்வையை நான்கு திசைகளுக்கும் செலுத்திப் பார். இந்தப் பிரதேசத்தின் உரிமை உமக்கே வழங்கப்படுகிறது. உமது வழிவரும் உன் சந்ததியினர் இந்தப் பிரதேசம் முழுவதையும் நிரப்புவர். எங்கும் பரவிக் கிடக்கும் மண்ணைப் போன்று உமது சந்ததியினர் பல்கிப் பெருகுவார்கள்!" என்று வாக்குறுதி அளித்தார்.

ஆண்டவர் வழங்கிய வாக்குறுதியானது ஆபிராமை மகிழ்வடையச் செய்தது. இருப்பினும் குழந்தைப் பேறில்லாத நிலையில் வம்சத்தை விருத்தியடையச் செய்வது சாத்தியப்படுமா, என்ற சந்தேகமும் ஆபிராமையும் அவர் மனைவி சாராயையும் ஆட்டிப் படைக்காமலில்லை. இதற்கும் காரணம் இருந்தது. இருவரும் வயது முதிர்ந்தவர்களாக விருந்தனர். ஆபிராமுக்கு நூறு வயதும் சாராய்க்கு தொண்ணூறு வயதும் ஆகியிருந்தது.

ஆண்டவர் இத்தம்பதியினருக்குக் குழந்தைப் பேறு கிடைக்கும் என்று கூறியமை சாராய்க்குச் சிரிப்பையூட்டியது. "ஆண்டவர் நினைத்தால் ஆகாதது ஏது?" என்று ஆபிராம் மனைவிக்குத் தைரியமூட்டினார்.

ஆண்டவர் அளித்த வாக்குப் பொய்யாகவில்லை. சாராய் அந்த முதிர்ந்த வயதிலும் கருவுற்றார். ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. ஈசாக்கு என்று அக்குழந்தைக்குப் பெயர் சூட்டினார்கள். ஈசாக்கின் மீது தம் உயிரையே வைத்து ஆபிராமும் சாராயும் வளர்த்து வந்தனர். அவர்கள் இருவரும் குழந்தைமீது அதிக வாஞ்சை கொண்டு எப்போதும் அக்குழந்தையையே கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்த்து வந்தனர். இதனால் ஏனைய பல முக்கியமான கடமைகளையே மறக்கத் தலைப்பட்டனர். இவ்வேளையில் ஆண்டவர் ஆபிராமைச் சோதிக்கச் சித்தமானார்.

ஆண்டவர் ஆபிராமிடம், "ஆபிராமே! உன் உயிருக்கு உயிராகக் கருதிப் பேணி வளர்க்கும் உன் மகனை எனக்குப் பலியிடுவாயா?" என்று கேட்டார்.

ஆபிராம் அதிர்ச்சியடைந்தார். இருப்பினும் ஆண்டவர் அருளியதை அவர் விரும்பிக் கேட்கும்போது மறுக்க முடியுமா? சம்மதித்தார்.

### பலிக்கான ஆயத்தம்

அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து மகன் ஈசாக்கையும் அழைத்துக் கொண்டு ஆபிராம் புறப்பட்டார். மோரியா என்ற பிரதேசத்திலுள்ள ஒரு மலையின் மீதே மகனைப் பலியிடுமாறு ஆண்டவர் கேட்டிருந்தார். கழுதை ஒன்றில் மகனையும் ஏற்றிக்கொண்டு குறிப்பிட்ட இடத்தை அடைந்த ஆபிராம், ஒரு பலிபீடத்தை அமைத்தார். ஈசாக்கின் உடலைக்கீறி அதனைத் தீயிலிட்டே பலியிடவேண்டியிருந்தது. ஆண்டவருக்கு ஒரு பலி கொடுக்கப்படப் போகிறது என்பது மட்டும் ஈசாக்குக்குத் தெரியுமே தவிர, தன்னையே தன் தந்தை பலியிடப் போகிறார் என்பது தெரியாது.

ஈசாக் தன் தந்தையிடம், "அப்பா! பலியிடப்போகிறீர்கள்; கத்தியும் விறகும் வைத்திருக்கிறீர்கள்; பலிபீடமும் அமைத்துவிட்டீர்கள்; ஆனால் பலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?" என்று வினவினான். இத்தகைய ஒரு வினாவுக்கான விடையை ஒரு தந்தையால் எவ்வாறு தரமுடியும்? அவர் தனது துயரத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு, "பலிக்கான ஆட்டுக்குட்டியை ஆண்டவரே அருளுவார் மகனே!" என்றார்.

காலம் தாழ்த்தாமல் தன் மகனைக் கயிற்றினால் கட்டினார். பின்னர் அவனைத் தூக்கி பலிபீடத்தில் பரப்பியிருந்த விறகுக் கட்டைகளின் மீது கிடத்தினார். கூர்மையான கத்தியை எடுத்து தனது மகனின் உடலில் செலுத்துவதற்காக ஓங்கியபோது ஆண்டவரின் குரல் ஒலித்தது.

"ஆபிராமே, நிறுத்து! உன் மகனைக் கத்தியால் வெட்டிவிடாதே! மகன் மீது உனது பாசம்-ஆண்டவன் மீது நீ வைத்துள்ள விசுவாசத்தை விட உயர்வானதா, என்பதைப் பரிசோதிக்கவே நாம் உம் மகனைப் பலியிடுமாறு கேட்டோம். உமது இறை விசுவாசமே உயர்வானது என்பதை உமது செயல் நிரூபித்துவிட்டது!"

இவ்வாறு ஆண்டவர் மொழிந்தார். தனக்கு ஆண்டவர் வைத்த சோதனையில் சித்தியடைந்ததுடன் அவர் தம் பெரும் கருணைக்கும் பாத்திரமாகிவிட்டதை நினைந்து ஆபிராம் மகிழ்ந்தார். ஆண்டவருக்கு தனது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டார்.

ஈசாக்கு வளர்ந்து அழகான வாலிபனானான். அவனுக்கு மணம் முடித்துப் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் ஆபிராமுக்கும் சாராய்க்கும் ஏற்பட்டது. ஆனால் சாராய்க்கு அந்த எண்ணம் ஈடேறுமுதலே அவர் காலமாகிவிட்டார். தனது வாழ்நாளை முடிக்கு முன்னரே மகனின் மணக் கோலம் காண வேண்டும் என்று ஆபிராம் விரும்பி அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கினார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை ① விடை: அறிவாகிய மரத்தின் பழங்களைப் புசிக்கலாகாது.**

**பரிசு பெறுவோர்.**

1. நாகேந்திரம் இளையராஜா, முரசுமோட்டை, பரந்தன்.
2. எஸ்.எஸ். மெக்டலின், பனாவத்த ரோட், கராகொட, எட்டியாந்தோட்டை.
3. செல்வி சுபாஷினி சேவியர், புளுமெண்டால் தொடர்மாடி, கொழும்பு-13.
4. யோ. தேவன், பெரியகுளம், சொறிக்கல்முனை.
5. டிலாந்தி மணி, இல. 44. பிரதான வீதி, புத்தளை.

**திருமறை 03 வினா:- ஆபிராமின் தந்தை யார்?**

ஏப்ரல். 11க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**திருமறை 03 – தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## தமிழ்க் கட்சி 1

**கா.பூ.க: வகை, தொகை இல்லாமல் தமிழ் மக்கள் கைது செய்யப்படுகிறார்ளே, நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?**



த.கட்சி.இல 1: ஹாஹாஹா.... என்ன கேட்டீர், நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்றா கேட்டீர்? தயாராகிக் கொண்டிருக்கிறது அஸ்திரம்! கொஞ்சம் பொறும், நீரே நேரில் பார்க்கப் போகிறீர். நவீன கம்பியூட்டரில் தயாராகிக் கொண்டிருக்கிறது.

**கா.பூ.க: என் தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது. தயவு செய்து சொல்லுங்கள். அது என்ன அஸ்திரம்?**

த.கட்சி.இல 1: (சட்டைக் கொலரை தூக்கி விட்டபடி) ஆறு பக்கத்தில் அட்டகாசமான அறிக்கை. உப்பு, புளி, காரம் என்ற சகல சுவையும் கலந்து கவர்மெண்டை ஒருபிடி பிடிச்சிருக்கிறார் தலைவர். ஒரே ஒரு நிபந்தனை!

**கா.பூ.க: அது என்ன?**

த.கட்சி.இல 1: தமிழில் மட்டும் வெளியிடலாம், ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் வெளியிடக்கூடாது.

**கா.பூ.க: காரணம்?**

த.கட்சி.இல 1: அதுதான் அரசியல்... ஹாஹாஹா. ஹோ ஹோ ஹோ.

## தமிழ்க் கட்சி 2

**கா.பூ.க: எங்கும் கைது, எங்கும் பிரச்சனை, நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?**

த.கட்சி.இல 2: எங்கள் பொதுக்குழுவை கூட்டித்தான் முடிவு செய்ய வேண்டும். நேற்று இரவு 7.45 மணியளவில் அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறியும் இருக்கிறோம்.

**கா.பூ.க: எதை?**

த.கட்சிகள் இல 2: ஐயா அமைச்சரே! தமிழர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள் என்று கூறினோம்.

**கா.பூ.க: எந்த நாட்டு அமைச்சருக்கு?**

த.கட்சி.இல 2: (முறைத்தபடி) என்ன கேள்வி இது? நம் நாட்டு அமைச்சருக்குத்தான்!

**கா.பூ.க: நம் நாட்டு அமைச்சருக்கு நாட்டில் நடப்பதை நீங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? சரி, என்ன கூறினார்?**

த.கட்சி.இல 2: அக்கறையோடு காது கொடுத்துக் கேட்டார்.

**கா.பூ.க: அது எப்படித் தெரிந்தது?**

த.கட்சி.இல 2: நான் கூறிக்கொண்டே இருந்தேன், குறுக்கே ஒரு வார்த்தை கூட பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தார். இடைக்கிடையே ஏதோ வித்தியாசமான சத்தங்கள் கேட்டன. உணர்ச்சிவசப்பட்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

**கா.பூ.க: ஒருவேளை குறட்டை விட்டிருப்பாரோ?**

த.கட்சி.இல 2: சேச்சே... அவர் தங்கமானவர். கண்கள்கூட கலங்கிவிட்டன தெரியுமா?

**கா.பூ.க: தொலைபேசியில் பேசும்போது கண்கள் கலங்கியதை எப்படி கண்டீர்கள்?**

த.கட்சி.இல 2: ஹி.ஹி.ஹி... மன்னிக்க வேண்டும், பழக்க தோசத்தால் வாய் தவறிக் கூறிவிட்டேன்.

## தமிழ்க் கட்சி 3

**கா.பூ.க: தமிழ் மக்களை இப்படி பாடாய் படுத்துகிறார்களே, உங்கள் நடவடிக்கை என்ன?**

த.கட்சி.இல 3: உடன் நடவடிக்கை எடுக்கத்தான் துடியாய் துடித்தோம். ஃபக்ஸ் மெஷின் துரோகம் செய்துவிட்டது. இன உணர்வு இல்லாத ஃபக்ஸ் மெஷினை உடைத்தெறிந்து எங்கள் தன்மான உணர்சியை காட்டியிருக்கிறோம்.

**கா.பூ.க: (குழப்பமாக) என்ன ஃபக்ஸ் மெஷின் துரோகம் செய்துவிட்டதா? எப்படி?!**

த.கட்சி.இல 3: கண்டன அறிக்கை ஒன்றை கச்சிதமாகத் தயாரித்து, கையொப்பமும் இட்டு, ஃபக்ஸ் மெசினில் போட்டு பத்திரிகைக்கு அனுப்ப நித்திரையின்றி உழைத்தோம். கடைசி நேரத்தில் பாழாய்ப்போன ஃபக்ஸ் மெஷின் துரோகம் செய்துவிட்டது.



**கா.பூ.க: நேரில் கொண்டு சென்று கொடுக்க வேண்டியதுதானே?**

த.கட்சி.இல 3: அதற்கிடையே மற்ற தமிழ்க் கட்சிகள் கொடுத்துத் தொலைத்துவிட்டால், அவர்கள் அறிக்கை முன் பக்கத்தில் வரும். எங்களுடைய அறிக்கை உட்பக்கத்தில் வரும். அது மரியாதையாக இருக்காது. நாங்கள் சீனியர் கட்சி.

## தமிழ்க் கட்சி 4

**கா.பூ.க: கைதுகள் பற்றி அறிந்தீர்களா?**

த.கட்சி.இல 4: அறிந்தோம் அறிந்ததும் எங்கள் ஆழ்ந்த கவலையை ஜனாதிபதிக்கு தெரிவித்து தந்தி அனுப்பியுள்ளோம். இதோ தந்தியின் நகல். அசல் அங்கே! நகல் இங்கே! விரைவில் தீர்வு வரும்! சிறைக் கதவுகள் திறக்கும்! ஜனாதிபதியை சந்திக்க உள்ளோம்! அப்போது அவரை சிந்திக்க வைப்போம்!

**கா.பூ.க: உங்கள் கருத்தை அவர் ஏற்காது விட்டால்?**

த.கட்சி.இல 4: அது எப்படி உங்களுக்குத் தெரியப்போகிறது? அவர் என்ன சொன்னார், நாங்கள் என்ன கேட்டோம், அவர் என்ன தந்தார் என்றெல்லாம் உங் களுக்கு செய்தி தரப்போவதே நாங்கள் தானே! ஹாஹாஹா...



## தமிழ்க் கட்சி 5

த.கட்சி.இல 5: மிஸ்டர் கந்தசாமி, நீர் என்ன கேட்கப்போகிறீர் என்று தெரியும். பதில் என்ன, பட்டியலே ரெடியாக இருக்கிறது. படிக்கிறேன் கேளும். "மாண்புமிகு அமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் ஆறு மணி நேரம் சந்தித்து உரையாடினோம்.

**கா.பூ.கா: சந்திக்க காத்திருந்த நேரத்தையும் சேர்த்துக் கூறுகிறீர்கள்போல் இருக்கிறது.**

த.கா.இல.5: குறுக்கே பேசாதேயும். நாங்கள் இன்னமும் ஆயுதங்களைக் கீழே போடவில்லை. நாங்கள் தரும் செய்தியை போட்டால் போதும். அல்லது மண்டையில் போடுவோம்.

**கா.பூ.கா: அப்படியானால் சரி, நானே செய்தியைக் கூறுகிறேன் கேளுங்கள். "அமைச்சர்களுடன் சந்திப்பு. கைதுகள் பற்றி கடும் கவலை கவனிப்பதாக அமைச்சர் உறுதி!"**

த.க.இல.5: சபாஷ் சரியான தலைப்பு. முன்பக்கத்தில் தடித்த கொட்டை எழுத்தில் போடுங்கோ.

**கா.பூ.க: அரிசி ஆயிரம் மூட்டை நிவாரணமாக வழங்க அமைச்சர் உத்தரவாதம் தந்துள்ளார். வன்னிக்கு லொறிகளில் மட்டுமல்ல, கவச வாகனங்களிலும் உணவு அனுப்ப ஏற்பாடு. தேவைப்பட்டால் விமானங்களும் பயன்படுத்தப்படும் என்றார் அமைச்சர். அப்போது குறுக்கிட்ட எமது கட்சித் தலைவர்: "அரசுக்கு அதிக நஷ்டம் ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. லொறிகளில் மட்டும் அனுப்பினால் போதும்" என்று கூறினார்.**

த.க.இல.5: ஆஹா ஆஹா... உமது திறமைக்கு நீர் எங்கள் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளராக இருக்கலாம். வருகிறீரோ?

**கா.பூ.க: நான் என்ன அத்தனை அழகாகவா இருக்கிறேன்? (மெல்ல நழுவுகிறார்)**

**'ஓஹோ ஓஹோ மனிதர்களே**
**ஓடுவதெங்கே சொல்லுங்கள்.**
**உண்மையை வாங்கிப்**
**பொய்களை விற்று**
**உருப்பட வாருங்கள்!'**

**காதிலை பூ கந்தசாமி**




படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# பெரிதிலும் பெரிது




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

↓ முன்பெல்லாம் கட்டடங்கள் கட்டி முடிக்க பல மாதங்கள், வருடங்கள் ஆகும். அந்தளவுக்கு மிக்க நிதானமாக, பாடிப்பாடி கட்டி முடிப்பார்கள்.

இப்போது வேக யுகம். அதற்கேற்ப கட்டடங்களும் வேகமாகக் கட்டப்பட்டு வருகின்றன. போன மாதம் பார்த்த போது பொட்டல் வெளியாக இருந்தது, இப்போது மாடிக்கட்டடம் வந்துவிட்டதே என்று ஆச்சரியத்தில் வாய்பிளக்க வேண்டி இருக்கிறது.

நம் நாட்டில் கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களில் மளமளவென்று புதிது புதிதாக கட்டடங்கள் முளைத்து எழுந்து நிற்கின்றன. யுத்தம் இல்லாவிட்டால் கொழும்பில் இன்னமும் பெரிய பெரிய வானை உரசும் கட்டடங்கள் தோன்றியிருக்கும்.

↑ ஓவியங்கள் பலவகை. பிரமாண்டமான சுவர் ஓவியங்கள், திரை ஓவியங்கள் போன்றவற்றை கண்டிருப்பீர்கள்.

ஆனால், இங்கே இருக்கிறது பாருங்கள், இதுதான் உலகில் மிகப் பிரமாண்டமான திரை ஓவியம். நன்றாக கவனித்துப் பாருங்கள், பன்னிரண்டு மாடிக் கட்டட உயரத்தில் இருந்து தொங்கவிடப்பட்டிருக்கிறது. என்ன பிரமிப்பாக இருக்கிறதல்லவா. அது தான் உலக சாதனை. எந்தளவுக்கு முயற்சி செய்திருப்பார்கள் என்று நினைத்துப் பார்த்தால் பிரமிப்பு பன்மடங்காகும்.

இந்த பிரமாண்ட திரை ஓவியத்தை ஒருவர் இருவரல்ல, மூவாயிரத்தி முன்னூறு ஜப்பான் மாணவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கினார்கள். 11ம் நூற்றாண்டில் ஜப்பானில் இரு அரசுகளுக்கு இடையே ஏற்பட்ட யுத்த காட்சிதான் வரையப்பட்டுள்ளது.

1996ல் ஜப்பானில் நடைபெற்ற பனிக்கால விழாவில் இந்த உலகசாதனை திரை ஓவியம் தொங்கவிடப்பட்டிருந்தது. பார்வையாளர்கள் பிரமித்து நின்றுவிட்டனர்.

# சாதனைக் கல்லு



வேகமாக கட்டடங்களை அமைக்கும்போது கவனமும், திறமையும் தேவை. இல்லாவிட்டால் சீட்டுக்கட்டுமாதிரி பொலபொலத்து விழுந்துவிடும்.


தற்போது கட்டடக் கலைஞர்களுக்கு பல நாடுகளில் போட்டிகள் வைக்கிறார்கள். போட்டிகளும், ஊக்குவிப்புகளும் திறமையை கூர்தீட்டும் அல்லவா. அதற்குத்தான்.

இங்கிலாந்தில் பிட்ஸ்பேக் நகரில் கட்டடங்களுக்கு பதிக்கும் கற்களை வைத்து ஒரு போட்டி நடத்தப்பட்டது. அதிவேகமாக கற்களை பதிக்க வேண்டும். இப்போட்டி 1995 ஜூலை 18ம் திகதி போட்டி நடைபெற்றது.

பல நூற்றுக்கணக்கான கட்டட கலைஞர்கள் பங்குபற்றினார்கள். அவர்களில் வெற்றி பெற்றதுமல்லாமல் உலக சாதனையும் படைத்தார் கேரி லவ்குரோவ்.

2 கிலோ எடையுள்ள 872 கற்களை 60 நிமிடங்களில் துரித வேகமாகவும் கச்சிதமாகவும் பதித்து உலக சாதனை படைத்தார். நம்நாட்டு கட்டடக் கலைஞர்களும் முயன்று பார்க்கலாம்.

# பெரு வளைவு



↑ நுழைவாயில் வளைவுகள், வரவேற்பு வளைவுகள் என்பவற்றைப் பார்த்திருப்பீர்கள். நகரங்களின் எல்லைகளில் நுழைவு வாயில் வளைவுகள் அமைக்கப்பட்டிருப்பது உண்டு.

உலகில் உள்ள நுழைவாயில் வளைவுகளில் மாபெரிய வளைவு அமெரிக்காவில் உள்ளது. அதன் தோற்றத்தையே காண்கிறீர்கள்.

அமெரிக்க மிசௌரி மாநிலத்தில் உள்ள சென்லுயிஸ் பிரதேசத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. 192 மீட்டர் பிரதேசத்தை இவ்வளைவு உள்ளடக்கியுள்ளது. இதன் உயரமும் பிரமாண்டம், 192 மீட்டர்.

1965 அக்டோபர் மாதம் 28ம் திகதி இந்த பெருவளைவு கட்டி முடிக்கப்பட்டது. செலவு எவ்வளவு தெரியுமா? 3 கோடியே 90 இலட்சம் அமெரிக்க டொலர்கள். இதன் பெயர் மேற்குக்கான நுழைவாயில். இதில் உள்ள மற்றொரு சிறப்பு யாதெனில், துருப்பிடிக்காத இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.

# சேகரிப்பு



↑ உரோமாபுரியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சென்பீட்டர்ஸ் தேவாலயத்தைப் போன்று அலுமினியத்தினால் உருவாக்கப்பட்ட மாதிரியின் படம்தான் இது. இதனை இரத்தம் மற்றும் உடலுறுப்புகளைத் தானம் வழங்குவதற்கான அமைப்புகள் சேர்ந்து உருவாக்கின.

இதனை உருவாக்க பட்டபாடு இருக்கிறதே சொல்லி விளங்காது. பல இலட்சக் கணக்கான அலுமினிய வெற்று டப்பாக்களை சேகரித்தனர். அதற்கே பல காலம் பிடித்ததாம். இலட்சோப இலட்சம் டப்பாக்களையும் ஒரே இடத்தில் குவித்தனர். மாபெரும் கடல்போலாகி விட்டது. அந்த டப்பாக்களின் அலுமினியம் மூலமே இந்த மாதிரி வடிவ தேவாலயம் உருவாக்கப்பட்டது. இது ஒரு உலகசாதனை. இதுவரை அலுமினியத்தால் இப்படியான மாதிரி வடிவம் உருவாக்கப்படவில்லை.

தேவைக்குப் பயன்பட்டது போக மீதியாய் இருந்த டப்பாக்கள் கடல்போல காட்சி அளிப்பதைப் பாருங்கள். அதிக அலுமினிய வெற்று டப்பாக்கள் ஒரே இடத்தில் இவ்வாறு சேகரிக்கப்பட்டதும் உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாத காலம் இவை காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும். பின்னர் அலுமினியம் ஏலத்துக்கு விடப்படும். இதில் கிடைக்கும் வருமானம் இரத்தம் மற்றும் உடலுறுப்பு தானம் செய்யத் தூண்டும் பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்படும்.

# ஓய்வு



← தலைச் சிறந்த விக்கெட் கீப்பர்களில் ஒருவர் டேவிட் றிச்சர்ட்சன். தென்னாபிரிக்க அணியின் பலமான தூண். விளையாடியது போதும் என்று சமீபத்தில் இவர் முடிவெடுத்து அறிவித்தபோது கிரிக்கெட் இரசிகர்களுக்கு மகா மகா கவலை.

இன ஒதுக்கல் காரணமாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலகிய பின்னர் அந்த அணி விளையாடிய 42 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றார். அந்த 42 டெஸ்ட் போட்டிகளிலும் 1359 ஓட்டங்களையும் குவித்தார். அந்த 42 டெஸ்ட் போட்டிகளில் மட்டும் 150 கட்சுகளையும், 2 ஸ்டம்ப் அவுட்டுக்களையும் செய்து தென் ஆபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் சாதனையாக தன் பெயரை இடம்பெறச் செய்துவிட்டார்.

தென்னாபிரிக்க அணிக்கு ரிச்சர்ட்சனின் ஓய்வு இழப்புத்தான். "38 வயதின் பின்னரும் விளையாடிக் கொண்டே இருந்தால் உடல் நிலை என்னாவது? ஓய்வு காலத்தை ஜாலியாக கழிக்கப் போகிறேன்" என்கிறார் றிச்சர்ட்சன்.

# முதலாவது பிறந்த தின வாழ்த்து



## இனிய மகள் தளிரினி

மானிப்பாய் நவாலியைச் சேர்ந்த திருநாவுக்கரசு-லிங்கேஸ்வரி தம்பதியரின் இனிய மகள் தளிரினி தனது முதலாவது பிறந்ததினத்தை 28.03.98 ல் சுவிஸ் சூரிச்சிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, அக்கா, [illegible], பிறவீன்-பிறேன் அண்ணாமாரோடு, சித்தப்பா குடும்பத்தினர், மஞ்சு அக்காவோடு ஜோன்சன் மாமா, காந்தன் மாமா குடும்பத்தினர், ஜெயா-ராஜா- ஆனந்தன்-நேசன்-சலீம்- நல்லா மாமாமார், குகன்- திருச்செல்வம்- விந்தன் மாமாமார் குடும்பத்தினர், இலண்டன் விந்தன் அண்ணா, ஜேர்மன் கிருபா அண்ணா, இத்தாலி ஞானம்மாமா, தாயகத்திலுள்ள புவனேஸ்வரி அத்தை, குஞ்சு அத்தை மாமா, அப்பப்பா, அம்மம்மா, பெரியம்மாமார் குடும்பத்தினர், அனைவரும் 'ஞானியில் நிமிர்ந்து தளிர்மகளே நீ வாழ்க' என்று வாழ்த்தி மகிழ்கிறார்கள்.



படிப்பகம்